உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 06 செவ்வாய்க்கிழமை (23.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 270



03

மீண்டும் வேட்டியை மடித்துக்கட்ட வைக்காதீர்



09

ரணிலுக்கு எதிராக விசாரணை



25

மழை பெய்தும் தப்பவில்லை இந்தியா

# படையினர் - பொதுமக்கள் இடையே நாவாந்துறையில் நேற்றிரவு அடிதடி

## இராணுவ வாகனங்கள் அடித்து நொருக்கப்பட்டன; மக்களை விரட்டி விரட்டித் தடியடி

## திரண்ட கூட்டத்தைக் கலைக்க துப்பாக்கிச் சூடு; யாழ். நகரில் பெரும் பதற்றம்

– அலுவலகச் செய்தியாளர் ராஜ் சிவராமலிங்கம் –

நாவாந்துறை, ஓகஸ்ட் 23

**யாழ். நகரில் நேற்று இரவு படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையே திடீரென ஏற்பட்ட முறுகல் நிலை அடிதடியாக மாறியதில் இருவர் காயமடைந்தனர். இராணுவ வாகனங்கள் அடித்து நொருக்கப்பட்டன. அங்கு கூட்டம் கூடிய மக்களை பொலிஸாரும் இராணுவத்தினரும் விரட்டி விரட்டிக் கொட்டன்களால் தாக்கினர். பதிலுக்கு பொதுமக்கள் கற்களாலும் கையில் கிடைத்த பொருள்களாலும் படையினரைத் தாக்கினர். இதனை அடுத்து கூட்டத்தைக் கலைக்க படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.**

இரவு 9 மணியளவில் சென். நீக்கலஸ் சனசமூக நிலைய மைதானத்தில் மக்கள் திரள ஆரம்பித்தனர். ஓட்டோ ஒன்றில் வந்த நபர்கள் சிலர் திருட முயற்சித்தார்கள் என்றும் வீட்டவர்கள் சுதாகரித்துக் கொண்டதும் தப்பிச் சென்றனர் என்றும் பரவிய தகவல்களை அடுத்தே மக்கள் அங்கு திரண்டனர் என்று கூறப்படுகிறது.

மக்கள் பதற்றத்துடன் திரண்டதை அடுத்து உடனடியாக அந்த இடத்துக்கு படையினர் அனுப்பப்பட்டனர். அவர்களுக்கும் அங்கு கூடியிருந்த இளைஞர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

அந்தச் சமயத்தில், தப்பிச் சென்ற திருடர்கள் இராணுவ முகாமுக்குள் புகுந்தனர் என்று செய்தி பரவ ஆரம்பித்ததால் பதற்றம் அதிகரித்து படையினர் மீது மக்கள் கற்களை வீச ஆரம்பித்தனர்.

இராணுவத்தினர் வந்த வாகனமும் அடித்து நொருக்கப்பட்டது.

பக் 27



படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் அடிதடி ஆரம்பிப்பதற்கு முன்னதாக சென் நீக்கலஸ் மைதானத்தில் இராணுவத்தினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் சிலர்.

## வீடுவீடாகப் புகுந்து நள்ளிரவில் ஆள்களை பிடித்துச் சென்றனர்

**அச்சத்தில் உறைந்து போய் இருப்பதாக மக்கள் வாக்குமூலம்; படையினர் மீது குற்றச்சாட்டு**

யாழ்ப்பாணம், ஓக. 23

நாவாந்துறையில் நேற்றிரவு ஏற்பட்ட அசம்பாவிதத்தைத் தொடர்ந்து நள்ளிரவில் வீடுவீடாகச் சென்ற படையினர் ஆண்களைப் பிடித்துச் செல்கின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் தொலைபேசியில் உதயன் பத்திரிகைக்குத் தகவல் தெரிவித்தனர்.

வீடுகளுக்குள் புகும் இராணுவத்தினர் அங்கிருப்பவர்களைத் தாக்குகின்றனர் என்றும் மக்கள் தெரிவித்தனர். எனினும் இதனை சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை. கூச்சலும் அலறலும் நள்ளிரவில் தொடர்ந்து கேட்பதாக தொலைபேசித் தகவல்கள் தெரிவித்தன.

''பக்கத்துவீட்டில் பெண் ஒருவர் அலறும் சத்தம் கேட்கிறது. ஆண்களைப் பிடித்து இழுத்து சென். நீக்கலஸ் மைதானத்துக்குக் கொண்டு செல்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் வீட்டின் மறைவிடம் ஒன்றில் பதுங்கி இருக்கிறேன்'' என்று தகவல் சொன்னார் ஒருவர்.

''மக்கள் அச்சத்தில் உறைந்து போய் இருக்கின்றனர். வீடுவீடாகச் சென்று ஆண்களைப் பிடித்துச் செல்கிறார்கள் என்று எங்களிடம் முறையிடுகிறார்கள். என்ன செய்வது என்றே தெரியவில்லை. அந்தப்

பக் 27

## சரவணபவன் எம்.பிக்கு நேற்றிரவு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 23

நாவாந்துறையில் நேற்றிரவு பொதுமக்கள் படையினரால் தாக்கப்பட்டதாகச் செய்தி அறிந்து நள்ளிரவில் அங்கு செல்ல முயன்ற தனக்கு பொலிஸார் அனுமதி மறுத்து விட்டனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் குற்றஞ்சாட்டினார்.

''பொதுமக்களிடம் இருந்தும் பொது அமைப்புக்களிடம் இருந்தும் தொடர்ச்சியாக வந்த அழைப்புக்

பக் 27

## பிரபாவின் வீடு படைகளால் எச்சம் கூட இன்றி துவம்சம்

**இரவோடு இரவாகப் வல்வையில் அநாகரிகம்**

யாழ்ப்பாணம், ஓக. 23

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பிறந்து வளர்ந்த, வல்வெட்டித்துறையில் உள்ள அவரது வீட்டை நேற்று இரவோடு இரவாகப் படையினர் இடித்து அழித்து இருந்த இடம் தெரியாது அகற்றி உள்ளனர்.

இரவு 10.15 மணியளவில் பிரபாகரனின் வீட்டுக்கு இரண்டு டிப்பர்கள், ஒரு பெக்கோ இயந்திரம் சகிதம் வந்த படையினர் நள்ளிரவு வரை இடிபாடுகளை அகற்றிக் கொண்டிருந்தனர் என்று வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

பிரபாகரனின் வீடு ஏற்கனவே இராணுவத்தினரால் இடித்து உடைக்கப்பட்டிருந்தது. தெற்கில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் அதனைப் பார்ப்பதில் ஆர்வம் காட்டியதைத் தொடர்ந்து வீடு உடைக்கப்பட்டது.

தற்போது வீட்டின் இடிபாடுகள் அத்திபாரத்துடன் கிண்டிக் கிளறி அகற்றப்பட்டுள்ளன. அந்த இடத்தில் ஒரு வீடு இருந்த இடமே தெரியாது செய்யப்பட்டுள்ளது.

பக் 27

## வடமராட்சியிலும் மக்கள் பதற்றம் ராணுவத்தினருடன் முறுகல் நிலை

கரவெட்டி, ஓக.23

கரவெட்டி, பொலிகண்டி, கரகத்தான்புலம் பகுதியில் நேற்றிரவு பெரும் அமளிதுமளி. அங்கு ஒரு வீட்டில் நேற்று இரவு சுமார் 9.15 மணியளவில் முகத்தில் துணியைக் கட்டிக்கொண்டு மூவர் பிரவேசித்தனர். அவர்களைக் கண்டு வீட்டார் கத்திக் குழறியதும் அங்கிருந்து ஓடி பின்புறமாக உள்ள வளவுக்கு

பக் 25

## நாட்டின் பாதுகாப்பு இன்று மனநோயாளர்களிடம்: மாவை

நாட்டின் பாதுகாப்பு இன்று மனநோயாளர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனால் பல விபரீதங்கள் ஏற்படலாம் என எச்சரிக்கை செய்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயலாளருமான நாடாளு மன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா.

நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர்களின் பணி ஆரம்ப நிகழ்வில் பிரதம உரையாற்றியபோதே அவர் இப்படிக் குறிப்பிட்டார். அரசினால்

பக் 27

## களவாக நாடு திரும்பிய மூவர் கைது

யாழ்ப்பாணம்,ஓக.23

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமதாக இலங்கைக்குள் நுழைய முயன்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்யதுள்ளனர். கைது செய்யப்பட்ட மூவரும் கிளிநொச்சியைச் சொந்த இடமாகக் கொண்டவர்கள்.

இந்தச் சம்பவத்தில் தர்மலிங்கம் (ஜஸ்ரின் வயது - 23), அவரது மனைவி ராஜேஸ்வரி (வயது-23) இவர் குழந்தை (வயது-4) ஆகிய மூவருமே கைது செய்யப் பட்டவர்கள் ஆவர். இது தொடர்பாக மேலும்

பக் 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழைக்கான சாத்தியம் உள்ளது.

# வடக்கில் ஜனநாயகத்தின் நிலை, மனித உரிமை தொடர்ந்தும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்

## குகநாதன் மீதான தாக்குதலையும் கண்டிக்கிறது 'வெள்ளிக்கிழமை அரங்கம்'

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணத்தில் உள்ளூர் அரச தேர்தல்கள் நடைபெற்று வாரங்கள் கழிந்த பின்னரும் குறிப்பாக வடக்கிலும் பொதுவாக முழு நாட்டிலும் பிரச்சினையினை உருவாக்கும் ஜனநாயகத்தின் நிலை, மனித உரிமைகளின் பராமரிப்பு மற்றும் அரசியல் முனைவாக்கம் குறித்து தொடர்ந்தும் அக்கறைக் கொண்டுள்ளது 'வெள்ளிக்கிழமை அரங்கம்' குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவின் சார்பில் ஜயன் தனபால கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

ஜூலை மாதம் 29ஆம் திகதி மாலையில் உதயன் மீதான நாளாந்தப் பத்திரிகையின் செய்தி ஆசிரியரான ஞானசுந்தரம் குகநாதன் கெடூரமான தாக்குதலைத் தெட்டத்தெளிவாகக் கண்டிக்கின்றோம். குகநாதன் அவர்கள் மீது இரண்டு நபர்களால் மேற்கொள்ளப்பட்ட இரும்புக் கம்பித் தாக்குதலின் விளைவாக ஏற்பட்ட கடும் காயம் குற்றவாளிகள் தீங்கிலிருந்து விலகி நிற்பதை வெளிக்காட்டுவதுடன் வடக்கில் அச்சத்தின் காலநிலையினால் யுத்தத்தின் பின்னரான ஒப்புரவு நடவடிக்கைகள் புறக்கணிக்கப்படுதலின் தொடர்ச்சியையும் காட்டுகின்றது. கேட்டுக் கொண்டதன் பிரகாரம் அறிக்கையினை ஜனாதிபதியிடம் விரைவாக கையளித்த பொலிஸ் மா அதிபரின் நடவடிக்கையினை நாம் பாராட்டும் அதேவேளை, இது விரைவான நியாயத்துக்கு இட்டுச் சென்றால் ஒழிய இது நடைமுறையிலுள்ள சட்ட ஆட்சியில் உள்ள நம்பிக்கையினை குறைக்கும் ஓர் வழமையான நடவடிக்கையாக ஏற்பட்டு விடும் என்ற அச்சத்தினை ஏற்படுத்துகின்றது.

குகநாதன் மீதான அண்மையத் தாக்குதலானது, யுத்தக் காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தாக்குதல்கள் மற்றும் யுத்தத்தின் பின்னர் காலத்துக்குக் காலம் ஏற்படும் தாக்குதல்களின் தொடர்ச்சி என நாம் காணல் வேண்டும். உண்மையில், உதயன் பத்திரிகை நிருபர்கள் தாக்குதலுக்கு உள்ளாவது இது முதல் தடவையன்று. 2006 மே மாதமன்று, ஆயுதம் தாங்கிய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மிகவும் கொடூரமான தாக்குதல்களின் ஒன்றில் உதயன் பத்திரிகை ஊழியர்கள் இருவர் சுட்டுக் கொள்ளப்பட்டதோடு, குகநாதன் அவர்களே மயிரிழையில் தப்பினார். இந்தத் தாக்குதல்களும் நீண்ட காலமாக பத்திரிகையாளர்கள் மீதான வேறும் பல தாக்குதல்களும் குற்றவாளிகள் தண்டனையில் இருந்து விலகியிருக்கும் கலாசாரம் உருவாவதற்கு பங்களித்துள்ளது. பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள் பாரிய மனித உரிமை மீறல்கள் மட்டுமல்லாது இவை பத்திரிகையாளர் சுயதடுப்பின் மூலம் பொது மக்களுக்கிடையில் நிலவும் வன்முறைக்கெதிரான பதிலை கட்டுப்படுத்துவதாக அமைவதுடன் பரந்தளவில் கூறுவதாயின் முரண்படுதலை அமைதிப்படுத்துகின்றது.

செய்தி வெளியீடு மற்றும் செய்தித்தாளின் செய்தி விதம் குறித்து நாம் முரண்பட்டிருந்தாலும் அவர்களின் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தினை நாம் ஆதரித்தல் வேண்டும். பத்திரிகையாளர்களைப் பராமரித்தல் நிலையான ஜனநாயகத்தினை உருவாக்குவதற்கான அடிப்படை முக்கியத்துவம் என்பதை நாம் நினைவுபடுத்த வேண்டுமா? உண்மையில், ஏனைய தேர்தல்களைப் போன்றே உள்ளூர் அரசாங்க தேர்தல்களும் ஜனநாயகத்தின் ஒரு கோணமேயாகும். ஊடகம் மற்றும் மற்றைய பொதுக் கூட்டங்களில் விவாதங்கள், தேசம் மற்றும் சமுதாயத்தினை ஆயுத கலாசாரமில்லாதிருத்தல் மற்றும் மக்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பாரிய அரசியல் செயற்பாட்டில் மக்களின் பங்களிப்பினை பெறல் போன்றவை ஜனநாயக சமூகத்தின் முக்கிய பாகங்களாகும். இத்தகைய ஜனநாயக உரிமை வழங்கல்களை பாதிப்பது, குறிப்பாக யுத்தத்தின் பின்னைய நிலையில், தேசிய ஒப்புரவுக்கும் நாட்டின் எதிர்கால அரசியல் நிலைபாட்டுக்கு கேடு விளைவிப்பதாகவும் அமையும்.

இறுதியாக, அச்ச காலநிலையின் பிரகாரம் மட்டுமன்று, உள்ளூர் அரச தேர்தல்களின் வெளிப்பாட்டின் பிரகாரமும், தெற்குடன் வடக்கினை ஒப்பிடும் போது, தேர்தல்களில் பெறப்பட்ட வித்தியாசமான முடிவுகளும் வித்தியாசமான அரசியல் சம்பத்துக்களும் அரசியல் முனைவாக்கம் உள்ளதாகக் காட்டுகின்றது. இத்தகைய முனைவாக்கம், இலங்கையின் பல்வேறு சிறுபான்மை சமூகத்தினரின் உண்மையான துயரங்களுக்கு விரைவில் பதிலளிக்கும் முகமாக அரசியலமைப்புச் சார்ந்த தீர்வினை பெறக் கூடிய நம்பகம்மிக்க அரசியல் செயற்பாட்டுக்கு உடனடியாக செயற்படுவதற்கான காரணத்தினையும் காட்டுகின்றது. இத்தகைய நம்பகமிக்க அரசியல் செயற்பாடு, அவசரகாலத்தினை தகர்த்தல், ஆயுதமில்லாதொழித்தல், பத்திரிகையாளர்கள் உள்ளடங்களான அனைவரினதும் மனித உரிமைகளை பேணுதல்போன்றன நாட்டின் ஜனநாயகம் மற்றும் யுத்தத்தின் பின்னரான பல்லின சமுதாயத்தின் எதிர்காலத்துக்கும் தேவையானவையாகும் - என்றுள்ளது.

இந்தக் குழுவில், உள்ளடங்குவோர்:

ஜயந்தன் தனபால, பேராயர் டுலிப் டி சிக்கேரா, பேராசிரியர் அர்ஜூன் அளுவிகார, பேராசிரியர் சாவித்திரி குணசேகர, அகிலன் கதிர்காமர், லங்கா நேசையா, கே.சி. வெலியமுன, கலாநிதி விஸ்வலிங்கம், கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன, கலாநிதி கமீனா குணரத்ன, கலாநிதி தீபிகா உடகம, திருமதி சித்தி திருச்செல்வம், திருமதி மனோரி முத்தெடுவேகம, திருமதி டமாரிஸ் விக்கிரசேகர, செல்வி. தமாரிஸ் விக்கிரசேகர, திருச்சந்திரன், பிரசான் டி வைசர், கலாநிதி தேவநேசன் நேசையா, டனேசன் காசிட் செட்டி, சந்திரா ஜெயரத்ன.(த)

COLOMBO STOCK EXCHANGE
பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
389/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
ஆவணி 22, 2011
பங்குச்சந்தைச்சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,928.03↓
மிலங்கா(MPI) 6,292.35↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 2,378.44Mn
பங்குகளின் அளவு(No.) 84.33Mn
வியாபாரம்(No.) 22,744
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
மீறம பீச் 300.00
ஆசிரி சென்றல் 217.50
எச்.வி.எ 39.70
றீவ் கொம்பா(w) 24.40
ஈஸ் வெஸ் 51.40
குறைவு(Top 5 losers) - விலை Rs.
பேறுவல வோக் 176.00
ஈ பி கிரேசி 2200.00
செரன்டிப் ஹொட்டல்(x) 19.90
பி எம் பி 21.00
குறுவிற்ற 28.10
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# பெண்ணுக்கு நீதிவான் அபராதம்

தென்மராட்சி, ஓக. 23

நீதிமன்றில் வழக்கு முடிந்து கையோடு நீதிமன்ற திறந்த மண்டபத்தினுள் இருந்தவாறு - வெளியேறமுன் - மறுதரப்பினரைத் தகாத வார்த்தைகளால் பேசிய பெண்ணுக்கு நீதிமன்றில் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பிரஸ்தாப இந்தப் பெண்ணைக் கைது செய்த நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தர் எஸ். நிசாந்த நீதிமன்றினை அவமதித்ததாக குற்றஞ்சாட்டி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து கந்தசாமி கல்யாணி என்ற பெண்ணை ஆஜர் செய்தார்.

குறித்த பெண் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிவான் மா. கணேசராஜா பெண்ணுக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

(த-207)

# டில்லிக்கு கல்விச் சுற்றுலா; 20 மாணவர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 23

ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா மூலம் புதுடில்லி செல்வதற்கு நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 20 பேரையும் ஆளுநர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இந்த சந்திப்பு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆளுநர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தில் 12 வலயங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மேற்படி நிகழ்வுக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு-

யாழ்ப்பாண வலயம்- ஆன் வின்சல அன்ரனி வின்சன் (வேம்படி மகளிர்), சண்முகலிங்கம் குருபரன் (யாழ். இந்துக் கல்லூரி), ரூபன் சயிந்தன் (யாழ். இந்துக் கல்லூரி),

வலிகாமம் வலயம் - சர்மினி விக்னராஜா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), திருமூர்த்தி சேந்தன் (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி), சங்கீதா சிவானந்தசோதி (இராமநாதன் கல்லூரி).

வடமராட்சி வலயம் - தங்கவேல் திவாகர் (ஹாட்லிக் கல்லூரி),

தென்மராட்சி வலயம் - தர்மராசா தர்சிகன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி),

தீவக வலயம் - யமுனா அரியபுத்திரன் (தியாகராஜா ம.ம.வி).

கிளிநொச்சி வலயம் - தெய்வேந்திரன் இந்துஜா (கிளி/ முருகானந்தா ம.வி), பாலகுமார் அட்சயன் (கிளி/பரந்தன் இந்து. ம.வி).

முல்லைத்தீவு வலயம் - இருதய நாதர் எல்வி (முல்லைத்தீவு ம.வி)

துணுக்காய் வலயம் - குலசிங்கம் பிருந்தா (பாலி நகர் ம.வி).

மடு வலயம் - செபஸ்தியாம் பிள்ளைசசிகரன் (அடம்பன் ம.ம.வி).

மன்னார் வலயம் - ஏ.ஏ.எப். அக்ஷா (றிஷாட் பதியுதீன் ம.வி), இலங்கராசன் லனுகா (சென். சேவியர் மகளிர் கல்லூரி).

வவுனியா வடக்கு வலயம் - சோமசுந்தரம் நிறஞ்சன் (புதுக்குளம் ம.வி).

வவுனியா மேற்கு வலயம் - விஜிதா விக்னேஸ்வரன் (இரம்பைக்குளம் மகளிர் ம.வி), மகூப் யோசப் ஹமீஷ் (தமிழ் மத்திய ம.வி), லக்கமலி பிரியதர்சினி (ஸ்ரீ.சுமண ம.வி) ஆகிய மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள வட மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். மாணவர்களுடன் பெற்றோர் அல்லது பொறுப்பாசிரியர் ஒருவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஒ-10)

# முல்லைத்தீவு அதிபர்கள், ஆசிரியர்கள் சுயவிவரக் கோவைகள் சேகரிப்பு

## உடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 23

முல்லைத்தீவு வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமைபுரியும் அதிபர்கள், ஆசிரியர்கள் இதுவரை தமது சுயவிவரக் கோவைகளைப் பூரணப்படுத்த தவறி இருந்தால், அவர்கள் வலய அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பூரணப்படுத்துமாறு கல்விப் பணிப்பாளர் எஸ். கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

கடந்த கால போர் அனர்த்தங்களால் அலுவலக உத்தியோகத்தர்களின் சுயவிவரக் கோவைகள் யாவும் முற்றாக அழிவடைந்துள்ளதால் மீளவும் அவற்றைச் சேகரிக்கும் நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதுவரையில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் மட்டுமே தமது சுயவிவரங்களை ஒப்படைத்துள்ளனர். எனவே இதுவரை பதிவு செய்யாதவர்களும், பதிவு செய்யத் தவறியவர்களும் உடனடியாகத் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதிவுகள் நாளை புதன்கிழமை கரைதுறைப்பற்று கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்தவர்களுக்கும், நாளை மறுதினம் வியாழக்கிழமை புதுக்குடியிருப்பு கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்தவர்களுக்கும் காலை 9 மணிமுதல் முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையில் இடம்பெறும் என்று பணிப்பாளர் தெரிவித்தார்.

(ஒ-313)

# அறநெறி ஆசிரியருக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக. 23

சிவத்தமிழ் அறநெறிப் பாடசாலையின் ஆசிரியர்களாக தேர்ந்தெடுக்கப்படவுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 75 பேருக்கான செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தின் ஏற்பாட்டில் கோயில் வீதியிலுள்ள இந்து மாமன்ற வடபிராந்திய மண்டபத்தில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு இந்தச் செயலமர்வு ஆரம்பமாகிறது. (த-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வேட்டியை மடித்துக் கட்ட வைக்காதீர்!

## கரைச்சிப் பிரதேச சபை நிகழ்வில் சிறீதரன் எம்.பி. எச்சரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச சபைத் தலைவர், உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் நேற்றுத் தமது பணிகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்தனர்.

கிளிநொச்சி, விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையின் பின், பிரதேச சபை உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மங்கள வாத்திய இசையுடன் எமது மக்கள் புடைசூழ கரைச்சி பிரதேச சபை அலுவலகத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

சபை முன்றலில் தேசியக் கொடியை கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபர் எம்.நீல் தளுவத்தையும் பிரதேச சபைக் கொடியை பிரதேச சபைத் தலைவர் குகராஜாவும் ஏற்றி வைத்தனர்.

நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், எஸ்.சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன், வலிகாமம் தெற்கு பிரதேசசபைத் தலைவர் தியாகராசா பிரகாஷ் வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவர் சுகிர்தன் வவுனியா நகர சபை உபதலைவர் நந்தன் கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சில்வா கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொதுமக்கள் தொடர்பு அதிகாரி அரீப்டீன் உட்படக் கல்விமான்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் சனசமூக நிலையங்கள் மற்றும் ஆலயங்களின் பொறுப்பாளர்களும் பொதுமக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வேலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தெரிவித்தவைகள்:

**பிரபாகரனின் பெயரை வரலாற்றில் இருந்து நீக்கிவிட முடியாது**

ஆசியுரை வழங்கிய அருட்திரு துரைரட்ணம் தனது உரையில் தெரிவித்ததாவது:

''வீரம் விளைந்த இந்த மண்ணில் மீண்டும் ஒளிக்கீற்று தென்பட்டுள்ளது. அதுதான் தமிழ் மக்களின் இலட்சிய நோக்கான தமிழ்த் தேசியத்துக்குக் கிடைத்த வெற்றி. கரைச்சி பிரதேசசபையின் வெற்றி இதனை உறுதிப்படுத்துகின்றது.

கடந்த 30 வருடங்களாக தமிழர்கள் புலியின் பின்னும் சிங்களவர்கள் சிங்கத்தின் பின்னும் சென்றனர். இவ்வாறு தமிழர்களும் சிங்களவர்களும் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

கடந்த மூன்று தசாப்தங்களில் நாம் முகம் கொடுத்த பிரச்சினைகளும் பேரழிவுகளும் கணக்கிட முடியாது. நமது காலத்தில் கிளிநொச்சி வரலாற்றுச் சிறப்புமிக்கது.

தமிழர்களின் கலாச்சாரமும் பண்பாடும் பாதுகாக்கப்பட்ட பூமி இது. பெண்ணுரிமை மறுக்கப்பட்ட ஒரு பூமி. ஆனால் இன்று அவை கேள்விக் குறியாகி விட்டன.

இந்த மண்ணின் வரலாற்றில் பிரபாகரனின் பெயரை அழித்துவிட முடியாது. புத்த பெருமானின் புனிதமான தர்ம சக்கரத்தில் குறிப்பிட்டதுபோல ஜனநாயக வழியில் அனைவரையும் அரவணைத்து ஒரு முன் உதாரணமாக கரைச்சி பிரதேச சபை விளங்க வேண்டும்-என்றார்.



**பொலிஸ் நிலையம் வர வன்னி மக்கள் அச்சம்**

பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல் தளுவத்த தெரிவித்ததாவது:

போரின் பின் பொதுமக்கள் பொலிஸ் நிலையத்துக்கு வர அஞ்சுகிறார்கள். அந்த உறவு பலவீனப்பட்டுள்ளது.

நான் 1985 ஆம் ஆண்டில் கிளிநொச்சியின் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்தேன். அப்போது சிட்டிகள் கமிட்டி மிகவும் பலமுள்ளதாக இருந்தது. ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் அல்லது எமது மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் இந்த சிட்டிகள் கமிட்டியினர் பொலிஸ் நிலையங்களுக்கு வந்துவிடுவார்கள். பிரச்சினைகள் தீரும்வரை பொலிஸ் நிலையங்களை விட்டுப் போகமாட்டார்கள். இப்படியான ஒரு நல்லுறவு மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டம் வளம் மிக்க பிரதேசம். இங்கே இயற்கை வளங்கள் சூறையிடப்படுகின்றன. பெரும் செல்வமான காடுகள் அழிக்கப்படுகின்றன. நான் இங்கு வந்து சில மாதங்களே ஆகின்றன. அண்மையில் ஒரு முறை இரண்டு லட்சரூபா பெறுமதியான மரங்களும் இரண்டாவதாக ஐந்து லட்சரூபா பெறுமதியான மரங்களும் கடத்தப்பட்ட போது பொலிஸாரால் பிடிக்கப்பட்டன.

இந்தக் கடத்தல் சம்பவங்களில் தமிழர்களும் சிங்களவர்களும் சேர்ந்தே ஈடுபட்டுள்ளனர். எவராக இருந்தாலும் குற்றம் குற்றம் தான். இப்படியான சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்க பிரதேசத் தலைவர் உட்பட அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

**தமிழரின் இரத்தம் மட்டுமா பரிசுத்தமானது?**

செல்வம் அடைக்கலநாதன் தனது உரையில் தெரிவித்ததாவது:

இன்று கிறீஸ் பூத மர்மம் ஒரு தொடர்கதையாக நீள்கின்றது. இவர்கள் தமிழ்பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் பெண்களின் மார்பகத்தை மட்டுமே காயப்படுத்திச் செல்கின்றனர். கேரளாவில் கிடைத்த பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான புதையல் போன்று இங்கும் ஒரு பெரும் புதையலை எடுக்க இளம் பெண்களின் இரத்தம் ஒரு அதிகாரம் மிக்கவரின் பணிப்பின் பேரில் தான் சேர்க்கப்படுவதாகவும் வதந்தி அடிபடுகிறது. அப்படியானால் தமிழ் மக்களின் இரத்தம் மட்டுமே புனிதமானதும் பரிசுத்தமானதும் என்று இவர்கள் உறுதிப்படுத்துகின்றாரா?

இந்த அரசு கடைசிவரை அவசரகாலச் சட்டத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மாயை தான் இந்த கிறீஸ் பூதம் - என்றார்.

**பொறுமைக்கும் எல்லையுண்டு வேண்டாம் அரச பயங்கரவாதம்**

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்ததாவது:

அடாவடித்தனமும் அரச பயங்கரவாதமும் ஒழிக்கப்பட வேண்டும். சிவில் நிர்வாகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எங்களுடைய வெற்றிக்குப் பின் பெரும் தியாகங்கள் இருக்கின்றன. அடக்குமுறைகளும் அடாவடித்தனங்களும் அரச பயங்கரவாதமும் தலைவிரித்தாடியபோதும் எமது மக்கள் துணிச்சலாக வாக்களித்து வெற்றி பெற வைத்துள்ளனர்.

எமது ஜனநாயகப் போராட்டத்துக்கு மக்களே எமக்குக் கவசமாக இருக்கிறார்கள். இன்று பொலிஸார் சுயமாக செயற்பட முடியவில்லை? தேர்தல் தினத்தன்று எமது ஆதரவாளர் ஈ.பி.டி.பியினால் கடுமையாகத் தாக்கப்பட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் முன்பாகவே அவர் தாக்கப்பட்டார். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும் தாக்கியவர்களின் பெயர்கள் பதியப்பட்டும் கூட இன்றுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அரசுக்கு வால் பிடிக்கும் ஈ.பி.டி.பி அமைச்சரின் உத்தரவுக்கு பயந்தே பொலிஸாரும் செயல்படுகின்றனர். பொறுமைக்கும் எல்லையுண்டு மீண்டும் வேட்டியை மடித்துக் கட்டும் நிலை உருவாக்கக் கூடாது - என்றார்.

**சர்வாதிகாரி ஆளுநர்**

நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவித்ததாவது:

இன்று வடமாகாணத்தில் இடம்பெறும் அராஜகச் செயல்களுக்கு எல்லாம் ஆளுநரே காரணம். ஆளுநர் ஒரு இராணுவ அதிகாரி. அவருக்கு ஜனநாயக நிர்வாக முறை தெரியாது. தேர்தலின் பின் அவர் ஒரு சர்வாதிகாரியாகவே மாறிவிட்டார்.

தனக்குப் பக்கப்பாட்டுப் பாடக்கூடிய பென்சனியர்களையே ஆளுநர் தனது அலுவலகத்தில் குவித்துவைத்துள்ளார். சேவை நீடிப்புடன் அல்லது குத்தகை அடிப்படையில் அவர்களைத் தம்முடன் வைத்துள்ளார்.

ஆனால் உண்மையாகப் பணிபுரியும் அதிகாரிகளை தடவெடியாக இடமாற்றம் செய்கிறார். வீட்டுக்கு அனுப்புகிறார். இந்த ஆளுநரின் அட்டகாசத்தால் அரச அதிகாரிகள் புலிக் கூண்டுக்குள் இருப்பது போல் அஞ்சி அஞ்சியே பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் எமது மக்களின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றை நடத்திய சாதாரண ஆசிரியர் ஒருவருக்கு எதிராகப் பொலிஸ் முறைப்பாடு செய்யும்படி உத்தரவிட் டுள்ளார்- என்றார். (உ-02, 06, 426)

### கல்முனை மாநகர சபைத் தேர்தல்

## தமிழரசுக் கட்சியின் வேட்பு மனுத்தாக்கல்

அம்பாறை, ஓக.23

கல்முனை மாநகர சபைக்கான தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் நியமனப்பத்திரங்கள் இன்று அம்பாறை தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமர்பிக்கப்படவுள்ளன.

தமிழரசுக்கட்சியின் அம்பாறை மாவட்டத் தேர்தல் முகவரும் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் வில்லியம் தோமஸ் தலைமையில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரான கு.ஏகாம்பரத்தைத் தலைமை வேட்பாளராகக் கொண்ட 25வேட்பாளர்கள் இந்தத் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர். (ஒ-30)

பணிநிலை வேண்டுகை

கணினி பக்க வடிவமைப்பாளர் (ஆண்)
Graphics Designer
அனுபவமுள்ளவர்கள் மட்டும்

கணினி தட்டெழுத்தாளர் (பெண்)
Typesetter
அனுபவமுள்ளவர்கள் மற்றும் பயிலுனர்கள்

நேரச்சு பழகுனர் (ஆண்)
Offset Machine Helpers (KORD)

புத்தகம் கட்டுனர் (பெண்)
Book Binder
அனுபவமுள்ளவர்கள் மற்றும் பயிலுனர்கள்

லெமினேற்றிங் மெசின் இயக்குனர் (பெண்)
Laminating Machine Operator
அனுபவமுள்ளவர்கள் மற்றும் பயிலுனர்கள்

சிற்றூழியர் (பெண்)
Labourer

விண்ணப்பதாரிகள் ஓகஸ்ட் 23, 24 ஆம் திகதிகளில் நேரில் வரவும்
நேரம் : மு.ப. 9.00 மணி - பி.ப. 3.30 மணிவரை

கரிகணன் பிறிண்டேர்ஸ்
(விரிவாக்கல்)
424 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஒக.23

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ''வாக்குக்கு அருணகிரி'' எனும் தலைப்பில் சிவமாலிங்கம் நிகழ்த்தும் சிறப்புச் சொற்பொழிவும் ஒல்லுடை ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை, சித்திரமேழிஞான வைரவர் அறநெறிப்பாடசாலை, சங்கானை நிற்சாமம் ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை ஆகியன பங்குபற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ம-313)

* * *

யாழ்ப்பாணம், ஒக.23

யாழ்.சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் பிரம்மசாரி ஜாக்கிரத் சைத்தன்ய "நம்மால் முடியும் நம்பு" எனும் தலைப்பில் சிறப்புச் சொற் பொழிவை நிகழ்த்தவுள்ளார். (ம-313)

* * *

யாழ்ப்பாணம், ஒக.23

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் செல்வி தனசொரூபி நவரத்தினம், கே.குகபரன், எஸ்.துரைராசா, என் சதீஸ்குமார் ஆகியோர் பங்குபற்றும் தெய்விக இசையரங்கு இடம்பெறவுள்ளது. (ம-313)

* * *

யாழ்ப்பாணம், ஒக.23

நல்லூர் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதின குருமூர்த்த ஆலய மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு "கம்பராமாயணம்'' பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் ''அனுமன் தூது'' எனும் தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா இசைப் பேருரையை நிகழ்த்துவார். (ம-313)

* * *

யாழ்ப்பாணம், ஒக.23

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் இளைஞர் யுவதிகள் பங்குபற்றும் நடன நிகழ்வு இன்று மாலை 6.30 மணியளவில் நல்லை ஆதின மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் அன்ரே டினேஸ் கலந்து கொள்வார். (ம-23)

* * *

யாழ்ப்பாணம், ஒக.23

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் ஆலய திருவிழாவை முன்னிட்டு ஆன்மீக சொற்பொழிவுகளை நடத்தி வருகின்றன. நல்லூரில் அமைந்துள்ள 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் 6.30 மணிக்கு இடம் பெறும் ஆன்மீக சொற்பொழிவில் இன்று செவ்வாய்க்கிழமை .''வேதமும் வேள்வியும்'' எனும் தலைப்பில் சைவப் புலவர் ஏ.அனுசாந்தன் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ம-311)



திருநெல்வேலி ''சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்'' நிலையத்தின் சிறுவர் மகிழ்களமும் நாடக ஆற்றுகைப் பட்டறை நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன. (ம-313)

# வவுனியாவிலிருந்து நல்லூருக்கு வேல் யாத்திரை இன்று ஆரம்பம்

நல்லூர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திரு விழாவை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை வவுனியா வேப்பங்குளத்தில் இருந்து வேல்நடை பாதயாத்திரை ஆரம்பமாகவுள்ளது.

வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் நிர்வாகி அறநெறிச் செல்வி. கு.ஜெயராணி தலைமையில் வேல் தாங்கிய குழு தேர்த் திருவிழாவன்று காலை 8மணிக்கு நல்லூரை வந்தடையும். இந்தப் பாத யாத்திரைக்குழு வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்திலிருந்து புறப்பட்டு வவுனியா- மன்னார் வீதியூடாக வேப்பங்குளம் சித்தி விநாயகர் ஆலயம், குருமன் காடு காளி அம்பாள் ஆலயம், வைரவப் புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயம், வவுனியா கந்தசுவாமி ஆலயம் ஆகியவற்றுக்குச் சென்று ஏ-9 வீதியூடாகத் தாண்டிக்குளம், புளியங்குளம், கனகராயன்குளம், மாங்குளம், கிளிநொச்சி, பரந்தன், பளை ஊடாக நல்லூர் ஆலயத்தை வந்தடையும்.

இந்தப் பாத யாத்திரையின் போது பாதையிலுள்ள ஆலயங்களில் விசேட பஜனைகளில் ஈடுபடுவர். இதில் விரும்பிய அடியவர்களும் பங்குபற்றலாம் என்று ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. முதற்தடவையாக இது இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-313)

**தென்னங்கானி விற்பனைக்கு**

உசன் மிருசுவில் பகுதியில் வளமுள்ள தென்னங்கானி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0771263760

**GULF LUBRICANTS - DEALERSHIPS**

**We Seek suitable Dealers in Northern and Eastern provinces to sell world renowned GULF LUBRICANTS. Good Prospects. Our Representative Will be in Jaffna on 24 th August 2011.**

**Please call 077 251 0710 / 077 299 7777 or Fax 011 2501749 for appointments.**

**GULF LUBRICANTS**
Western Auto Lanka (Pvt) Ltd.
34 A,Sulaiman Avenue,
Colombo 05

(C/3161)

## மரண அறிவித்தல்



### மயில்வாகனம் முத்துத்தம்பி

(இளைப்பாறிய ஆசிரியர்)

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும், தற்போது வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் முத்துத்தம்பி (ஓய்வு பெற்ற ஆசிரியர் சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாசாலை, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) அவர்கள் 19.08.2011 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற பூதப்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் கனகமணியின் அன்புக்கணவரும் ரஞ்சினிதேவி (கனடா), வரதராஜன் (சுவிஸ்), சுமனா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிருதிவிராஜ், அமிர்தா ஆகியோரின் அன்பு மாமனும் விஜித்தன், துவாரகன், கிருத்திகன், சுவேதா, பிரணவி ஆகியோரின் பேரனும். தர்மலிங்கம் (மலேசியா) கனகசுந்தரம் (கொழும்பு), சிவலிங்கம் (கொழும்பு), சிவயோகமலர் (லண்டன்), திலகவதி (கொழும்பு) ஆகியோரின் சகோதரரும், தர்மலிங்கம் சிவஞானம்பாள் (மலேசியா), கனகசுந்தரம் பரமேஸ்வரி (கொழும்பு) சிவலிங்கம் சரஸ்வதி அம்மாள் (கொழும்பு), காலஞ்சென்ற திருஞானசுந்தரம், மகாதேவன் (கொழும்பு), நடராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.08.2011) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு பொறளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் நடைபெற்று மாலை 4 மணியளவில் கனத்தை மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/1 - 5/4
ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

(C/3162)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

6 ஆம் ஆண்டு | 6 ஆம் ஆண்டு | 6 ஆம் ஆண்டு



அசோக்குமார் செல்வராணி
மலர்வு-10. 05 . 1970



அசோக்குமார் நிவினந்தன்
மலர்வு-06.10.1992



அசோக்குமார் நிவாஜனி
மலர்வு-13.12.1993

உதிர்வு : 28.08.2005 திதி: (23.08.2011)

ஆண்டு ஆறு போனாலும் ஆறவில்லை எம் கவலை
தீரவில்லை எம் துயரம் என் உடன் பிறப்பே உமை எண்ணி
நித்தம் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்

குருபரன் தொலைத்தொடர்பகம்,
காரைப் மந்தி, சுவெட்டி, தொ.பே :021 - 226 3606

உங்களை நினைத்துக் கண்ணீர் விடும்
அன்புச் சகோதரன் சகோதரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இம்சை தரும் எதிர்மறையான போக்கு

கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் படையினரும் பொலிஸாரும் சேர்ந்து வீடுவீடாகத் தேடுதல் நடத்தி வருகின்றனர். அத்தோடு அங்கு வசிப் போரின் விவரங்களையும் திரட்டிச் சென்றுள்ளனர். நீண்ட காலத்தின் பின்னர் இத்தகைய தேடுதல் வேட்டை அதிகாலை தொடக்கம் அடுத்த நாள் நண்பகல் வரை நடத்தப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை, செங்கலடி, கரடியனாறு, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, களுதாவளை, பட்டிப்பளை, வெல்லாவெளி மற்றும் பல பிரதேசங்களிலும் திருகோணமலையில் குச்சவெளி மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் படையினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையிலும் மக்களைப் பதிவுசெய்விலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

அத்தோடு நிறுத்தவில்லை. படுவான்கரைப் பகுதியில் படையினர் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டுள்ளனர். மகிழடித்தீவு மற்றும் பல கிராமங்களில் புதிய சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டுள்ளதோடு பல இடங்களில் திடீர்ச் சோதனைகளும் நடத்தப்பட்டன.

மேற்குறிப்பிட்ட தகவல்கள் எதனை வெளிப்படுத்துகின்றன?

இரண்டே கால் வருடங்களுக்கு முந்திய மூன்று தசாப்த காலமாக கிழக்கில் (வடக்கிலும் தான்) நிலவிய போர்க்காலச் சூழ்நிலையும், படையினரால் மக்கள் மக்களாக அன்றி, மாக்கள் போன்று மனிதாபிமானமற்ற முறையில் நசித்து இம்சிக்கப்பட்டதையுமே அவை மனக்கண் முன்னே கொண்டு வருகின்றன.

கிழக்கில் ''கிறீஸ் பூதங்கள்'' என்ற மர்ம மனிதர்கள் மக்களுக்கு எதிராக, மிகக்குறிப்பாக பெண்கள் மீது உடலியல் ரீதியாக மேற்கொண்டு வரும் அக்கிரமமான இம்சைகள் மக்களின் ஊனை உருக்கும் வேளையில், மீண்டும் போர்க்காலச் சூழ்நிலையைத் தரவிறக்கம் செய்துள்ளது அரசாங்கம்.

''கிறீஸ் பூத'' இம்சைகளால் உள, உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு நொந்து, நொய்ந்து, நொடிந்து போயிருக்கும் முஸ்லிம், தமிழ்ப் பெண்களை- மக்களை மேலும் காயப்படுத்தி, புண்படுத்தும் விதத்தில்-

மட்டக்களப்பில்- கிழக்கில்- இப்போது உருவாகியுள்ள மர்ம மனிதர்களின் பிரச்சினையைக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருவதற்காகவே படையினரும், பொலிஸாரும் இணைந்து சுற்றிவளைப்பு, இரவில் வீடு வீடாகத் தேடுதல், பதிவு மேற்கொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகக் காரணம் காட்டியிருக்கிறார் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர்.

மர்ம மனிதர்களின் - கிறீஸ் பூதங்களின் - அக்கிரமத்தால், அட்டூழியத்தால் - பீதியும் பதற்றமும் அடைந்துள்ள மக்களிடமிருந்து அவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, அவர்களை மேலும் இம்சைப்படுத்துவதன் மூலம் எவ்வாறு அவர்களின் ஏக்க நிலையையும் பாதிப்புக்களையும் பரிதவிப்புகளையும் நீக்க முடியும்?

மேன்மேலும் அவர்களை இம்சிக்கும், தண்டிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவே முடியும். எய்தவன் இருக்க காயப்பட்டவனைக் காலால் மிதிக்கும் அநீதியான போக்கையே கிழக்கில் படை மற்றும் பொலிஸ் தரப்பினர் மேற்கொண்டுள்ள எதிர்மறையான இம்சை தரும் நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

அரசாங்கம் மக்களுக்காகவே அன்றி, மக்கள் அரசாங்கத்துக்காக அல்ல. ஜனநாயகத்தின் அரிச்சுவடி அதுவே. மக்களினது, மக்களால், மக்களுக்காக என்ற கோட்பாட்டையும் விழுமியங்களையும் அது கொண்டதாகும். ஆனால் அந்தக் கோட்பாடும் விழுமியமும் இலங்கையில் மிக நீண்ட காலமாக, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க காலம் தொடக்கம் தலைகீழாக மாற்றப்பட்டுள்ளது!

அதாவது அரசுக்காக அதன் ஆட்சியின் நலன் கருதியே மக்கள் அதன் பக்கம் மாற்றப்பட வேண்டும் என்ற புதிய ஜனநாயகம் இந்த நாட்டில் நிலைப்படுத்தப்பட்டு வருகிறது. மக்களின் வாக்குகள் மூலம் ஆட்சி அதிகாரத்தைப் கைப்பற்றும் அரசியல் தலைவர்கள், பதவிகளைக் கவ்விக் கொண்டதும், மக்கள் நலன்களைப் பின்தள்ளி தமது கருத்து நிலைகளுக்கும் விருப்பு வெறுப்புகளுக்கும் முதலிடம், முன்னுரிமை கொடுத்து ஆட்சி நடத்துவது மாற்றப்பட முடியாத வழமையாக மாறிவிட்டது.

இந்த நாட்டில் ஜனநாயகம் என்பது மேற்கூறிய வடிவம் என்றாகி விட்ட மறுபுறத்தில், சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளைச் சீண்டி விளையாடும், இல்லை இல்லை, காலால் ஏறி மிதிக்கும் போக்கு அரசுக்கு அரசு வேகமாகவும் வீச்சாகவும் வளர்ந்து வந்திருக்கிறது; வருகிறது. இன்றைய அரசு தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகள் என்பது தாம் விரும்பி, இரங்கி வழங்குபவை மட்டுமே என்ற நோக்குடன், திமிருடன் இல்லை இல்லை சித்தாந்தத்துடன் செயற்பட்டு வருகிறது.

கிழக்கில் ''கிறீஸ் பூதம்'' தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ள பாதிப்புக்களையும் பதற்ற நிலையையும் மனிதாபிமான ரீதியிலேனும் உணர்ந்து அவற்றை நீக்குவதற்கு நியாயபூர்வமான வழிமுறைகளைக் கையாளப் பின்னிற்பதால்-

அரசே பூதத்தின் சூத்திரதாரி என்று மக்களை நினைக்கத் தூண்டும் வகையில் செயற்பட்டு அவர்களை அதனையே உணரவும் ஊகிக்கவும் வைக்கிறது.

பொதுமக்களுக்கும் படையினருக்கும் இடையே மோதல்கள் வெடிக்குமென எதிர்பார்த்து, அவசர நிலைமைகளைச் சமாளிப்பதற்காக கிழக்கில் படையினருக்கு விசேட பயிற்சி வழங்குவதற்கு அரசு ஆரம்பித்திருப்பது அதற்கோர் உதாரணம்.

கிழக்கில் படையினருக்கும் மக்களுக்கும் இடையே தொடர்ச்சியாக உண்டாகிவரும் மோதல்களை அடுத்தே மேற்குறிப்பிட்ட விசேட பயிற்சி வழங்கப்படுவதாக அரச தரப்புத் தெரிவித்திருக்கிறது.

மக்களைப் பாதிக்காத ஆத்திரமூட்டாத செயற்பாடுகள் குறித்துப் பயிற்சி அளிப்பதற்குப் பதிலாக, நிரை மாறிச் செயற்படுவதே அரசினதும் படைகளினதும் இயல்பாகவும் விதிமுறையும் ஆகிவிட்டது.

வடக்கில் சிவில் நிர்வாகத்தின் ஒரு கூறு என்று சொல்லும் அளவுக்கு ''இராணுவ நிர்வாகமும்'' மறைபொருளாக பொதிந்து விட்டது. கிழக்கிலும் அந்த வாய்ப்பாட்டை முழு.நீளமாகப் புகுத்துவதற்கான ஓர் ஏற்பாடே அரசின் உடனடி இலக்கு எனக் கருதுவதற்கான பின்புலங்களும், ஏதுக்களும் வெளிச்சமாகக் கிட்டடியில் தெரிகின்றது.

*டிங்கிரி டிங்காலே மீனாட்சி டிங்கிரி டிங்காலே*
*உலகம் போற போக்கைப் பாரு தங்கமே தில்லாலே*

என்ற நகைச்சுவை நடிகர் சந்திரபாபுவின் சினிமாப் பாட்டில் இன்றைய நிலையை நோக்கும்போது ஞாபகத்துக்கு வருகிறது!

# கௌரவமான தீர்வுக்காகக் கூட்டமைப்புடன் அர்த்தமுள்ள பேச்சை அரசு தொடர வேண்டும்

## ஈ.பி.ஆர்.எல்.எவ். மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக. 23

கௌரவமான தீர்வை எட்டும்பொருட்டு இலங்கை அரசு அர்த்தமுள்ள பேச்சுக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர வேண்டும் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வருடாந்த மாநாட்டில் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கடந்த 19 ஆம்திகதி நடைபெற்ற இந்த மாநாட்டில் தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் முன் வைக்கப்பட்டன.

இலங்கை அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்தவேண்டும் எனவும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாதது எனவும், பொதுமக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்வு செய்யப்படாத நிலையில் இது குறைக்கப்பட்டுள்ளது. எனவே முதலில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் இந்த மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன் சகல சிவில் நிர்வாகக் கடமைகளில் இருந்தும் இராணுவம் விலகிக் கொள்ளவேண்டும் எனவும், பொதுமக்களின் வீடுகள், காணிகள் ஆகியவற்றில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் எனவும், யுத்தத்தால் பாதிப்படைந்துள்ளவர்களின் வாழ்வாதார தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும், தமிழ் மக்களின் சொந்தக் காணிகள் அவர்களிடம் ஒப்படைக்கப்படுவதுடன் கடற்றொழில் செய்வதில் சுதந்திரம் வழங்கப்படவேண்டும் எனவும், அரச மற்றும் தனியார் துறைகளில் தமிழ் மக்கள் பணிக்காக உள்வாங்கப்படவேண்டும் எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தடுப்பிலுள்ள கைதிகள், முன்னாள் போராளிகள், காணாமல்போனோர் ஆகியோர் விடுதலை செய்யப்படவேண்டும் அல்லது இவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்படவேண்டும் எனவும், பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் நீக்கப்படவேண்டும் எனவும் போரின் போது சொத்துக்கள், உயிரிழப்புக்களைச் சந்தித்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் என்றும் தமிழ்ப் பண்பாட்டு நினைவுச் சின்னங்களை அழிக்கும் செயற்பாடுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

(த-313)

# மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் 13 ஆவது திருத்தத்தை ரத்துச் செய்க

## தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் வலியுறுத்தல்

அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி 13 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டுமென வலியுறுத்தும் தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் எமது நாட்டின் வெளிநாட்டுத் தூதுவர்கள் திறமையற்றவர்கள் அவர்களது செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 'மிஹிலக' கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றச்சாட்டுக்களை தோல்வியடையச் செய்வோம் என்ற தொனிப் பொருளில் தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடுசெய்த கருத்தரங்கிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் டாக்டர் குணதாச அமரசேகர, 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் மீண்டும் பயங்கரவாதத்துக்கும், பிரிவினை வாதத்துக்கும் அது வழி வகுக்கும். யுத்தக் குற்றச்சாட்டுக்களை ஒரு தரப்பினர் சுமத்தும்போதும் இந்தியாவும் இன்னொரு தரப்பும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறும் அதனை மேற்கொண்டால் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெறப்படுமென்றும் அழுத்தம் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கெல்லாம் ஜனாதிபதி அடிபணியலாகாது. எனவே நாமனைவரும் அவருக்கு பக்க பலமாக இருக்க வேண்டும் என்றார்.

இங்கு உரையாற்றிய சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி,

13 ஆவது திருத்தத்தை இரத்து செய்து புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும். இதற்காகவே மக்கள் அரசுக்கு ஆணையை வழங்கினார்கள்.

இந்தியாவின் பேச்சைக் கேட்டு இதனை நடைமுறைப்படுத்தினால் எதிர்காலத்தில் தனித் தமிழீழம் தோன்றும், எமது நாட்டின் மீது சீனா, பாகிஸ்தான் மற்றும் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் அதிக ஆர்வமுடன் உள்ளன.

இது எமது நன்மைக்காக அல்ல. அவர்களது பொருளாதார நன்மைகளுக்காக எமது நாட்டைப் பயன்படுத்துவதே நோக்கமாகும்.

யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி எமது தலைவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டுமென இந்தியா மற்றும் மேற்குலகம் வலியுறுத்துகின்றன.

அப்படியென்றால், இந்திய சமாதானப் படையினர் இங்கிருந்தபோது மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் விசாரணைகளை நடத்தவேண்டும், சர்வதேசம் தொடர்ச்சியாக எம் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறது. இதற்கு சிறந்த முறையில் பாதுகாப்பு அமைச்சு பதில்களை வழங்குகின்றது.

ஆனால் வெளிநாட்டிலுள்ள தூதுவர்களின் இந்த விடயம் தொடர்பான பணி திருப்திகரமானதாக இல்லை. அவர்கள் திறமையற்றவர்களாக உள்ளனர் என்று தெரிவித்தார்.

# மண்ணித்தலை செபஸ்தியார் ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டுத் திருவிழா

## நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

கொழும்புத்துறை, ஓக. 23

மண்ணித்தலை புனித செபஸ்தியார் ஆலயம் புதிதாக அமைக்கப்பட்டு அதன் திருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி நடை பெறவுள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தத்தினால் மிகவும் சேதமடைந்திருந்த இந்த ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்ட நிலையில் நாளை 24 ஆம் திகதி கொடியேற்றத் [illegible] இடம் பெறவுள்ளன.

27 ஆம் திகதி மாலை நற்கருணைப் பெருவிழாவும், 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தையினால் நிர்வகிக்கப்படும் மண்ணித்தலை புனித செபஸ்தியார் ஆலய விழாவுக்கு வன்னியில் இருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் யாத்திரிகர்கள் பெருமளவு செல்வது வழக்கமாகும்.

இந்தத் திருவிழாவுக்கு பக்தர்கள் சென்று தங்கிவரப் பாதுகாப்பு தரப்பினரிடம் அனுமதி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.கிழக்குப் பிரதேச சபையின் முதலாவது கூட்டம் நாளை காலை

## பூசை வழிபாடுகளுடன் ஆரம்பம்

அச்சுவேலி, ஓக. 23

வலி.கிழக்குப் பிரதேச சபை நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கூடுகிறது. புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தமது பொறுப்புகளை இதன்போது ஏற்றுக்கொள்ளவுள்ளனர்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் புத்தூர் சிவன்கோயிலில் நடைபெறவுள்ள பூசை வழிபாடுகளை அடுத்து ஊர்வலமாக புத்தூர் சுன்னாகம் வீதி சந்தியில் அமைந்துள்ள பிரதேச சபை அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

இந்த நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு தெரிவுசெய்யப்பட்ட 21 பிரதிநிதிகளில் 15 பேர் இலங்கை தமிழரசுக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளனர். 06 பேர் அரசு சார்பு கூட்டணியின் பிரதிநிதிகளாவர். வலி.கிழக்குப் பிரதேச சபையின் தலைவராக அன்னலிங்கம் உதயகுமார், உபதலைவராக கந்தையா தர்மலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-11)

## புதிய வரவு



காலத்தின் பதிவு: சிறிபாத தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் ம.நிரோஸ்குமார் எழுதிய 'இவர்களும் யதார்த்தவாதிகள் தாம்' என்ற சிறுகதைத் தொகுப்பு அறிமுக விழா யாழ்.தேசிய கல்வியற்கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட செங்கையாழியான் கலாநிதி க.குணராஜாவிடம் இருந்து சிறப்புப்பிரதியை திருமதி பு.வரதராஜன் பெறுகிறார். (த)

# சின்னக் கடைப் பகுதியில் துர்நாற்றம் சடலங்களின் கழிவுகளால் எழுகின்றதா?

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்.பிரதான வீதியில் சின்னக்கடைப் பகுதியில் அமைந்துள்ள அந்தியகாலச் சேவை நிலையங்களை அண்மித்துக் கடந்த சில வாரங்களாகத் தாங்க முடியாத அளவுக்குத் துர்நாற்றம் வீசுவதாக அந்தப் பகுதியினூடாகப் பயணிக்கும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

அழுகிய மனித சடலங்களின் மணம் போன்று துர்நாற்றம் வீசுவதாகவும், இதனால் தாம் பெரும் சிரமத்துக்கு உள்ளாவதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

பெரும்பாலும் வைத்திய சாலைகளில் இறப்பவர்களின் சடலங்களை இந்தப் பகுதியில் உள்ள அந்தியகால சேவை நிலையங்களில் வைத்துக் கழிவகற்றும் நடைமுறை இருந்து வருகின்றது.

இந்தத் மனிதக் கழிவுகளால் அல்லது வேறு ஏதேனும் கழிவுகளால் தாங்கமுடியாத அளவுக்கு துர்நாற்றம் எழுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக இந்த துர்நாற்றம் வீசும் நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதியில் அமைந்துள்ள உணவகங்கள், வங்கிகள் என்பனவும் இங்கு வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

## விடுமுறை வழங்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக.23

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறுவதை முன்னிட்டு சகல வர்த்தக நிலையங்களிலும் கடமையாற்றும் வர்த்தக ஊழியர்களுக்கு விடு முறை வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாண வணிகர் கழகம் வர்த்தகர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## ஆசிரியர்கள் சமுகமளிக்கவும்

யாழ்ப்பாணம், ஓக.23

யா/வேம்படிமகளிர்கல்லூரியில் கடந்த 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெற்ற பியானோ பயிற்சியில் கலந்து கொண்ட யாழ். வலயத்துக்குட்பட்ட ஆசிரியர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு சமுகம் அளிக்குமாறு யாழ். வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-323)

# மழையை அடுத்து உயர்ந்தது சின்ன வெங்காயத்தின் விலை

யாழ்ப்பாணம், ஓக. 23

குடாநாட்டுச் சந்தைகளில் சின்ன வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது. கடந்த வாரங்களில் சந்தைகளில் கிலோ 60 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட சின்ன வெங்காயம் நேற்று திங்கட்கிழமை 100 ரூபாவாகத் திடீரென விலை உயர்ந்தது.

குடா நாட்டில் பரவலாகப் பெய்த மழையினால் அறுவடை செய்து உலர விடப்பட்ட வெங்காயம் மழையில் நனைந்து பழுதடைந்தன. அத்துடன் அரசு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்தின் வரியை அதிகரித்துள்ளது.

இந்தக் காரணங்களால் சின்ன வெங்காயத்தின் விலை திடீரென உச்சத்துக்குச் சென்றுள்ளது.

இது மேலும் உயர்வடையக் கூடிய சாத்தியம் உள்ளதாக சந்தை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (த-26)

உயர்தர பரீட்சையின் பின்!!!
உங்கள் வாழ்வை வளமாக்கிக்கொள்ள
இதோ அரியதொரு சந்தர்ப்பம்

University of Ballarat
Learn to succeed
SRI LANKA STUDY CENTRE
★★★★★
சிறந்த போதனை தரத்திற்காக 5 நட்சத்திரத்தினை கொண்டு
ஆஸ்திரேலிய பல்கலைக்கழகத்தினால் விருதளிக்கப்பட்டுள்ளது

ஐந்து நட்சத்திர கற்கை தகைமை கொண்ட
ஆஸ்திரேலியா University of Ballarat பலரத் பல்கலைக்கழகம்
இலங்கையில் அதன் கிளையை ஆரம்பித்துள்ளது...

உயர்தர மாணவர்களுக்கான கற்கை நெறிகள்
- Bachelor of Information Technology
- Bachelor of Business (Management)
- Bachelor of Business (Tourism)
- Bachelor of Commerce (Accounting)

சாதாரண தரம் சித்தி எய்து உயர்தரம் சித்தியடையாதவர்களுக்கு
- Foundation in Business & IT

நம் முகாமையாளர் யாழ் நகரில் இன்று இருப்பதால் அவரை சந்திக்க முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.
நம் பிரதேச ஒருங்கிணைப்பாளர்
எஸ். நிசாந்தன் - 071 8561536, 0776063825

பட்டதாரிகளுக்கான முதுமாணி கற்கை நெறிகள்
- Master of Business Administration
- Master of Information Technology
- Master of Information System

பல்கலைக்கழக முகவரி:
No: 113, "Habitat House", Dutugemunu Street, Kohuwala.
Tel: 0112 817317, 0115 553237
E-mail: info@ubsrilanka.lk web: www.ubsrilanka.lk
Eastern Province: 077 4056741 Kandy: 077 3066411 Jaffna: 071 8561536
யாழ் முகவரி: 120, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
SKILLS Advertising

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை நாமே ஆளும் அரசியல் உரிமையை மக்கள் தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளனர்

## பதவியேற்பு நிகழ்வில் மாவை சேனாதிராசா

யாழ்ப்பாணம்,ஓக.23

இராணுவ அடக்குமுறை நீங்கி தமது சொந்த மண்ணில் எம்மை நாமே ஆளும் உரிமை வேண்டும் என்பதைத் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா.

வலி.தென் மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மாவை சேனாதிராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்குமேலும் தெரிவித்தவை வருமாறு:-

இராணுவ அடக்கு முறைகள் நீங்கி தமது சொந்த மண்ணில் குடியேறித் தம்மைத் தாமே ஆட்சிசெய்யும் அரசியல் உரிமையைப் பெறவேண்டும் என்பதை உள்ளூராட்சித் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழ் மக்களின் இந்தத் தீர்வு அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், இந்தியா, உள்ளிட்ட நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை அறிந்துள்ளது.

2009 மே மாதத்துடன் தமிழ் மக்களது போராட்டம் முடியவில்லை என்பதே தமிழ் மக்களின் ஜனநாயகத் தீர்ப்பு வெளிப்படுத்தி நிற்கிறது. இது சர்வதேசத்துக்கு விடுத்த செய்தி ஆகும்.

யுத்தம் முடிந்தாலும் தமிழ் மக்களை ஜனநாயக ரீதியாக தோற்கடிக்க முடியாது என்பதனை ஜனாதிபதிக்கும், தென்னிலங்கைக்கும், சர்வதேச சமூகத்துக்கும் எமது மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இனிவரும் தேர்தல்களிலும் இந்த முடிவைத்தான் தமிழ் மக்கள் வெளிப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை திடமாக இருக்கின்றது.

எமது இனத்தின் விடிவுக்காக நாம் கொடுத்த தியாகங்கள் வீணாகப்போய் விடாது. எமது ஜனநாயகப்பலத்தை அதிகரிக்கச் செய்யவேண்டும். எமது இலக்கை அடைவதற்கு தொடர்ந்தும் பயணிக்கவேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவானவர்கள் அபிவிருத்தியை மட்டும் நோக்காகக் கொண்டு செயற்படாமல் எமது இலட்சியப் பயணம் நிறைவு பெறுவதற்கும் உழைக்கவேண்டும், எதிர்க்கட்சி உறுப்பினர்களைச் சமமாக மதித்து ஊரின் மேம்பாட்டுக்காக உழைக்க வேண்டும் என்றார். (த-14)

## நவாலி சின்னப்பா வீதி புனரமைப்பு

நவாலி,ஓக 23

'நெல்சிப்' திட்டத்தின் கீழ் நவாலி சின்னப்பா வீதி புனரமைப்பு வேலைகள் மக்களின் பங்களிப்புடன் மிகத் துரிதமாக நடை பெற்று வருகின்றது.

இந்தப் பகுதி மக்கள் அவசர அவசரமாக வேலிகளை வெட்டியும் மதில்களை உடைத்தும் வீதி அகலிப்புக்கு உதவி வருகின்றனர். மறுபுறம் கற்கள் பரவப்பட்டு வீதியைப் புனரமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

விரைவில் மக்கள் சிரமமின்றி இந்த வீதிகளில் போக்குவரத்துச் செய்ய முடியுமென்று தெரிவிக்கப்பட்டது. இந்த வீதி புனரமைப்புக்கென 70 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (த-100)

## புதிய ஆரம்பம்...



சமூக வளர்சிக்காக: இளவாலை கிராமத்தின் கல்வி கலை, கலாசார, சமூக மேம்பாட்டுக்கான அமைப்பான 'எழுச்சியகம்' அமைப்பின் புதிய கட்டடம் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. யாழ்.மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்துள்ளார். கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட ஜெயரட்ணம் கொர்னலியுஸ், பங்குத்தந்தை அருட்திரு ஏ.சி.கிறிஸ்தோப்பர் ஆகியோர் அருகில் உள்ளனர். (த)

## ஆன்மீக, விழிப்புணர்வுக்காக நல்லூரில் விசேட கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக.23

மக்களிடையே ஆன்மிக, கலாசார மற்றும் சமூக விழிப்புணர்வை எற்படுத்தும் வகையில் சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தினால் நல்லூரில் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது.

நல்லூர் பாரதியார் சிலைக்கு அருகே அமைந்துள்ள சமூக அபிவிருத்தி மன்றக் கட்டடத்தில் கடந்த புதன்கிழமை தொடக்கம் இந்தக் கண்காட்சி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை இந்தக் கண்காட்சியை அனைவரும் பார்வையிட முடியும் எனக் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

ஆன்மிகம் சார் விடயங்களான சிவத்தமிழ் அறநெறிப் பாடசாலைச் செயற்பாடுகள், ஈழத்துச் சிவாலயங்கள், குருபீடங்கள், சைவநற்பணி மன்றங்களின் செயற்பாடுகள், ஜீவகாருண்யம், உயிர்ப்பலி எதிர்ப்பு போன்றவற்றையும் சமூகம் சார் விடயங்களான மருத்துவ விழிப்புணர்வு தொற்று நோய்கள், கட்டிளமைப்பருவங்கள், சுகாதார நடைமுறைகள், கண்தானம் போன்றவற்றையும் கலாசாரம் சார் விடயங்களில் சமகால கலாசாரப் பிரச்சினைகள் மற்றும் சிவத் தமிழ்பண்பாடு போன்ற விடயங்களையும் உள்ளடக்கியதாக இந்தக் கண்காட்சி நடைபெற்று வருகின்றது.

கடந்த நான்கு வருடங்களாக சிவத்தமிழ் மானிடவியற் கழகம் நல்லூர் ஆலய மஹோற்சவ காலத்தில் இந்தக் கண்காட்சியை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## மானிப்பாய் எரிபொருள் நிலையத்தில் விநியோகம் விஸ்தரிப்பு

நவாலி,ஓக 23

மானிப்பாய் பநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தில் ஒரே தடவையில் இரு வாகனங்களுக்கு பெற்றோல் விநியோகம் செய்யும் நவீன பம்பியொன்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பொருத்தப்பட்டுள்ளது.

இதனால் தற்போது வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்காமல் உடனுக்குடன் பெற்றோலை நிரப்பிக் கொண்டு செல்லக் கூடியதாக உள்ளது.

இதற்கு முன்னர் காலை, மாலை வேளையில் சகல வாகனங்களும் நீண்ட நேரம் காத்திருந்தே பெற்றோல் நிரப்பிக் கொண்டு செல்ல வேண்டியிருந்தது. தற்போது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இந்த முயற்சியினால் பாவனையாளர்கள் உடனுக்குடன் தாமதம் இன்றி செல்லக்கூடியதாக உள்ளது.

இதேவேளை இந்த நிலையம் 24 மணிநேர சேவையில் ஈடுபடவுள்ளமையால் அதிக வருமானம் ஈட்டுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-100)

## பெரும்போகத்துக்குத் தயாராகி வரும் விவசாயிகள்

நவாலி,ஓக 23

நவாலி, ஆனைக்கோட்டை மற்றும் இதர பகுதி விவசாயிகள் பெரும்போக நெற் செய்கை மேற்கொள்வதற்கு தமது வயல்களுக்குக் குப்பைகள் போடும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக வீட்டுக்கு வீடு குப்பைகள் கேட்டு அதிக விலை கொடுத்து ஏற்றிச் செல்கின்றனர்.

மேலும் இந்தப் பகுதிகளில் தற்போது மழை பெய்து வருவதைத் தொடர்ந்து சிலர் வயலை உழுது பண்படுத்தி வருவதாகவும் மேலும் சிலர் வரம்புகள் அமைத்து செப்பனிட்டு வருவதையும் காணமுடிகிறது.(த-100)

## தர்மலிங்கத்தின் நினைவு தினத்தை மானிப்பாயில் அனுஷ்டிக்க ஏற்பாடு

சண்டிலிப்பாய், ஓக. 23

அமரர் வி.தர்மலிங்கத்தின் 26 ஆவது நினைவு தினம் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தில் அன்னதானமும் மானிப்பாய் தொகுதியில் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளன.

இதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொள்வதற்காக பதினொரு பேர் கொண்ட நினைவுக்குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய்த் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் நினைவு தினத்தை அனுஷ்டிப்பது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இணுவில் இளந்தாரி அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் மானிப் பாய்த் தொகுதித் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அமைப்பாளர் கே.கௌரிகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அமரரின் நினைவு தினத்தைக் கடந்த காலங்களைப் போல் அல்லாமல் மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதென்று திர்மானிக்கப்பட்டது.

தாவடியில் அமைந்துள்ள அமரரின் நினைவுத் தூபியை பூசி மெருகூட்டப்பட உள்ளது. (த-1)

# கத்தோலிக்க இளையோர் தினம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில்

கொழும்புத்துறை, ஓக. 23

அனைத்துலக கத்தோலிக்க திருச்சபையால் முன்னெடுக்கப்பட்டுவரும் 13ஆவது இளையோர் தினக்கொண்டாட்டங்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றன.

யாழ். ஆயர் தலைமையில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் கூட்டுத்திருப்பலி இடம்பெற்றது.

ஆயர் தனது மறை உரையில்:

இளைஞர்கள் வெள்ளத்தைப் போன்றவர்கள். இது அளவோடு [illegible] போது உலகைச் செழிப்படைய்ச செய்யும். பெருக்கெடுத்தால் பல அழிவுகளையும் அனர்த்தங்களையும் விளைவிக்கும். சமூகத்துக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதும் அநீதியைக் கண்டு சீற்றங் கொள்வதிலும். அன்பை- சமாதானத்தை விதைத்துப் புத்துலகை உருவாக்கும் சிற்பிகளாகத் திகழ்வதும் இளைஞர்களே! இளமை இறைவனின் அழைப்பு அதை நல்வழியில் பிரயோகிக்க வேண்டும். - என்றார்.

யாழ்.மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு ஏற்பாடு செய்த இளையோர் சங்கப் பேரணி பிரதான வீதிவழியாக யாழ்.மரியன்னை பேராலயத்தைச் சென்றடைந்தது. ஆயிரக் கணக்கான இளையோர்கள் இந்த நிகழ்வுகளில் பங்கேற் றனர்.

பேராலய வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்.நீதி மன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்த ராஜா கலந்து கொண்டார்.

கோலாட்டம், நடனம், நாடகம் இளையோர் எழுச்சிப் பாடல்கள் என்பன இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்களை யாழ். மாவட்ட நீதிபதி வழங்கினார். (த-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
23 ஒகஸ்ட் 2011 செவ்வாய்க்கிழமை

# இலங்கை - இந்திய உறவு பலமடைய வேண்டும்

## மூத்த இராஜதந்திரி ஜயந்த தனபால கருத்து



இந்தியாவுடனான உறவு களை இலங்கை பலப்படுத்த வேண்டும். விரும்பியோ, விரும்பாமலோ இந்தியாவின் புவியியல் கட்டுப் பாட்டுக்குள் இலங்கை உள்ளது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று ஐ.நா. சபையின் ஆயுத பரிகரண விவகாரங்களுக்கான துணைப் பொதுச் செயலாளராகப் பதவி வகித்தவரும் இலங்கையின் மூத்த ராஜதந்திரியுமான ஜயந்த தனபால 'லக்பிம' ஆங்கில வாரப் பத்திரிகைக்குத் தெரிவித்திருக் கின்றார்.

அவர் மேலும் கூறியதாவது:

20 மைல்களுக்கு அப்பால் உள்ள இந்தியாவை நாம் தூக்கி எறிந்து விட முடியாது. இந்தியாவுடனான உறவை புத்திசாலித் தனமான முறையில் இறுக்கமாக வைத்து வந்த ஜனாதிபதியிடமிருந்து 2009 இற்கு பின்னர் அந்தப் புத்திசாலித்தனத்தைக் காணமுடியவில்லை.

வரலாற்று ரீதியாக இந்திய வம்சாவழியினர்தான் இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர். இலங்கையில் நடக்கும் ஒவ்வொரு விவகாரமும் இந்தியாவின் தமிழ்நாட்டிலும் அதன் ஏனைய பகுதிகளிலிலும் நேரடித் தொடர்பு உடையதாகவே இருக்கின்றது.

13 ஆவது திருத்தச்சட்டம், அதற்கு அப்பால், இரண்டாவது சபை என்று கூறியது எல்லாம் போய் இப்போது நாடாளு மன்றத் தெரிவுக்குழு என்றெல்லாம் ஜனாதிபதி பேசுகின்றார், இந்திரா காந்தியைப் போன்று எம் கையை முறுக்கிய மாதிரியான அணுகுமுறையைக் கடைப்பிடிக்காது, அரசியல் தீர்வு காணும் முயற்சியை விரைந்து காணுமாறு இந்தியா சாந்தமாகக் கோருகின்றது. ஆனால் நாம் அந்தச்செய்திக்கு காது கொடுப்பது போன்று தெரியவில்லை.


இந்திய-இலங்கை உடன்படிக்கையை 1980 களில் திணித்ததிலும் பார்க்க இந்தியாவின் சர்வதேச வளர்ச்சி இன்று 100 வீதம் அதிகரித்துள்ளது. பெரும்பாலான மேற்கு நாடுகள் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் வழிகாட்டலையே எதிர் பார்த்து நிற்கின்றன.

உலக ரீதியில் இந்தியாவிவுக்கு உள்ள செல்வாக்கை நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. நாம் இந்தியாவுடனும் சீனாவுடனும் நல்ல உறவுகளைப் பேண முடியும். முன்னரும் இவ்வாறே நடந்துள்ளோம். இந்தியா தனது பொறுமையை இழக்கும் ஒரு நேரம் வரும் . அப்போது எமக்கு இந்தியாவின் செல்வாக்கு உதவ முடியாது போகும் நிலை ஏற்படும் என்றும் ஜயந்த தனபால தெரிவித்தார்.

(வ)

# ராஜீவ் கொலைக்குற்றவாளிகளின் மரணதண்டனையை ரத்து செய்க!

## அமெரிக்காவில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோர்களின் மரண தண்டனையை ரத்துச் செய்யக் கோரி அமெரிக்காவில் உள்ள தமிழ் உணர்வாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அத்துடன் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் மரண தண்டனையை ரத்து செய்வதற்காக கையெழுத்து பிரசாரமும் நடைபெற்றது.

அமெரிக்காவின் சான் ஒசே, சன்னிவேல் உட்பட அருகில் இருந்த பல நகரங்களில் இருந்தும் தமிழர்கள் குடும்பத்துடன் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோர்களின் மரண தண்டனையை ரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மனுவில் அவர்கள் கையெழுத்துகளைச் சேகரித்தனர்.

இந்தியத் தூதரகத்தின் மூலம் இந்த கோரிக்கை மனு இந்திய அரசுக்கும் தமிழக முதல் வருக்கும் அனுப்பி வைக்க இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

மரண தண்டனைக்கு எதிரான பதாகைகளை கைகளில் ஏந்தியவண்ணம் பிரமாண்ட சென்ட்ரல் பூங்காவைச்சுற்றி அவர்கள் ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கிறீஸ் பூதம் என்ற பெயரில் "பேஸ்புக்" இணையத்தளங்கள்

கிறீஸ் பூதம் தொடர்பாக மக்கள் மத்தியில் பெரும் அச்சமான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், சில நபர்கள் கிறீஸ் பூதம் என்ற பெயரில் பேஸ்புக் இணையத்தளக் கணக்குகளை ஆரம்பித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பல்வேறு புகைப் படங் களை பதிவேற்றி மேற்படி நபர்கள் இந்த கணக்குகளை ஆரம்பித் துள்ளனர். இதன் மூலம் இந்த அச்சமூட்டும் நடவடிக்கை மேலும் உக்கிரமடை யும் என்றும் கூறப்படுகிறது. எவ்வாறாயினும் இந்த விடயம் குறித்து தமக்கு முறைப் பாடுகள் எதுவும் கிடைக்க வில்லை என்று இலங்கை இணையளத் தளங்கள் தொடர் பான அமைப்பு தெரிவித் துள்ளது.

# தன்னைத்தானே வெட்டித் துன்புறுத்திய தமிழ்ப்பெண்

பிரிட்டனில் இருந்து நாடு கடத்தப்படவிருந்த 40 வயதுடைய இலங்கைப் பெண்ணொருவர் தன்னைத்தானே கத்தியால் வெட்டி துன்புறுத்திக் கொண்ட சம்பவமொன்று நேற்று பிரிட்டனில் இடம்பெற்றுள்ளது.

வோல்டன் பகுதியில் உள்ள குறித்த பெண்ணின் வீட்டிற்குச் சென்ற பிரிட்டன் எல்லைச் சேவை முகவர் அதிகாரிகள் மூவரையும் கண்டதும் குறித்த பெண் சமையலறைக்குச் சென்று அதிகாரிகள் முன் தன்னைத்தானே கத்தியால் வெட்டித் துன்புறுத்திக்கொண்டார்

குறிந்த பெண்ணின் கணவரை விடுதலை புலிகளுக்கான ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டவர் எனக்கூறி அவருக்கு இலங்கையில் பிடியாணை பிறப்பிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து தலைமறைவாகியிருந்த குறித்த பெண் ணின் கணவர் மீது பிடியாணை பிறப்பிக் கப்பட்டிருந்தது.

குறித்த பெண் 2009 ஆம் ஆண்டு பிரிட்டனில் தஞ்சம் புகுந்து பல முறை அகதி அந்தஸ்துக்கோரிய போதும் அவை அனைத்தும் நிராகரிக்கப்பட்டன.

சம்பவத்தின் பின் குறித்த பெண்ணை வைத்திய சாலையில் அனுமதித்த அவரது நண் பி தற்போது பாதிப்புக்குள்ளான பெண்ணின் 3 வயதுக்குழந்தையைப் பராமரித்து வருவதாகக் கூறப் படுகிறது.

(வ)



உ

திருகோணமலை

தம்பலகாமம்

ஸ்ரீ ஆதிகோணநாயகர்

தேவஸ்தானம்

பஞ்சகுண்ட பக்ஷ

பாலாலய கும்பாபிஷேகம்

(பாலஸ்தாபன விழா)

| | |
|---|---|
| கர்மாரம்பம்: | ஆவணி: 7, (24.8.2011) புதன்கிழமை |
| பிம்பஸ்தாபனம்: | ஆவணி: 8, (25.8.2011) வியாழக்கிழமை |
| பாலாலய கும்பாபிஷேகம் | ஆவணி: 9, (26.8.2011) வெள்ளிக்கிழமை |

இலங்கையின் முதலாவது இந்துமத குருபீடாதிபதி
சிவாகமஞானி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்
சங்கானை , ஸ்ரீமுருகமூர்த்தி தேவஸ்தான ஆதீன குருமுதல்வர்
சிவாகமஞானி சிவ. நித்தியானந்த சிவாச்சாரியார்
ஆகியோரின் குருவருளாசியுடன் கிரியைகள் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார்:
"சர்வதேச இந்துமத குருபீடாதிபதி" சிவாகம கலாநிதி
ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்

சர்வசாதகாசிரியர்கள்:
சாதக கலாபூஷணம் நித்ய. சிவானந்த சிவாச்சாரியார்
சாதக கலாபமணி நித்ய. சுதானந்த சர்மா.
(I.D.M. மனேஜர் சங்கானை)

அனைவரும் வருக!

இறை அருள்பெறுக!

(7151) (45)

தம்பலகாமம், திருமலை.
ஆலய தர்மகர்த்தா சபை
ஸ்ரீ ஆதிகோணேசர் தேவஸ்தானம்.

விற்பனைக்கு

SONY DV CAM, DIGITAL VIDEO CASSETTE RECORDER,
DSR. 20P, MADE IN JAPAN.
விவரங்களுக்கு:
பொ.சிவசுப்பிரமணியம்,
37/6, சிவகுருநாதர் லேன்,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தவறிவிட்டது

திருநாவுக்கரசு விக்கினேஸ்வரியின் தேசிய அடையாள அட்டை (இல: 545573598v) நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தி.விக்கினேஸ்வரி, இந்துக் கல்லூரி ஒழுங்கை, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் என்னும் முகவரிக்கு தபாலிலோ, நேரிலோ தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (7209)

கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 Prima புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் 25.08.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

| | |
|---|---|
| ★ சூட்டிபாம் சென்ரர் | - 0778996085 |
| ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு | - 0776904590 |
| ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம் | - 0774656377 |
| ★ நல்லூர் பாம் சென்ரர், பருத்தித்துறை | -0771392593 |
| ★ நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி | - 0776225944 |

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். 021 222 6944

வாழ்த்துகின்றோம்



எனது குடும்ப ஆசிரிய நண்பனும்,
தம்பியுமாகிய
நா.ரவீந்திரன்
அவர்கள்
துணுக்காய் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளராக, வடமாகாண கல்வி அமைச்சினால் 01.08.2011 முதல் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிந்து உவகை அடைவதுடன் மேன் மேலும் பல வளர்ச்சிகள் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

ஆவரங்கால், இடைக்காடு

பெரியண்ணா
குகன் மாஸ்ரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக விசாரணை நடத்துமாறு கோரிக்கை

கொழும்பு, ஓக.23

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய தொழிலாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் லால் பெரேராவினால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மஹிந்த ராஜபக்ஷ அரசிடம் கட்சியை ரணில் அடகு வைத்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜனநாயக ரீதியான 17ஆம் திருத்தச் சட்ட மூலம் ரத்து செய்யப்பட்டு, 18ஆம் திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்த ரணில் விக்கிரமசிங்க வழியமைத்துக் கொடுத்துள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக ஆர்ப்பாட்டம் நடத்துவதாகச் சூளுரைத்து, அதனை நடைமுறைப்படுத்தாமை. தனியார்துறை ஓய்வூதியச் சட்டத்துக்கு எதிராகக் குரல் கொடுக்காமை உள்ளிட்ட 13 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.



ரணிலின் சர்வாதிகாரப் போக்குக்கு சிரேஷ்ட உறுப்பினர்கள் அளித்துவரும் ஆதரவு அதிருப்தி அளிக்கிறது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கொழும்பில் மர்ம மனிதர்கள் ஊடுருவல்; மக்களுடன் சேர்ந்து பொலிஸார் தேடுதல்

கொழும்பு, ஓக.23

கொழும்பு, புதுக்கடை பகுதிக்குள் மர்ம மனிதர்கள் ஊடுருவியுள்ளதாக வெளியான தகவலால் இந்தப் பகுதியில் நேற்று முன்தினம் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது. மர்ம மனிதர்கள் இருவரை தாம் கண்டதாகச் சிலர் தெரிவித்ததையடுத்தே இந்த நிலை ஏற்பட்டது.

மர்ம மனிதர்கள் இருவர் ஊடுருவியுள்ளதாகத் தகவல் வெளியானதையடுத்து புதுக்கடைப் பகுதியில் ஒன்று கூடிய மக்கள் மர்ம மனிதர்களைப் பிடிப்பதற்கு முயற்சித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்துப் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டதையடுத்து படையினரும் பொலிஸாரும் அந்தப் பகுதிக்கு வந்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். ஆனாலும் எவரும் கைது செய்யப்படவில்லை.

கிழக்கு மாகாணத்திலும் மலையகத்திலும் மர்ம மனிதர்களின் செயற்பாடுகள் அதிகரித்து வரும் நிலையில் கொழும்பிலும் சில பகுதிகளில் மர்ம மனிதர்களின் ஊடுருவல்கள் குறித்து தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

ஆனால் இத்தகைய மர்ம மனிதர்கள் எவரும் இல்லை எனவும், இவை வெறும் கட்டுக்கதை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# ஆதிவாசிகளுக்கு வீட்டுத்திட்டம்

ஆதிவாசி மக்களுக்கான விசேட வீட்டுத்திட்ட வேலைகள் ஒரு மாதத்திற்குள் ஆரம்பிக்கப்படுமென கட்டுமாணம், பொறியியல் சேவைகள் மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். மஹியங்கனையில் ஆதிவாசித் தலைவர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தம்பன, ஹெனாநிகல, தலுக்கன, ரத்துகல, வாகர, பொல்லபெத்த ஆகிய பகுதிகளிலேயே இந்த வீட்டுத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த வேலைத்திட்டங்களுக்காக 80 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. - என்றார். (ச)



யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் செல்லையா இராசையா மற்றும் அகில இலங்கைப் பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் ஆகியோர் அண்மையில் தாக்குதலுக்குள்ளான 'உதயன்' செய்தி ஆசிரியர் ஞா. குகநாதனை நேரில் சந்தித்து நலன் விசாரித்துக் கொண்டனர். (ச-30)

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மக்கள் பெரும் அசௌகரியம்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.23

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

சமையல் எரிவாயு, வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் வெள்ளைப் பூண்டு போன்ற வற்றுக்கான விலை அண்மையில் உயர்த்தப்பட்டது. மக்கள் ஏற்கனவே பொருள்களின் விலையேற்றத்தினால் திண்டாடி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொருள்களுக்கான விலை மேலும் அதிகரிக்கப்படுவதனை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியினரின் ஊழல் மோசடிகளின் சுமை பொதுமக்கள் மீது திணிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# சட்ட விரோத வாகன உற்பத்தி நிலையம் அதிரடிப் படையினரால் சுற்றிவளைப்பு

கொழும்பு,ஓக.23

சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த வாகன உற்பத்தி நிலையம் ஒன்றை விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப் பாகங்களைக் கொண்டு இந்த வாகன உற்பத்தி நிலையம் இயங்கி வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வாகன உற்பத்தி நிலையம் ஹோமாகம, கொட்டாவ பிரதேசத்தில் இயங்கி வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சட்டவிரோத வாகன உற்பத்தி நிலையத்தின் உரிமையாளர் மற்றும் பணியாளர்களை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

இந்த உற்பத்தி நிலையத்தின் மூலம் பல லட்சம் ரூபா பெறுமதியான சொகுசு வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

பெருமளவிலான வாகனங்களும், என்ஜின்களும் வாகன உதிரிப் பாகங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச)

# மர்ம மனிதன் என்ற சந்தேகத்தில் வங்கிப் பணியாளர் மீது தாக்குதல்

மன்னார்,ஓக.

மன்னார், உப்புக்குளம் பள்ளிவாசலுக்குச் சமீபமாக மர்ம மனிதன் என்ற சந்தேகத்தின் பேரில் மக்கள் வங்கி மன்னார் கிளையின் பணியாளர் ஒருவர் அப்பகுதி விழிப்புக்குழுவினரால் கண்மூடித் தனமாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கொழும்பைச் சேர்ந்த செனவிரத்தின (வயது 27) என்பவரே மர்ம மனிதன் என்ற சந்தேகத்தின் பேரில் விழிப்புக் குழுவின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான நபர் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் செனவிரத்தின தெரிவித்ததாவது:-



வங்கி அலுவலகப் பணிகளை முடித்து விட்டு ஒவ்வொரு பணியாளர்களும் தத்தமது இருப்பிடம் நோக்கிச் சென்றனர். நானும் எனது இருப்பிடம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது மன்னார் உப்புக்குளம் பள்ளிவாசலுக்கு அண்மையில் என்னை இடைமறித்த சிலர் எவ்வித கேள்வியும் இன்றி தடிகளினால் கண்மூடித்தனமாகத் தாக்கினார்கள். வங்கிச் சீருடையில் காணப்பட்ட நான் மக்கள் வங்கியின் பணியாளர் என சிங்களமொழியில் கத்தக்கத்த தாக்கினார்கள்-என்றார்.(ச-601)

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி பகிஷ்கரிப்பு

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

அம்பாறை, ஓக.23

தொழிற்சங்கக் கூட்டமைப்புடன் இணைந்து ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிகளைப் பகிஷ்கரிக்கப் போவதாக இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கையில் இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு மற்றும் பதவி உயர்வு தொடர்பான கோரிக்கைகளுக்குக் கல்வி அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமையை ஆட்சேபித்தே, ஆசிரிய தொழிற்சங்கங்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளைப் பகிஷ்கரிக்கும் முடிவை எடுத்துள்ளன.

தொழிற்சங்கங்களின் கோரிக்கை மட்டுமன்றி உயர்நீதிமன்றத் தீர்ப்புக் கூட இது விடயத்தில் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது.

06.10.1994 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட ஆசிரிய சேவை, 01.01.1997 முதல் செயற்படும் அதிபர் சேவை என்பவற்றுக்கு 2/97 சுற்றறிக்கை மூலம் தோற்றுவிக்கப்பட்ட சம்பள முரண்பாடுகள் இன்றும் தொடர்கின்றன.

ஆசிரிய சேவையின் ஆரம்ப தினத்தில் 87.50 ரூபாவாக இருந்த முதலாம் வகுப்பு ஆசிரியரின் சம்பளம் 12895 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, 6/2006 சுற்றறிக்கையில் 21645 ரூபாவாக இருக்க, இத்தினத்தில் 5400 ரூபாவாக இருந்த விசேட தர தாதி ஒருவரின் சம்பளம் 20730 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 26130 ரூபாவாக உள்ளது.

இந்தத் தினத்தில் சுப்றா தர எழுதுநர் 3970 ரூபா சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கையில் 580 ரூபா வித்தியாசத்துடன் 9150 ரூபாவாகவிருந்த முதலாம் வகுப்பு அதிபரின் சம்பளம் 6/2006 சுற்றறிக்கையில் 22290 ரூபாவாக இருக்க சுப்றாதர எழுதுநரின் சம்பளம் 20395 ரூபாவாக 1895 ரூபா வித்தியாசத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

01.06.2007ஆம் ஆண்டுக்குப் பின் சம்பள அதிகரிப்பு எதுவும் செய்யப்படவில்லை. 05.09.2008 ஆம் ஆண்டில் 105 ரூபா சம்பள அதிகரிப்புடன் ஒரு மேலதிக சம்பளப்படிக்கு வழங்கப்பட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்பு இன்றும் கிடப்பிலேயே உள்ளது.

இந்த கோரிக்கைகளை முன்வைத்தே ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளைப் பகிஷ்கரிக்கும் தீர்மானத்தை எடுத்துள்ளோம்'' -எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் பேராற்று நீர்த்தேக்கத் திட்டம்: 60 ஆயிரம் மக்கள் நன்மை பெறுவார்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னிறுத்துவதற்கான சாத்தியவள கற்கை நெறி 2008 இல் முடிவடைந்தது. இதன் போது பேராற்று திட்டத்தை வழிமறித்து அணைக்கட்டு முன்னிறுத்தும்போது அதனுடன் சம்பந்தப்பட்ட 50 விவசாயிகளின் பிரச்சினையை முழுமையாக உள்வாங்கி அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் மாற்றுக் காணிகளை வழங்கி உதவுமாறு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா கேட்டுள்ளார்.

அத்துடன் விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கும்போது

*காணியை இழந்த சகலருக்கும் மாற்றுக்காணி அதே தரத்தில் வழங்கப்படும்.

*மேட்டுக் காணிக்கு - மேட்டுக்காணியும், வயல்காணிக்கு -வயல்காணியும் வழங்கப்படும்.

*இழக்கப்படும் காணியில் கிணறு, வீடு போன்ற கட்டடங்கள் இருக்குமாயின் அதற்கான இழப்பீட்டு நிதிவழங்கப்படுவதுடன், மேலதிகமாக 1/2 ஏக்கர் மேட்டுக்காணி வழங்கவும் ஏற்பாடாகியுள்ளது.

*உறுதிப்பத்திரம் உடையவர்களுக்கு சந்தை விலைக்கு ஏற்ப தேசிய நீர்வழங்கல் சபையால் இழப்புநிதி வழங்கப்படும்.

*அத்துடன் இன்னும் ஏழு மேலதிக நன்மைகளையும் வழங்கத் தயாராக உள்ளனர்.

இன்று வவுனியா பேராற்று குடிதண்ணீர் திட்டத்துக்கு ஏன்

**தினமும் வவுனியா மக்கள் 29 ஆயிரம் போத்தல் குடிதண்ணீரைப் பயன்படுத்த 15 லட்சம் ரூபாவுக்கு மேல் வீண் செலவு செய்கின்றனர். தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆசிய அபிவிருத்தி வங்கியின் 3 ஆயிரத்து 568 மில்லியன் ரூபாவை விரைந்து பயன்படுத்துமாறு முகாமைத்துவத்துக்குப் பணிப்பு விடுத்துள்ளார்.**

ஆசிய அபிவிருத்தி வங்கி உலர் வலய குடிதண்ணீர் திட்டத்தின் ஊடாக 3 ஆயிரத்து 568 மில்லியன் ரூபாநிதியை பயன்படுத்த முன்வந்துள்ளது?

ஒரு நாளைக்கு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த அதாவது வவுனியா, வவுனியா கிழக்கு, வவுனியா தெற்குப் பிரதேசம்



உள்ளிட்ட 21 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 60 ஆயிரத்து 294 பேர் குடிதண்ணீருக்காக அல்லலுறுவதாக மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இத்தேவை 2016 இல் 63 ஆயிரத்து 802 மக்களின் தேவையாகவும், 2020 இல் 71 ஆயிரத்து 863 மக்களின் தேவையாகவும் அதிகரிக்கவுள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே பேராற்றை வழிமறித்து வவுனியா மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டு வறுமை குறைக்கப்படவேண்டும் என்பது அனைத்துத் தரப்பினரின் ஏகோபித்த ஒருமித்த குரலாகும்.

ஏனெனில், ஒரு நாளைக்கு வவுனியா மக்கள் 29 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடிதண்ணீர் போத்தல் தேவையைப் பயன்படுத்துவதற்காக 15 லட்சத்து 95 ஆயிரம் ரூபா வீணாகச் செலவு செய்யப்படுகின்றது.

இந்த நிதிப்பயன்பாடு உடன் குறைக்ககப்பட்டு விவசாயிகளின் தேவைகளும் நிறைவேறுகின்ற அதே நேரம் குடிதண்ணீர் பேராறு ஊடாகக் கிடைக்க அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி முழுப்பயன்பாட்டை அடைய வேண்டும் என்பதே வவுனியா மக்களின் நோக்கும் - இலக்கும் ஆகும்.

எனவே இதுவரை காலமும் நிலத்தடி நீரைப்பயன்படுத்தி அதனால் அனேகருக்குத் தினமும் ஏற்படும் சிறுநீர்க் கல் உற்பத்தி, ஏனைய நீரினால் ஏற்படும் நோய்கள் முதலில் குறைக்கப்படும்.

அத்துடன் சுத்தமான - சுகாதாரமான குடிதண்ணீர் நிலைத்த-நீடித்த வாழ்வாதாரத்துக்குப் பேராறு ஒன்றே முழுமையான தீர்வை மக்களுக்குக் கொடுக்கவுள்ளது. (முற்றும்) *

செ.ரமேஷ்

## மழையால் சேதம்

வவுனியாவில் தொடரும் மழை காரணமாகக் கிராமங்கள் பலவற்றிலும் பாதைகள் ஊடாகப் பயணம் செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மழைக்கு முன்னரே இந்தப் பாதைகள் மோசமான நிலையில் இருந்தன. தற்போது பெய்து வரும் மழை காரணமாக இவை உபயோகிக்க முடியாதவாறு சேதமடைந்து காணப்படுகின்றன.

ஆசிகுளம் வீதிகள், சிவன் கோயில் வீதி என்பன பாவிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றன. (க-421)

## வங்கி வாடிக்கையாளர் பெரும் சிரமம்

வவுனியா, ஓக.23

வவுனியா மக்கள் வங்கியின் இரண்டு தன்னியக்கப் பணப் பரிவர்த்தனை இயந்திரங்களும் அடிக்கடி பழுதடைவதால் வாடிக்கையாளர்கள் ஏமாற்றமடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இவர்கள் தமது அவசர தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலுள்ளனர்.

மேலும் வங்கியின் கட்டட வேலைகள் தற்போது நடைபெறுவதனால் வங்கிக்குச் செல்வோர் தமது சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றைப் பாதுகாப்பாக நிறுத்த முடியாது திண்டாடுவதைக் காண முடிகின்றது. சைக்கிள்கள் பல திருட்டுப் போயுள்ளன.

எனவே கட்டட வேலைகள் முடியும் வரை தமக்குத் தற்காலிக ஏற்பாடுகளைச் செய்து தருமாறு வங்கி வாடிக்கையாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-431)

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற நீண்டகால உறுப்பினரும் மன்றத்தின் சேமிப்புத் திட்ட உறுப்பினருமான

### ஆறுமுகம் பரமநாதன்

*(உரிமையாளர் - ரிஷி தொலைத் தொடர்பகம் - சாவகச்சேரி)*

22.08.2011 இல் காலமானார். அன்னாரின் மறைவுக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் பரமநாதன்

*(ஓய்வு பெற்ற தபால் ஊழியர், உரிமையாளர், ரிஷி, தொலைத் தொடர்பகம், சாவகச்சேரி)*



நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோயில் குடியிருப்பு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பரமநாதன் நேற்று (22.08.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிஐயா - பாக்கியவதி தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வநிதியின் பாசமிகு கணவரும் தயாநிதி (பிரான்ஸ்) சிவநேசன் (U.K), குகனோன் (குகன், தபால் ஊழியர் சாவகச்சேரி), தவனேசன் (சேவைக்கால ஆலோசகர் (சித்திரம்) கொழும்பு தெற்கு கல்வி வலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வள்ளிநாயகி, காலஞ்சென்ற சோதிமதி மற்றும் பராசக்தி, பத்மாவதி, செல்வநாதன் (கனடா), கதிர்காமநாதன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - கணிதம் - தென்மராட்சிக் கல்வி வலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரன் (பிரான்ஸ்), சுஜீவா (U.K), தர்சினி, சரோஜா ஆகியோரின் அன்பு மாமனும் அஸ்வின், நிதுஷன், நிலுர்தன், ஏச்சல், சாமுவேல், செபலோன், ரிஷிகேசவன், கம்சாயினி, சிவானுஜன், தனுஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.08.2011) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத் தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோயிற்குடியிருப்பு, சாவகச்சேரி.* (சி/2815)

**தகவல்:** *குகன் (மகன்).*

## தளபாட விற்பனை

யாழ். கந்தர்மடத்தில் வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0718432004

வாழ்வின் சகல செளபாக்கியங்களும் தரும்

### சோ.கூ.றே.மணிமேர்க்கஸ் பெட்டகம்

கடன்தொல்லை, கல்வியில் முன்னேற்றமின்மை, வேலையின்மையும் பணக்கஷ்டமும், திருமணத் தடை, கொடிய நோய் களின் அவஸ்தை போன்ற வாழ்வின் மிக முக்கிய 5 பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு.

மனை, கடை, மற்றும் சகல வியாபார ஸ்தாபனங்களிலும் வைக்க உன்னத பலன் கிடைக்கும்.

விலை ரூபா 5100.00 மட்டும்.

எமது வாடிக்கையாளர்கள் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களுக்காகவும் வெற்றிகளுக்காகவும் எமக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர். அச்சான்றுகளை நாம் ஆதாரபூர்வமாகப் பதிவு செய்து வருகின்றோம். அதேபோல் உங்கள் வாழ்விலும் ஏற்பட்ட மாற்றங்களை எமக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உங்கள் இருப்பிடங்களுக்குத் தருவிப்பதற்கு அழையுங்கள்.

077 1399950.

## கட்டாக்காலி மாடுகள் ஏலவிற்பனை

அரியாலை கிழக்கில் பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகள் எதிர்வரும் 25.08.2011 வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு அரியாலை கிழக்கு பகுதியில் ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் பங்குபற்றி வெற்றிபெற்றவர்கள் உடனடியாகவே ஏலத்தொகையை செலுத்துவதுடன், ஏலம் விடப்படும் இடத்திலிருந்து மாடுகளை தாமதிக்காமல் எடுத்துச் செல்ல வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்.

**செயலாளர், நல்லூர் பிரதேச சபை.** (சி/3246)

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயராணி வைரவப்பிள்ளை



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் பிரதான வீதி, இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயராணி வைரவப்பிள்ளை (21.08.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வைரவப்பிள்ளையின் அன்பு மனைவியும் கமலதாஸ் (பெரியாம்பி), சிவதாஸ் (லண்டன்), சிவதர்சினி (லண்டன்), கிருஸ்ணதாஸ் (சின்னப்பா) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.08.2011) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முள்ளானை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரதான வீதி, இளவாலை.* (4220)

**தகவல்:** *வைரவப்பிள்ளை (கணவர்).*

## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 255 | சீட்டிழுப்புத் திகதி 21.08.2011

வெற்றி இலக்கங்கள்: 06 42 43 44 | சுப்பர் இலக்கம்: 04

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 9,155,540/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 117400 | ரூ. 20/= | ரூ. 2,348,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 10681 | ரூ. 40/= | ரூ. 427,240 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 9142 | ரூ. 100/= | ரூ. 914,200 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 827 | ரூ. 200/= | ரூ. 165,400 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 202 | ரூ. 1,500/= | ரூ. 303,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 21 | ரூ. 3,000/= | ரூ. 63,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 9,155,540/= | |
| மொத்த எண்ணிக்கை | 138274 | | ரூ. 5,220,840/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 9,512,540/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

அபிவிருத்தி லொத்தர் சபை

Webeite: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி பொலிஸாரின் ஏற்பாட்டில் கோணாவிலில் நடமாடும் சேவை

கிளிநொச்சி, ஓக.23

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட கோணாவில் பாடசாலையில் பொலிஸாரின் ஏற்பாட்டில் நடமாடும் சேவையொன்று நடைபெற்றுள்ளது.

கோணாவில், புதுமுறிப்பு காந்தி கிராமம், யூனியன் குளம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய வகையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்.டி நீல் தளுவத்தவின் ஏற்பாட்டில் இந்த நடமாடும் சேவை கடந்த 18 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கோணாவில் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

குறித்த நடமாடும் சேவையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மருத்துவ முகாமில் ஆயுள்வேத மருத்துவம், ஆங்கில மருத்துவம், இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல் போன்ற சேவைகளும் வழங்கப்பட்டன.

பிற்பகல் வரை இடம்பெற்ற நடமாடும் சேவை மூலம் 105 பிறப்பு இறப்புப் பதிவுகளும் 15 திருமணப் பதிவுகளும் தேசிய அடையாள அட்டைகளுக்கான 77 பொலிஸ் முறைப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. மற்றும் காயமடைந்தமை, பொருள்கள் தொலைந்தமை தொடர்பாக 73 முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் சமாதான நீதிவானினால் வழங்கும் சத்தியக் கடதாசிகள் 50 வழங்கப்பட்டன.

இந்த நடமாடும் சேவையின் ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன், கரைச்சிப் பிரதேச செயலர் நாகேஸ்வரன், பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்.டி நீல்தளுவத்த, கிளிநொச்சிப் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் சாலியசில்வா மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர். இதேவேளை காணி தொடர்பான ஆலோசனைகளும் காணி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டன.

இந்த நடமாடும் சேவையில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு தமக்கான பல்வேறு சேவைகளையும் பெற்றுக் கொண்டனர். (க-6)

## பிரதேச சபையின் அனுமதியின்றி இயங்கும் எரிபொருள் நிலையம்

விசுவமடு, ஓக.23

விசுவமடு விவசாயிகள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அனுமதியோ அங்கீகாரமோ பெறாமல் விசுவமடுச் சந்தியில் எரிபொருள் விற்பனை நிலையத்தை அமைத்து விற்பனையில் ஈடுபட்டுள்ளது.

மக்களுக்கு முன்மாதிரியாக நடக்க வேண்டிய மேற்படிச் சங்கம், சட்ட விதிமுறைகளுக்கு முரணாகச் செயற்பட்டமை குறித்து விசனம் அடைந்துள்ள அதிகாரிகள் சங்கத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளார்கள்.

வன்னிப் பிரதேசத்தில் இடம்பெற்ற போர்க் காலச் சூழ் நிலையைத் தொடர்ந்து, முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வீதியோரங்களில் கட்டடங்களை அமைப்பதில் பலர் ஈடுபட்டனர்.

தற்பொழுது போர் முடிவடைந்து சமாதானம் ஏற்பட்டுள்ள நிலையில் சிவில் நிர்வாகம் வழமைபோல் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் மக்களுக்கு முன்மாதிரியாக நடக்க வேண்டிய விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் அனுமதியின்றி விசுவமடுச் சந்தியில் எரிபொருள் நிலையத்தை அமைத்து எரிபொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ளது.

சங்கத்தின் இந்தச் செயற்பாடு குறித்து விசனம் அடைந்துள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள், சங்கத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (க-115)

### உழைப்பே உயர்வு...



ஆர்வமும் ஊக்கமும்: கிளிநொச்சி வேரவில் இந்து மகாவித்தியாலயத்தின் தோட்டத்தில் பொறுப்பாசிரியர் தீ.யஸ்ரின் மற்றும் மாணவர்கள் உடனிருக்கப் பாடசாலை அதிபர் திருமதி ப.சோதிலிங்கம் வாழைக்கன்று ஒன்றை நடுகின்றார்.

## மனித உரிமை ஆணைக்குழுவின் தொண்டர்களுக்கு அரசியல் சாயம்

### நடமாடும் சேவையில் அரச சார்பு கட்சி தலையீடு

கிளிநொச்சி,ஓக. 23

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின் போது உதவிபுரிந்த தொண்டர்கள் சிலர் தமக்கு அரசியல் சாயம் பூசப்படுவதாக வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி கிளிநொச்சி பாரதிபுரத்தில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவால் நடமாடும் சேவை ஒன்று நடத்தப்பட்டது. இதன்போது மனித உரிமை ஆணைக்குழுவால் பயிற்சி வழங்கப்பட்ட தொண்டர்கள் சிலர் தமக்கு வழங்கப்பட்ட பணிகளை மேற்கொண்டனர்.

அப்போது அரசுசார்பான அரசியல் கட்சியைச் சேர்ந்த சிலர் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன்தொலைபேசியில் தொடர்பு கொண்டு மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மூலம் சேவையை வழங்குகிறீர்களாவென வினாவியுள்ளனர். அத்துடன் சிலர் வாகனத்தில் வந்து நேரடிக் கண்காணிப்பிலும் ஈடுபட்டனர்.

இதேவேளை சில இராணுவத்தினரும் சிலரின் பெயர்களைச் சுட்டிக்காட்டி ஏதோ கூறியதையும் அவதானிக்க முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-426)

## பெற்றெடுத்த சிசுக்களைக் கொன்ற இரு கொடூர தாய்மார் மறியலில்

கிளிநொச்சி, ஓக. 23

தான் பெற்றெடுத்த குழந்தையைக் குப்பைக்குள் போட்டு எரித்த தாயும், தனது இரட்டைக் குழந்தைகளைக் கொலை செய்து புதைத்த தாயும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, அக்கராயன் குளம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை தான்பெற்றெடுத்த குழந்தையைத் தாய் குப்பைக்குள் போட்டு எரித்த சம்பவம் நடந்துள்ளது.

இந்தப் பெண் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அடுத்த நாள் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டாள். இவரை எதிர் வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார்.

இதேவேளை நான்கு மாதங்களுக்கு முன்னர் அக்கராயன் குளப் பகுதியில் தான் பிரசவித்த இரட்டைக் குழந்தைகளைக் கொன்று புதைத்த பெண் தொடர்பான வழக்கு கடந்த 18 ஆம் திகதி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சாட்சியங்களைப் பதிவுசெய்த பின்னர் குறித்த பெண்ணை அடுத்த மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மேற்படி இரு சிசுக்கொலைச் சம்பவங்களும் ஒரே இடத்தில் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## கிறிஸ்தவ சேமக்காலையில் மண் அகழ்வு

வவுனியா, ஓக.23

ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பு என்னும் இடத்தில் உள்ள கிறிஸ்தவ சேமக்காலையில் சிலர் மண் அகழ்வு வேலைகளை மேற்கொள்வதால் அங்கு அமைக்கப்பட்ட தமது உறவினர்களின் நினைவுச் சின்னங்கள் இடிந்துபோகும் அபாய நிலை தோன்றியுள்ளதாக இங்குள்ள மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கூழாமுறிப்புக் கிராமத்தில் சுமார் 100 குடும்பங்கள் வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் மீள்குடியமர்ந்து வசித்து வருகின்றன. இங்கு வாழும் மக்களில் பெரும்பான்மையானவர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இந்தச் சேமக்காலையில் தமது உறவினர்களை அடக்கம் செய்வதோடு நினைவுச் சின்னங்களையும் அமைத்துள்ளனர்.

இந்த நிலையில் மண் அகழ்வினால் நினைவுச் சின்னங்கள் இடிந்து விழும்நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-431)

## சிறுநீரக நோயாளிகள் பதிவுகளை மேற்கொள்ளலாம்

வவுனியா, ஓக.23

வவுனியாப் பிரதேசத்தில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவிலுள்ள 14 ஆம் இலக்க அறையில் தம்மைப் பதிவு செய்யுமாறு வைத்திய நிபுணர் மகேஸ்வரன் உமாகாந்தன் கேட்டுக் கொண்டுள்ளார்.

வவுனியாவின் பல பிரதேசங்களிலும் மக்கள் நாள்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இளவயதினரும் அடங்குகின்றனர்.

ஆனால் கடந்த கால அசாதாரண சூழ்நிலை காரணமாக இவர்கள் சரியான முறையில் தம்மைப் பதிவு செய்யவில்லை. அத்துடன் முறையான வைத்திய சேவைகளையும் இவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. எதிர்காலத்தில் இவர்கள் பாரதூரமான விளைவுகளுக்கு உள்ளாகக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

எதிர்காலத்தில் வவுனியா பொது வைத்தியசாலையில் ஒரு சிறுநீரக மையத்தை உருவாக்குவதே தமது நோக்கமெனவும் வைத்திய நிபுணர் மேலும் தெரிவித்தார். (க-431)

## மர்ம நபர்களின் நடமாட்டம் தொடர்பாக மன்னாரில் விளக்கமளிக்கும் கூட்டம்

மன்னார், ஓக.23

மன்னார் மாவட்டத்தில் மர்ம நபர்களின் நடமாட்டம் தொடர்பாக மன்னார் மாவட்டத்தில் உள்ள கிராம அலுவலர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் ஒன்று இராணுவத்தின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை மு.ப.10.30 மணியளவில் மன்னார் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.



இதன்போது மன்னார் பிரதேச செயலர் திருமதி ஸ்ரானிலி·டிமெல், மன்னார் நகர பிதா எஸ்.ஞானப்பிரகாசம், மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அத்துக்கோரள, இராணுவத்தின் 54 ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி மைத்திரி டயஸ், இராணுவத்தின்543ஆவது படைப் பிரிவு அதிகாரி ராமநாயக்கா மற்றும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கிராம சேவையாளர்களும் கலந்துகொண்டனர்.

நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்டுள்ள மர்ம நபர்களின் நடமாட்டம் மன்னார் மாவட்டத்திலும் ஏற்பட்டுள்ளது. இதனால் மன்னார் மக்கள் பெரிதும் அச்சத்தில் உள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மர்ம நபர்கள் காணப்பட்டால் உடனடியாகப் பொலிஸாருக்கு அல்லது இராணுவத்தினருக்கு அறிவியுங்கள். அவர்களைப் பிடிக்கும் பட்சத்தில் அவர்களைத் துன்புறுத்தாது பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு அனைவரிடமும் வேண்டுகோள் விடுப்பதாக இராணுவத்தின் 54 ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி மைத்திரி டயஸ் தெரிவித்தார்.

இதே சமயம் கிறீஸ் மனிதர்கள் என்ற போர்வையில் மன்னார் மாவட்டத்தில் திருடர்களும் நடமாடித்திரிகின்றனர். மன்னாரில் இதுவரை மூன்று கொள்ளைச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

எனவே கிராம அலுவலர்கள் தங்கள் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் விழிப்புடன் செயல்படுவதற்கு ஏதுவாக இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்துமாறு கிராம அலுவலர்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார். (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள். சில வேலைகளை தவறாகச் செய்து விட்டு, ஒன்றுக்கு இரண்டு முறை செய்யலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரை, தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அவர்கள் இல்லாமல் போகலாம். மற்றவர்களின் அனுபவங்களில் இருந்து சில பாடங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**இடபம்:**
மற்றவர்கள் செய்யத் தயங்கும் சில காரியங்களை, நீங்கள் துணிச்சலாகச் செய்வீர்கள். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். பெரிய மனிதர்கள் சிலர், உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல், சாக்குப் போக்குச் சொல்லலாம்.

**மிதுனம்:**
போட்டி, எதிர்ப்புகளால் மன உளைச்சல்களுக்கு ஆளாகலாம். புதியவர்கள் சிலர், உங்களின் வீட்டிற்கு வரலாம். நீங்கள் மலைபோல் நம்பிய ஒருவர், கடைசி நேரத்தில் கைவிடலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். மற்றவர்கள் செய்யத் தவறிய காரியங்களால் நீங்கள் பிரச்சினைகளைச் சந்திக்கலாம்

**கடகம்:**
குடும்பத்தினரின் குணம் அறிந்து நடந்து கொள்வீர்கள். சில வேலைகளைத் தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். உறவினர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வீர்கள்.

**சிங்கம்:**
தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய கடன் மிகுதிகள் வரலாம். குழப்பம் இல்லாமல், எந்த விடயத்திலும் தெளிவான முடிவு எடுப்பீர்கள். உங்களின் ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். நீண்டநாள்களாக எதிர்பார்த்த வாய்ப்பு ஒன்று தேடி வரலாம்.

**கன்னி:**
நீங்கள் செல்லும் இடத்தில் உங்களுக்குப் பிடிக்காத ஒருவரைச் சந்திக்கலாம். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கி விட்டு அவதிப்படுவீர்கள். வீட்டில் உள்ளவர்களுடன் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். உங்களின் சில செயற்பாடுகளால் மற்றவர்களுக்குப் பாதிப்பு ஏற்படலாம். ஆலய வழிபாடுகள் மூலம் அமைதி பெறுவீர்கள்.

**துலாம்:**
உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். மதிப்பு, கௌரவத்திற்கு பாதிப்பு வரும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் தண்டச் செலவுகள் நேரும். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி தொந்தரவு கொடுக்கலாம். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம்.

**விருச்சிகம்:**
சிலரிடம் சொல்லக் கூடாது என நினைத்த விடயம் ஒன்றை திடீரெனச் சொல்லலாம். பிள்ளைகள் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்கள் கேட்ட கடனுதவியைச் செய்வீர்கள். உறவினர்கள் சிலரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். நீங்கள் குறைவாக மதிப்பிட்ட ஒருவர் மூலம், பெரிய அளவில் உதவி கிடைக்கும். பயண அலைச்சல் உண்டு.

**தனுசு:**
மற்றவர்கள் குறை சொல்லாத வகையில் எந்த வேலையையும் செய்ய முற்படுவீர்கள். முக்கியமான விடயங்களில் சிலரிடம் வாக்குறுதி கொடுப்பீர்கள். நெடுநாளைய கடன் பாக்கி ஒன்றை தீர்ப்பீர்கள். மருத்துவம் தொடர்பான காரியங்களுக்காக அலைய நேரிடலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். தந்தை வழியில் உதவி கிடைக்கலாம்.

**மகரம்:**
சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு பயணம் மேற்கொள்ளலாம். உடல் சோர்வு, அசதி ஆள்கொண்டாலும் அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அவதிப்படலாம். சில வேலையாக வெளியில் செல்லும் போது, அங்கு பழைய நண்பர் ஒருவரைப் பார்க்கலாம். வயிறு, வாயு உபாதைகளால் அவதிப்படலாம்.

**கும்பம்:**
பணிபுரிவோர் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். சிலர் உங்களின் கருத்துக்களுக்கு எதிர்க்கருத்துக்கள் சொல்லி எரிச்சல் உண்டாக்கலாம். பிள்ளைகள் உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். உங்களுக்குத் தெரிந்த ஒருவரை மற்றொருவருக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்கள்.

**மீனம்:**
உங்களுக்குப் பிடித்தமான சில பொருள்களை வாங்குவீர்கள். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான சில நிகழ்ச்சிகள் நடக்கலாம். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்கள் மூலம் முடிப்பீர்கள். சிலரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். பல மணி நேரமாகும் என நினைத்த காரியம் ஒன்று, சில நிமிடங்களில் முடியும்.

# இந்திய மாய வ... மீண்டும் சிக்... ஈழத் தமிழ...

இரா. புத்திரசிகாமணி

1948 இல் இலங்கைக்குச் சுதந்திரம் கொடுத்த வெள்ளையர் இங்கு வாழ்ந்த அனைத்து இன மக்களுக்குமாகவே அதனை வழங்கினர். ஆனால் சுதந்திரத்தின் பின்னர் அதனை அனுபவிக்கும் உரிமை பெரும்பான்மையினருக்கான ஏகபோக சொத்தாக மாற்றப்பட்டுவிட்டது.

அடிமைப்பட்டிருந்த காலத்தில் இலங்கையில் வாழ்ந்த அனைவரையும் ஆங்கிலேயர்கள் இலங்கையர் என்று வகைப்படுத்தினர். ஆனால், சுதந்திரம் அடைந்த பின் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் இங்குள்ளவர்களை சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், இஸ்லாமியர், பறங்கியர் என்று மொழி ரீதியாகவும், மத ரீதியாகவும் பிரித்துக் கூறாக்கியது. அத்துடன் அதனைப் பாடசாலைப் புத்தகங்களில் பாடங்களாக்கி, ஒவ்வொரு குழந்தையின் மனதிலும் ஆழமாகப் பதிய வைத்தது.

அதோடு நின்றுவிடாமல் பிரஜா உரிமைச் சட்டம் என்ற ஒன்றைக் கொண்டு வந்து, இந்த நாட்டின் வளத்திற்காக தம்மையே அர்ப்பணித்த ஓர் இனத்தவர்களுக்கு ''நாடற்றவர்கள்'' என்ற பட்டை நாமத்தைச் சூட்டியது இலங்கை அரசு.

### ஒப்பந்த அழிவுகள்

அந்தக் காலம் தொட்டே இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் தமிழர் விரோத ஒப்பந்தங்கள் தொடர்ச்சியாகச் செய்யப்படுகின்றன.

* நேரு - கொத்தலாவல ஒப்பந்தம்
* இந்திய, பாகிஸ்தானியர் பிரஜா உரிமைச் சட்டம்.
* சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம்

இவ்வாறு பல செய்து கொள்ளப்பட்ட போதெல்லாம் தமிழர்களின் பெயரால் இந்திய, சிங்கள நலன்கள் முன்னிலைப்படுத்தப்பட்டனவே தவிர தமிழர்களின் நலன்கள் கவனத்தில் எடுக்கப்படவே இல்லை.

அதன் உச்சமாக 1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதிலும் தமிழர்களின் நலன்கள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டன.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசில் பலம் பொருந்திய அமைச்சராகவும், பின்னர் பிரதமராகவும் தொடர்ந்து ஜனாதிபதியாகவும் பதவி வகித்த ரணசிங்க பிரேமதாஸ, 1988ஆம் ஆண்டில் இலங்கையில் வாழும் அனைவருமே இலங்கை குடிமக்கள்தாம் என்று பிரகடனப்படுத்தினார். இந்திய பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்கவில்லை என்றோ இந்திய பிரஜா உரிமை பெற்றவர்களாக இல்லை என்றோ ஒரு சத்தியக் கடதாசியைச் சமர்ப்பிப்பதன் மூலம் இந்திய வம்சாவளியினர் அனைவரும் இலங்கையின் அசைக்க முடியாத குடிமக்களாகிவிட முடியும் என்று அவர் அறிவித்தார். இந்த நடவடிக்கை மூலம் ஏனைய சமூகத்தவர்களைப் போன்று வாக்களிக்கவும் அரச நியமனங்களைப் பெறவும் காணிகளை வாங்கவும் மலையகத் தமிழர்களாலும் முடியும் என்ற நிலைமையை ஏற்படுத்தினார்.

ஆனாலும் 1977களில் தேர்தல் முடிவுகளின் பின் ஏற்பட்ட கலவரம் 1981, 1983 இனக்கலவரங்கள் என்பவற்றால் சிங்களத் தலைமைகள் - (பிரேமதாஸ உட்பட) - இனங்களுக்கு இடையே பகையை வளர்த்து பிரிவினையை ஊக்குவித்தன.

சிங்களவர்களால் தாலாட்டிப் பாலூட்டி வளர்க்கப்பட்ட இன வன்முறையின் குழந்தையாக இந்த நாட்டில் ஆயுதப் போராட்டம் பிறப்பெடுத்தது.

### இந்திய - இலங்கை ஒப்பந்தம்

அதனை முடிவுக்குக் கொண்டுவர இந்திய - இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்டது என்று கூறப்பட்டாலும் அதில் புதுடில்லியின் நலன்கள் மட்டுமே முக்கியத்துவப்படுத்தப்பட்டதால் பிரச்சினையில் தொடர்புபட்ட இரு தரப்புக்களுமே அதனை நிராகரித்தன.

அன்று இந்தியாவின் தேவை இலங்கையில் தனது பிராந்திய மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதாக இருந்ததே தவிர, தமிழர்களுக்கு உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதாக இருக்கவில்லை.

அதனால் ''தமிழ் மக்களைப் பாதுகாக்கவே வந்தோம்'' என்று கூறிக் காலடி வைத்த இந்தியப் படையினர் தமிழர்களுக்கு எதிராகவே தமது வேட்டுகளைத் தீர்த்தனர், பாதுகாக்க வந்தவர்கள் கொன்று குவித்ததைத் தமிழர்கள் கைகட்டி வாய்பொத்திப் பார்த்திருக்க வேண்டியதாயிற்று.

இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் நடத்தை கடந்த 60 ஆண்டுகளிலும் இவ்விதமே இருந்தது. கொழும்பும் புதுடில்லியும் தமக்கிடையே அரசுகள் என்ற ரீதியில் உறவுகளைப் பராமரிக்கின்றன. அதற்கு மத்தியில் ஈழத் தமிழர்கள் என்போர் ஒரு கொசுறு மட்டுமே.

இந்த அடிப்படையிலேயே ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் நேரடித் தலையீடு அமைந்திருக்கிறது. புதுடில்லி ஒருபோதும் தமிழர்களுக்காகப் பரிந்து பேசப்போவதோ ஆதரவாக நடக்கப் போவதோ இல்லை. ஆனால், இலங்கை அரசைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வதற்காக அது ஈழத் தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தும்.

### டில்லியின் 'ரிமோட் கொன்ரோல்'

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் தோல்வி மற்றும் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை என்பவற்றுடன் ஈழத் தமிழர் பிரச்சினையில் இருந்து ஒதுங்கிக் கொள்வதாகப் புதுடில்லி கடந்த காலங்களில் போக்குக் காட்டிய போதும், விடுதலைப் புலிகள் இயக்கத்தை முற்றிலுமாக அழித்தொழித்து, ஈழத் தமிழர் பிரச்சினை என்ற 'ரிமோட் கொன்ரோலை' தனது கைகளில் எடுத்துக் கொள்ள அது இரகசியமான பல நடவடிக்கைகளைச் செய்தது.

அரசு என்ற ரீதியில் இலங்கையுடன் இருந்த உறவுகளைப் புதுடில்லி தனது இரகசிய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டது.

முள்ளிவாய்க்காலில் மக்கள் கொத்துக் கொத்தாகக் கொன்று குவிக்கப்பட்டதை மூடிமறைத்து, சிறிலங்காவின் கொலைக்களத்தை புதுடில்லி ஆதரித்து நின்றதற்கான ஒரே காரணம், இலங்கை அரசை தனது இஷ்டப்படி ஆட்டி வைப்பதற்கான, ஈழத் தமிழர் பிரச்சினை என்ற 'ரிமோட் கொன்ரோலை' தனது கைகளில் எடுக்கவேண்டும் என்பது மட்டுமே.



இந்தியாவின் ஏற்பாடு மற்றும் அழுத்தத்தால் 1985 ஏப்ரல் மாதம் ... அனைத்தைத்தும் ஓரணியில் ஒன்றிணைந்து போராடுவதற்கு ... பட்ட பின்னர், ரெலோ தலைவர் சிறிசபாரத்தினம், ஈபிஆர்எல்... தலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், ஈரோஸ் தலைவ... ஒன்றாக எடுத்து வெளியிடப்பட்ட ஒளிப்படம். இது. இந்தியா... பட்ட இந்த ஒற்றுமை பின்னாளில் காணாமற் போனமை வர...

### தமிழகத்தில் எதிர்ப்பு

ஈழத் தமிழர்களின் அவலங்களைச் சகிக்க முடியாத தமிழ் நாட்டுத் தமிழர்கள் உணர்ச்சிக் கொந்தளிப்பில் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட ஆரம்பித்தனர்.

இந்தியாவின் பிரதான எதிர்க் கட்சிகளான பாரதீய ஜனதாக் கட்சி, இந்திய மார்சிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்பனவும் ஈழத் தமிழர் பிரச்சினையைத் தமது கைகளில் எடுத்துக் கொண்டன. விழிப்புணர்வுப் போராட்டங்களையும் மத்திய அரசுக்கு அழுத்தம் தரும் போராட்டங்களையும் அக்கட்சிகள் முன்னெடுக்க ஆரம்பித்தன.

இவற்று...
தற்போது அ...
றக் கழகம், ...
ஆழமான க...
போர்க் ...
தேச குற்றவ...
டும், இலங்...
களை விதிக்...
பில் (பேல்வ...
றினார்.
இவ்வாற...
லிக்குச் சிக்...
என்கிற ரிமோ...
படி ஆட்டி ...
மாட்டா.
எனவே சி...
களை இந்தி...
...
அதில் மு...
சாட்டில் தண்...
10 ஆண்டு...
உறுதிப்படுத்...
மூண்டெழுந்...

யைத் திசை ...
மற்றொன்...
பிரதிநிதிகளை...
பிரச்சினைத் ...
ஒருமைப்பா...
தமிழ்க் க...
மைப்படுத்து...
பட்டாலும் இ...
அரசுக்கு நெ...
புதுடில்லியை...
றைத் தமிழ்க்...
நடந்து ...
தமிழ்த் தேசி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ய வலையில் சிக்குவரா மிழர்கள்?

இவற்றுக்கு எல்லாம் மேலாக தமிழகத்தைத் தற்போது ஆளும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஈழத் தமிழர்கள் பிரச்சினை குறித்து ஆழமான கவனிப்பைச் செலுத்துகிறது.

போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும், இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்டசபையில் முதல்வர் ஜெயலலிதா தீர்மானம் நிறைவேற்றினார்.

இவ்வாறான உள்வீட்டு அழுத்தங்கள் புதுடில்லிக்குச் சிக்கலானவை. ஈழத் தமிழர் பிரச்சினை என்கிற ரிமோட் கொன்ரோலைத் தனது இஷ்டப்படி ஆட்டி வைக்க இந்த அழுத்தங்கள் இடந்தரமாட்டா.

எனவே சிக்கலைச் சமாளிப்பதற்கான இரு வழிகளை இந்திய அரசு நடைமுறைப்படுத்தி உள்ளது.

### டில்லியின் இராஜதந்திரம்

அதில் முதலாவது, ராஜீவ் கொலைக் குற்றச்சாட்டில் தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களுக்கு 10 ஆண்டுகள் கழித்து மரண தண்டனையை உறுதிப்படுத்தியமை. இதன் மூலம், தமிழ் நாட்டில் மூண்டெழுந்து வந்த ஈழத் தமிழர் ஆதரவு அலை



1985 ஏப்ரல் மாதம், ஈழப் போராட்டக் குழுக்கள் போராடுவதற்கு முடிவெடுத்ததாக அறிவிக்கப் னெம், ஈபிஆர்எல்எவ் தலைவர் பத்மநாபா, விடு ஈரோஸ் தலைவர் வே.பாலகுமாரன் ஆகியோர் ம். இது. இந்தியாவின் தேவைக்காக ஏற்படுத்தப் ற் போனமை வரலாறு.

யைத் திசை திருப்பி விட்டது புதுடில்லி.

மற்றொன்று, இலங்கைத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளைப் புதுடில்லிக்கு அழைத்து இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பில் அவற்றை கருத்து ஒருமைப்பாட்டுக்குக் கொண்டு வருவது.

தமிழ்க் கட்சிகளை தீர்வு தொடர்பில் ஒற்றுமைப்படுத்துவது என்று வெளியில் இது சொல்லப்பட்டாலும் இதன் உண்மையான நோக்கம், இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுக்கக்கூடிய ஆனால், புதுடில்லியை மீறிச் செல்லாத தீர்வு வடிவம் ஒன்றைத் தமிழ்க் கட்சிகள் மீது திணிப்பதுதான்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற பெரு வெற்றியின் மூலம் தன்னிச்சையான முடிவுகளுக்கு - அதாவது புதுடில்லிக்குக் கட்டுப்படாத முடிவுகளுக்கு - கூட்டமைப்புச் சென்றுவிடக்கூடாது என்று இந்தியா அஞ்சுகிறது.

### இந்தியாவின் சுயநலம்

தமிழ் மக்களிடம் தமக்கிருந்த பெரும் ஆதரவின் காரணமாகவே விடுதலைப் புலிகள், எந்த ஓர் ஏகாதிபத்திய சக்திகளுக்கும் கட்டுப்பட மறுத்தனர் என்ற பாடம் புதுடில்லிக்குத் தெரிந்தே இருக்கிறது. அத்தகைய ஒரு நிலையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எட்டுவதற்கு முன்னர், அது மீற முடியாத எல்லைக்கோடு எது என்பதை அதற்குத் தெளிவுபடுத்துவதே புதுடில்லியில் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் புதுடில்லியில் கூட்டி உள்ள கூட்டத்தின் நோக்கம்.

கூட்டமைப்போ அல்லது வேறு எந்தவொரு தமிழர் கட்சியோ ஈழத் தமிழர்கள் மத்தியில் அதீத பலம் பெறுவது புதுடில்லியின் நலன்களுக்குப் பாதகமானது என்று அதன் மூலோபாய வகுப்பாளர்கள் அஞ்சுகிறார்கள். எனவே பன்மைவாதம் ஜனநாயகம் என்ற போர்வையின் கீழ், ஈழத் தமிழர் அரசியல் சக்தியைப் பல கூறுகளாகப் பிரித்து வைப்பதற்கு அது விரும்புகிறது. இப்போது இருப்பது போன்ற அரசு சார்பு மற்றும் அரசு எதிர்ப்பு என்கிற இரு தெளிவான பிரிப்பு மட்டும் தமிழ் அரசியல் நிலைப்பாட்டில் இருப்பதை புதுடில்லி விரும்பவில்லை. பல அணிகள் இருப்பதே குட்டையை விரைவில் குழப்புவதற்கு வசதியானது. அதற்காகவே கூட்டமைப்பு என்று ஒன்று இருக்கத் தக்கதாக, தமிழ்க் கட்சிகள் என்று வகைப்படுத்தி தனித் தனியாக புதுடில்லிக்கு அழைத்திருக்கிறது காங்கிரஸ்.

தனது வெளிநாட்டு உளவுப் பிரிவான றோவின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஈஎன்டிஎல்எவ் அமைப்பையும் அரசியல் கட்சியாக்கி இந்தக் கலந்துரையாடலில் புதுடில்லி சேர்த்துக் கொண்டிருப்பதன் பின்னணி இதுவே.

நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண அக்கறைக் காட்டாத இலங்கை அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்தி வந்த பேச்சுக்கள் முறிந்து விட்டன. கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்கு எழுத்து மூலம் பதில் அளிக்க விரும்பாத அரசு, நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஊடாகக் காய்களை நகர்த்த முயற்சிக்கிறது.

இப்படியான சூழ்நிலையிலேயே தமிழ்க் கட்சிகளை இந்தியா நாளையும் நாளை மறுதினமும் புதுடில்லியில் சந்திக்கிறது.

### எதிர்ப்பும் தேவையும்

கடந்த முறை இலங்கை வந்திருந்த இந்திய மூவரணி (வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், பாதுகாப்புச் செயலர் பிரதீப் குமார்), நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை எதிர்க்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கோரி இருந்தது.

''நீங்கள் தெரிவுக்குழுவை கடுமையாக எதிர்த்தால் மட்டுமே எம்மால் ஏதாவது பேசக்கூடியதாக இருக்கும்'' என்று அப்போது மூவரணியினரால் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனாலேயே கூட்டமைப்பினர் தெரிவுக் குழு யோசனை குறித்து ஆரம்பத்தில் தீவிரமான எதிர்க்கருத்துக்களைத் தெரிவித்து வந்தனர். ஆனால், அரசு அனைத்தையும் புறக்கணித்து தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான நோக்கோடு தெரிவுக் குழுவை முன்வைத்துள்ளது.

இந்த நிலையில் தனது 'ரிமோட் கொன்ரோலை' இந்திய அரசு முழுமையான 'சார்ஜ்'ஜில் வைத்திருக்க விரும்புகிறது. அதற்காகவே புதுடில்லிக் கலந்துரையாடல்கள்.

புதுடில்லி ஈழத் தமிழர் நலன் சார்ந்து ஒருபோதும் இயங்காது என்ற யதார்த்த நிலையில், அதனை எப்படிப் பயன்படுத்தி தமிழர் உரிமையை வென்றெடுப்பது என்பதே தமிழ்த் தலைமைகளின் முன்புள்ள இன்றைய சவால்.

### தமிழரின் தேவை

டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நடத்தி வரும் சரணாகதி அரசியல் எப்படித் தமிழர்களுக்கு எதையும் பெற்றுத் தராதோ அதேபோன்றுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற அரசியல் அமைப்புக்கள் இந்தியாவிடம் சரணாகதி அரசியல் நடத்துவதாலும் எதுவும் கிடைக்கா.

கடந்த காலங்களில் விட்ட தவறுகளில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு புத்திசாலித்தனத்துடன், வில்லங்கம் பிடித்த புதுடில்லியைக் கையாள்வதே தற்போதைய தேவை.

இங்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தியா முயற்சிப்பதாகக் காட்டப்படும் தோற்றப்பாடு வரவேற்கத்தக்கது. எனினும் அதன் பின்னால் உள்ள சுயநல நோக்கங்கள் ஆராயப்படாமலே விடப்படலாகாது. அதுவே எமது சாபமாக மாறிவிடும் அபாயமும் உண்டு.

(உ)

---

# உள்ளமே கோயில்; உடம்பே ஆலயம்!



'கோயிலுக்குப் போகவேண்டும்' என்கின்ற ஆசை பலருக்கு வரும். ஆனால் கோயில் கட்டவேண்டும் என்னும் ஆசை எத்தனை பேருக்கு வரும்?

கையில் பணமும் பலமும் இருக்கிற அகங்காரத்தால் கோயில் கட்டுகிறவர்களை விட்டுவிடுவோம். உன்னதமான லட்சியத்தோடு, இப்படி ஒரு கோயில் இதுவரை கட்டப்படவில்லைஎன்றுஎல்லோரும்நினைக்கும்படி, பக்திச் சிரத்தையோடு திருப்பணி செய்கிற மனம் ஓர் ஏழைக்கு ஏற்பட்டுவிட்டது.

அவர் ஓர் ஏழை அந்தணர். அன்றாட உணவுத் தேவைகளைத் தமது மரபுக்கேற்ப யாசகம் பெற்று உண்பவர். சேகரித்து வைத்துக் கொள்ளும் பொருளாதாரப் பாதுகாப்புப் பாதிப்புக்களைத் தாண்டி, எல்லாம் ஈசன் செயல் என்று வாழும் ஞான வாழ்வினர். அவருக்கு ஓர் ஆசை வந்தது. சிவனுக்குக் கோயில் கட்ட விரும்பினார். சின்ன அளவில் அல்ல... பெரிய அளவில்... சோழ ராஜாக்களுக்கு இப்படி ஆசை வந்தால் கஜானா தாங்கும். ஏழைப் பிராமணருக்கு இப்படி ஆசை வரலாமோ?

சென்னைக்குப் பக்கத்தில் உள்ள திருநின்ற ஊரில்தான் அவர் வாழ்ந்த அந்த ஏழைதான் பூசலார். அவர் சிவபக்தர். சிவனுக்குக் கோயில் கட்ட நினைத்துப் பொருள் தேடினார். முயன்று முயன்று ஆலயம் எடுக்கச் செல்வம் தேடியும் அவருக்குக் கிடைக்கவில்லை. அதுதான் பெருமான் வைத்த சோதனை போலும். திருநின்ற ஊரிலேயே 'திரு' கிடைக்கவில்லை யென்றால் அது இறைவன் ஏற்பாடாகத்தான் இருக்கவேண்டும்.

சோதனை இல்லாத சாதனையில் என்ன பெருமை இருக்கிறது? சோதனை பலருக்கு வேதனையில் முடிகிறது. சிலருக்குச் சாதனையில் முடிகிறது! கொஞ்சமும் கலக்கம் இன்றித் தமது திருப்பணியைத் தொடங்கினார்.

எப்படி? இருந்த இடத்தில் இருந்தபடியே மனத்தால் கோயில் கட்டும் மகத்தான முடிவு எடுத்தார். ஒரு மாயசாதனை போல் மனதுக்குள் கோயில் கட்டும் திருப்பணி தொடங்க நாள் குறித்தார். மாபெரும் நிலப்பரப்பை மனத்தாலேயே வாங்கினார். சுத்தம் செய்ய எத்தனை நாள் ஆகுமோ அத்தனை நாள் மனத்தாலேயே சுத்தம் செய்தார்

குறித்த நாள், குறித்த வேளையில் திருப்பணி தொடங்கியது. எத்தனை ஆள்கள் எத்தனை நாள்களில் அத்திவாரம் தோண்டுவார்களோ அத்தனை நாள்கள் ஆனது. மெல்ல மெல்ல கருங்கல் கோயில் நெஞ்சில் வளர்ந்தது. ஆறு மண்டபங்கள்... ஆகாயத்தைக் கீறும் ராஜகோபுரம்... ஆகம விதிப்படி அமைந்த அருமைக் கற் கோயில். சில்லென்று குளிரடிக்கும் சீரிய தெப்பக் குளம்... என்று முழுமையான கோயிலை மெல்ல மெல்ல அமைத்தார்.

ஆண்டுகள் நகர்ந்தன. முதுமை வர வர மரணம் வருமோ என்கிற எண்ணம் வந்தது. வாழ்வு நிலையற்றது என்று வருந்தித் தலைமைத் தச்சரை அழைத்தார். கோயிலை முடிக்கு முன்பு மரணம் வந்து விடுமோ என்ற தம் கவலையைத் தெரிவித்தார். அவரும் உன்னதமான சிற்பி. இனி இரவும் பகலும் வேலை செய்து திருப்பணியை விரைவில் முடித்துத் தருவதாக வாக்களித்தார். விரைவாக நடந்தது திருப்பணி.

கும்பாபிஷேசம் செய்ய ஆகம அறிஞர் துணையோடு நாளும் நேரமும் நன்கு குறித்தார். அதே காலகட்டத்தில் காஞ்சிபுரத்தில் கல்லால் ஒரு கலைக்கோயில் கட்டிக் கொண்டிருந்தான் பல்லவ மன்னன். கைலாசம் சிவனுக்குக் கஷ்டமாக இருந்தால் கால மெல்லாம் இருக்கும்படியாகச் கைலாசநாதர் கோயில் கட்டி முடித்தான்.

இரண்டு இடத்திலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் கும்பாபி ஷேகம். யாக பூஜைகள் தொடங்கிவிட்டன. இரண்டு இடத்திலும் ஒரே நேரத்தில் இருக்கக்கூடிய இறைவனுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அரசன் கனவில் சிவபெருமான் தோன்றினார். ஆலயக் குடமுழுக்கை மாற்றி வேறொரு நாள் நடத்தும்படி மன்னனுக்கு ஆணையிட்டார். ஆணையை ஏற்ற அரசன் கேட்காமலேயே காரணமும் சொன்னார்... ''திருநின்ற ஊரில் வாழும் பூசலார் என்ற அன்பர் கட்டிய ஆலயத்துக்கு நாளை நாம் எழுந்தருளுவதால் நீ எடுத்த திருக்கோயிலுக்கு நம்மால் வர இயலாது'' என்றார்.

பூசலார் மேன்மையை உலகம் புரிந்துகொள்ளும் பொருட்டு தமது பெருமையை இறைவன் தாழ்த்திக் கொண்டார். அரசன் அமைத்த ஆலயத்தை விட அன்பன் அமைத்த ஆலயம் தமக்கு உவப்பு என்று அறிவித்தார். 'நின்ற ஊர் பூசல் அன்பன் நெடிது நாள் நினைத்து செய்த நன்று நீடு ஆலயம்' என்று சிவபெருமான் சொல்வதாக எழுதினார் சேக்கிழார்.

மனிதன் கோயிலுக்குப் போவதே தன்னைக் கோயிலாய் ஆக்கத்தான். சீவனை சிவனாக்குவதே வாழ்க்கையின் இலட்சியம். அப்படி ஆக்கிவிட்டால் ஒவ்வொரு உடம்பும் ஒவ்வொரு ஆலயம் திருமூலர் வாக்கின்படி நாமெல்லாம் தலம் தலமாகப் போய்த் தரிசிப்பது வழிபாட்டில் முதல் நிலை. தன்னையே தலமாக்குவது நிறைநிலை. உடம்பே திருத்தலம். அதில் பெருகும் கண்ணீர் புண்ணிய தீர்த்தம்... இதனைத் தரிசிக்கப் பயணம் போவதானால் உள்நோக்கிப் போகவேண்டும். மற்றைய தலயாத்திரையில் இரு விழிகளையும் அகலத் திறக்கவேண்டும். இந்தத் தலயாத்திரையில் இறுக மூடிக்கொள்ள வேண்டும்.

சுகி. சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு அத்தியாவசியமான பரிபூரண காப்புறுதித் திட்டம்

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் இந் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பல தசாப்தங்களாக மிகப்பெரிய பங்களிப்பைச் செய்துள்ளார்கள். எனினும், தங்களது பணிக் காலத்தில் அவர்கள் வெளிநாடுகளில் முகம்கொடுக்கும் இக்கட்டுகளும் பிரச்சினைகளும் ஏராளம். அவற்றுள் ஒரு சில வெளிச்சத்துக்கு வந்தபோதும், பல வெளிவராமலும் அவதானிக்கப்படாமலும் புதைந்துபோய்விடுகின்றன. வெறும் கையுடன் அவர்கள் நாடு திரும்பும்போது அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் பல. அவர்களின் கனவுகள் சிதைந்து போன நிலையில் யாரிடமும் அபயம்டைய முடியாத நிலை தோன்றுகிறது.

எனவே, இத்தகைய இக்கட்டுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கக்கூடிய வகையில் வெளிநாடுகளுக்குத் தொழில் வாய்ப்பு பெற்றுச் செல்லும் இலங்கையர்களின் நலனுக்காகப் பரிபூரண காப்புறுதித் திட்டமொன்று அவசியம். இதன் மூலம் அவர்களுக்குப் பாதுகாப்பு உயர்வொன்று ஏற்படுவதுடன் ஏதாவது பிழைத்துப் போகும் சந்தர்ப்பங்களில் உரிய தீர்வை வழங்குகிறது. அத்துடன், வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுச்செல்ல ஏனையவர்களுக்கு உந்துதல் வழங்குகிறது.

மேர்ச்சண்ட் பேங்க் ஒவ் ஸ்ரீலங்காவுக்கு (MBSL) உரித்தான காப்புறுதி நிறுவனம் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்குச் செல்பவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு பரிபூரண காப்புறுதித் திட்டமொன்றை சரியான தருணத்தில் அறிமுகம் செய்ய முன்வந்துள்ளது.

இந்தக் காப்புறுதித் திட்டம் மிகப் பரந்த நன்மைகளை உள்ளடக்குகிறது. ஆயுள், தனிப்பட்ட, விபத்து, தாய்நாட்டுக்கு திருப்பி அனுப்புதல், மருத்துவம் போன்ற பல்வேறு அம்சங்கள் இந்தக் காப்புறுதியில் உள்ளடங்குகின்றன. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்களின் சங்கத்துடன் (ALFEA) MBSL புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டதும், வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் இலங்கையர்களின் வாழ்வில் புதியதோர் அத்தியாயம் தொடங்கியுள்ளது. இதுவரை காலமும் கலந்துரையாடல்கள், விவாதங்கள் போன்றவற்றின் மூலம் வெறும் கனவாக இருந்து வந்த விடயம் இப்போது நனவாகியுள்ளது. இந்தக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் ஏதாவது இக்கட்டை அல்லது ஸ்தீரமற்ற நிலையை சந்திக்கும்போது அவர்களுக்கு அபயம் அளிக்க வேண்டுமென்பதே MBSL இன் இலக்காகும். (த)



செலிங்கோ ஆயுள் பகுதி நெல்லியடிக்கிளையின் வாடிக்கையாளரான கல்லூரி வீதி ஆத்தியடி பருத்தித்துறையைச் சேர்ந்த எச்.சிவபாலன் என்பவர் சுகயீனம் காரணமாகக் காலமரணமானதையடுத்து அவரின் மனைவியாகிய திருமதி சிறீதேவி சிவபாலன் என்பவருக்கு இழப்பீட்டுத் தொகையை பிராந்திய அபிவிருத்தி முகாமையாளர் ரி.நிரோஜன் கையளிக்கின்றார். அருகில் கிளை முகாமையாளர் வி.பாஸ்கரன், விற்பனை நிறைவேற்று அதிகாரி வி.குகரூபன், விற்பனை ஆலோசகர் பி.யோகச்சந்திரன் ஆகியோர் உள்ளனர். (த)

# சிறந்த சாதனையாளர்களைக் கௌரவிக்கும் ஹேமாஸ் மெனுபெக்சரிங் நிறுவனம்



அண்மையில் நடைபெற்ற தனது வருடாந்த விற்பனை மாநாட்டில் ஹேமாஸ் மெனுபெக்சரிங் தனது விற்பனைமற்றும் சந்தைப்படுத்தல் அணியினருக்கான புதிய மாநாட்டில் ஹேமாஸ் பெனுபெக்சரிங் தனது நிதியாண்டுக்கான கருவானது 'கனவு காண், முன்னோக்கிச் செல், வழங்கு' என்பதாக உள்ளது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஹேமாஸ் ஹோல்டிங்சின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹுசைன் யூசுப் அலி கலந்து கொண்டார். ஹேமாஸ் மெனுபெக் சரிங்கின் முகாமைத்துவப் பணிப்பாளர் இமால் பொன்சேகா. விற்பனை மற்றும் சர்வதேச வியாபாரத்துக்கான (நுகர்வோர் குறியீடுகள்) பணிப்பாளர் அணில் மீகஹகே மற்றும் பலரும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

வந்திருந்தோரை வரவேற்ற நவீன வியாபாரம், நிறுவனங்களுக்கான விற்பனை முகாமையாளரும் இந்நிகழ்வின் பிரதான ஏற்பாட்டாளருமான டெரன்ஸ் என்.ஆப்ரஹாம், வெற்றிபெற்றயாவரும் தாம் முகம்கொடுத்து ஒவ்வொரு செயற்பாடுகளிலும் 100 சதவீதம் பங்களிப்பு செய்யதவர்கள் எனத் தெரிவித்தார். ''இது திறமை மாத்திரமல்ல; அந்தத் திறமையினால் என்ன செய்கிறீர்கள் என்பதும் ஆகும். உங்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள். மிகவும் அருகில் வந்து நட்சத்திர விருதைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கான செய்தி மிகவும் தெளிவாக உள்ளது. என்ன செய்யவேண்டும் என்பதை அறிந்துள்ளதினால் நீங்கள் ஒரு படி மேலே உள்ளதுடன், எதிர்வரும் வருடத்தில் என்ன செய்யவேண்டும் என்பதை அறிந்துள்ளீர்கள்.

முக்கிய பேச்சாளரான இமால் பொன்சேகா இவ்வருடத்தின் இலக்குகளை அடைந்தமைக்காகத் தனது சக விற்பனை ஊழியர்களுக்கும் வியாபாரப் பங்காளிகளுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். ''என்னற்ற சவால்களை எதிர்கொண்டு எமது வர்த்தக் குறியீட்டின் வெற் றிக்காகத் தம்மால் முடியுமான ஒவ்வொரு பங்களிப்பையும் வழங்கிய இந்தக் குழுவினரையிட்டு நான் பெருமையடைகிறேன். சிறந்த தலைமைத்து வம், தூர நோக்கு மற்றும் குழுப் பலத்தினாலேயே இதுபோன்ற பெறுபேறு கிட்டியுள்ளது'' எனத் தெரிவித்தார்.

''எமக்குப் பின்னால் உள்ள வருடமானது மிகவும் கடினமானதாகவும் சவால்கள் பல நிறைந்ததாகவும் உள்ளது. சிறந்த பெறுபேறுகளைச் சிறந்த மனிதர்களினால் பெற்றுக் கொள்ள முடியும். ஒரே நிறுவனமாக, சக்தி மற்றும் ஆர்வமுடனான குழுவாக ஒன்றாக நாம் செயற்பட்டால், சிறப்பான பெறுபேறுகளை எம்மால் பெறமுடியும். நாம் ஒன்றிணைந்து அடிப்படையில் ஒன்றாகி, எமது கருவிற்கு உண்மையான வெற்றியோடு செயற்படுவோம். சகல பிரிவுகளினதும் ஆதரவு இன்றேல் எம்மால் எமது இலக்குகளை அடைய முடியாது. ஒரே குடும்பமாக - ஒரே குழுவாக நாம் வெற்றிபெற்று சிறப்பானதும் பெரியதுமான நிறுவனமாக அடுத்த வருடம் திகழ்வோம்'' எனப் பொன்சேகா மேலும் தெரிவித்தார்.

# கொமர்ஷல் வங்கிக்கு யூரோமணி விருது

இலங்கையில் தலை சிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கியை உலகில் முன்னணி நிதிச் சந்தைகளுக்கான சஞ்சிகையான யூரோமணி தெரிவு செய்துள்ளது.

கொமர்ஷல் வங்கி கடந்த சில மாதங்களாக வெற்றிவாகை சூடி வந்த உலகளாவிய விருதுகள் பட்டியலில் இன்னும் ஒரு மகுடமாக இது அமைந்துள்ளது. வாடிக்கையாளர்களுக்குச் சேவை புரிவது மற்றும் புதிதாக்க சேவைகள் அபிவிருத்தியில் புதிய கண்டுபிடிப்புக்கள், சொத்து வளர்ச்சி, மூலோபாய உறவுகள் என்பனவற்றில் வங்கி கையாண்டு வரும் உறுதியான மூலோபாயத்துக்கு ஓர் அங்கீகாரமாகவே இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

உலகளாவிய ரீதியில் ஏனைய கீர்த்தி மிக்க வங்கிகளின் பட்டியல் வரிசையோடு சேர்த்து யூரோமணி இலங்கையின் தலைசிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கியைத் தெரிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த விருது வழங்கும் விழா ஜூலை 2011 இல் ஹொங்கொங்கில் இடம்பெற்றது.

"யூரோ மணி போன்ற தகுதி மிக்க ஒரு சர்வதேச வெளியீட்டால் இலங் கையின் தலைசிறந்த வங்கியெனத் தெரிவு செய்யப்படுவது எமது அடிப்படைகளுக்கும் மூலோபாய அணுகுமுறைகளுக்கும் கிடைத்துள்ள அங்கீகாரமாகும்'' என்று வங்கியின் சிரேஷ்ட நிதித்துறை அதிகாரி நந்திக்க புத்திபால கூறினார்.



''இந்தப் பிராந்தியத்தில் முன்னணி வகிக்கும் நிதி நிறுவனங்கள் மத்தியிலும் மற்றும் உள்ளூர் வங்கிகளுக்கு மத்தியிலும் மீண்டும் ஒரு தடவை கொமர்ஷல் வங்கிக் குழுவால் கௌரவத்தோடு தலை நிமிர்ந்து நிற்க முடிந்துள்ளது'' என்று அவர் மேலும் கூறினார்.

யூரோமணியின் இந்த் மதிப்பீடானது ஆசியா, மத்திய கிழக்கு, ஐரோப்பா, ஆபிரிக்கா, வடக்கு மற்றும் இலத்தீன் அமெரிக்கா, கற்பியன், நோர்டிக் மற்றும் பால்டிக் பிராந்தியங்களை உள்ளடக்கிய பிரதான வங்கிகளைக் கொண்டதாக அமைந்திருந்தது.

யூரோமணியானது முகாமைத்துவ வெளிப்பாடு, புத்தாக்கம், சந்தையில் சுறுசுறுப்பு நிலை என்பனவற்றைக் கௌரவிக்கின்றது. அந்த வகையில் ஆசிய பிராந்தியத்தின் வங்கிகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் அவற்றின் சிறப்பான செயற்பாட்டுக்காகப் பல விருதுகளையும் வழங்கி வருகின்றது.

சந்தைநிலை வர்த்தகப் பரிமாற்றத்தின் அளவு புதிய சேவைகளின் அபிவிருத்தி, முகாமைத்துவ ஒழுங்குமுறை, கடன் தரப்படுத்தல், ஆற்றல் விகிதாசாரம் மற்றும் வருடாந்த பிரதான செயற்பாட்டுக் குறிகாட்டி என்பனவற்றின் கீழ் அவற்றின் தரம் மற்றும் தகுதி என்பனவற்றைக் கருத்திற்கொண்டு யூரோமணி ஆசிரியர்கள் மிக ஆழமாக ஆராய்ந்தே தெரிவுகள் பற்றிய இந்த முடிவை எடுக்கின்றனர். (த)

# இலங்கையில் TRIANGLE ரயர்களின் ஏக விநியோகஸ்தர்களாக TRADESMANN

இலங்கையில் Triangle ரயர்களுக்கான ஏக விநியோகஸ்தர்களாக Tradesmann SL (Pvt) Ltd அண்மையில் நியமிக்கப்பட்டது. இந்தப் புதிய முயற்சியில் 50 மில்லியன் ரூபா அதிகமாக முதலீடு செய்யப்படின் அடிப்படையில் Triangle Group Co, Ltd ரயர்களுக்கான Tradesmann இன் ஏக விநியோக அந்தஸ்து இந்த மாதம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

"Triangle ரயர்களின் முகவராக நியமிக்கபபட்டுள்ளமை உண்மையில் கௌரவமானது. 2004 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டுவரைTriangle ரயர்களின் முகவர்களான Tradesmann இருந்தது. இன்று நாம் மீண்டும் அந்த உறவை புதுப்பித்துள்ளோம். அதனால் நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம். சந்தையில் சிறந்த ரயர்களாக Triangle ரயர்கள் உள்ளன. தற்போது அவை மீண்டும் சந்தைக்கு வந்துள்ளது. கிடைக்கக் கூடியதாக உள்ள உற்பத்திகளில் இது முன்னிலை வகிக்கும்' என Tradesmann இன் ரயர்களுக்கான வர்த்தக முகாமையாளர் விஜேதுங்க குறிப்பிட்டார்.

ஏக விநியோக அந்தஸ்தின் கீழ் பயணிகள் வாகன றேடியல் ரயர்கள், இரட்டை நோக்க வாகன றேடியல் ரயர்கள் மற்றும் வர்த்தக வாகன றேடியல் ரயர்கள் உள்ளடங்கலாகப் பல்வேறுபட்ட Triangle ரயர்களை Tradesmann விற்பனை செய்யும்.

Triangle தவிர Durun ரயர்கள், Maxtrek டயர்கள், Safe Holder ரயர்கள், Sportrak ரயர்கள், Permanent ரயர்கள், Modi ரயர்கள் மற்றும் BKT ரயர்களுக்கான விநியோகஸ்தர்களாகவும் Tradesmann உள்ளது.

1956 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட Tradesmann உற்பத்தி வர்த்தகம் மற்றும் விநியோகத் துறைகளில் 50 வருடங்களை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. நாட்டில் மிகப்பெரிய விநியோக வலையமைப்பைக் கொண்டுள்ள நிறுவனமாகவும், தனித்துவமான வீடுகளுக்கான விநியோகச் சேவைகளின் நன்கு அறியப்பட்ட நிறுவனமாகவும் இது உள்ளது.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தின் வேலையற்ற பட்டதாரிகள் தம்மை அமைப்பு ரீதியாகப் பலப்படுத்த முன்வரவேண்டும்

## திகாம்பரம் எம்.பி. வலியுறுத்து

நுவரெலியா, ஒக.23

மலையகத்தில் பட்டம் பெற்றுவிட்டு வேலையின்றி இருக்கும் பட்டதாரிகள் தமது விவரங்களடங்கிய தகவல் இணையம் ஒன்றை ஏற்படுத்த முன்வரவேண்டும். அப்போதுதான் அவர்களுடன் காத்திரமான தொடர்புகளைப் பேணமுடியும். அதேவேளை பட்டதாரிகள் அமைப்பு ரீதியாக தங்களைத் தயார்ப்படுத்தவும் முன்வரவேண்டும் என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

ஜனாதிபதியின் மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தில் வேலையற்ற மலையகப் பட்டதாரிகளின் பெயர் விவரங்களும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

இன்று நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை இளைஞர், யுவதிகள் மத்தியில் பரவலாக நிலவுகின்றது. குறிப்பாக பொருளாதார வசதி குறைந்த கிராம, பெருந்தோட்டப்பகுதி இளைஞர், யுவதிகளிடையே இந்த நிலைமை பெருமளவில் உள்ளது. பல்கலைக்கழகப் பட்டம் பெற்றுப் பெருமளவானோர் தகுதிக்கேற்ற வேலையில்லாத நிலையில் உள்ளனர்.

இவர்களது பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது மேற்பார்வையில் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளார். மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி செயலகம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க மலையகப் பட்டதாரிகள் சுமார் 75 பேரின் பெயர் விவரங்களைச் சமர்ப்பித்துள்ளேன்.

பதுளை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், களுத்துறை போன்ற மாவட்டங்களில் வாழும் மலையகப் பட்டதாரிகளின் பெயர்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக மலையகப் பல்கலைக்கழகம் குறித்த கருத்தாடல்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றன. தனியான மலையகப் பல்கலைக்கழகம் ஒன்றுக்கான தேவையை வலியுறுத்தும் பிரதான காரணிகளில் ஒன்று தற்போது பல்கலைக்கழகங்களில் வெளியாகின்ற பட்டதாரிகள் எண்ணிக்கை, அவர்களது கல்வி, ஆய்வு செயற்பாடுகள், எதிர்கால சவால்களை எதிர்கொள்ள வாய்ப்புகளைக் கொண்டுள்ள கற்கை நெறிகள், தொடர்பான தகவல்களே ஆகும்.

அத்தகைய தகவல் தளம் ஒன்றை பட்டதாரிகள் அமைப்பு ரீதியாக இணைத்து ஏற்படுத்துதல் வேண்டும். பல்கலைக்கழகத்தில் கற்கும்போதே மாணவர்கள் இதனை முறையாக முன்னெடுத்தால் அது தொடர்ச்சியாகப் பேணப்படும் நிலைமை உருவாகும். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இணையத்தள வசதிகள் தாராளமாகக் கிடைக்கக்கூடும்.

இலவச இணையத் தளங்களை உருவாக்கக்கூடிய தளங்களைக்கொண்டு இத்தகைய தகவல் தளங்களை உருவாக்கும் முயற்சிகளில் மாணவர்கள் ஈடுபடவேண்டும். அது பலவிதத்தில் பயனுடையதாகவிருக்கும். வேலை வாய்ப்புக்காக பிரேரிக்கப்பட்ட பெயர் விவரங்கள் அடங்கிய ஆவணங்கள் ஜனாதிபதி அலுவலகத்துக்கு உரிய திகதியில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கு இது குறித்த தகவல்கள் எமது அலுவலகத்தால் அனுப்பிவைக்கப்படும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# முகங்களில் திரவத்தை விசிறிய மர்ம மனிதர்கள்

நுவரெலியா, ஒக.23

வட்டகொடை, மடக்கும்புர டொப் டிவிசன் தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண்தொழிலாளர்கள் இருவரின் முகங்களிலும் இனந்தெரியாத இரு நபர்கள் 'ஸ்பிரே' உபகரணம் மூலம் ஒரு வகையான திரவத்தை விசிறியுள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட இரண்டு பெண்களும் நுவரெலியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

தேயிலைச் செடிகளுக்கிடையில் திடீரெனத் தோன்றிய மர்ம நபர்களே இவ்வாறு திரவத்தை விசிறிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் பின்பு பாதிக்கப்பட்ட பெண் தொழிலாளர்களை சக தொழிலாளர்கள் மடக்கும்புர தோட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அதன் பின்பு அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (ச)

# எல்லைகளை மாற்றும் புதிய யாப்புத் தொடர்பில் ஆலோசனையை முன்வைக்க வேண்டுகோள்

கொழும்பு, ஒக.23

தற்போதுள்ள பிரதேசசெயலகம் மற்றும் கிராம சேவையாளர் பிரிவுகளின் எல்லைகளை மாற்றி புதிய பிரதேச செயலகங்களும் , கிராம சேவையாளர் பிரிவுகளும் உருவாக்குவதற்காக அரசினால் முன்மொழியப்பட்ட புதிய யாப்பு தொடர்பில் ஆலோசனைகளை முன்வைக்குமாறு ஊவா மாகாணசபை அமைச்சர் செந்தில் தொண்டமான் கேட்டுக் கொண்டுள்ளார்.

அண்மையில் ஊவா மாகாணசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மாகாண தமிழ்ப் பாடசாலை அதிபர்களுடனான கலந்துரையாடலின்போதே இவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய யாப்பை நாம் சரியாகக் கவனிக்காவிட்டால் எமக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு எனத் தெரிவித்த அவர் கிராம எல்லைப் புறங்களிலுள்ள தோட்டங்களில் வாழும் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடும் . இப்பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஒன்று அல்லது இரண்டு பெரிய தோட்டங்களை இணைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது என்று அவர் குறிப்பிட்டார். (ச)



மட்டக்களப்பு, தாண்டியடி நடராசா நந்தாபுரத்தில் ஏற்பட்ட முறுகலின்போது படையினரால் கைதுசெய்யப்பட்டவர்களை பிணையில் எடுக்கச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய பொன். செல்வராசா, சி.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன், கூட்டமைப்பு முக்கியஸ்தர் பிரசன்னா இந்திரகுமார், வவுண தீவு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் கே.விமலநாதன் ஆகியோர் நீதிமன்றத்தைவிட்டு வெளியேறுகின்றனர்.

# பிரதேச சபைத் தலைவர் கைது

பதுளை,ஒக.23

பதுளை பிரதேசசபைத் தலைவர் சரத் ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பதுளை, ஹந்தகொல்ல அலுபோகொல்ல பகுதியிலுள்ள வீடொன்றிற்கு சரத் ராஜபக்ஷ தாக்குதல் நடத்தியதாக பதுளை பொலிஸில் சிலர் செய்த முறைப்பாட்டையடுத்து இவர் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட பதுளை பிரதேசசபைத் தலைவர் சரத் ராஜபக்ஷவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

# மர்ம மனிதனின் சர்ச்சையையடுத்து உ/த மாணவர்களின் கல்வி பாதிப்பு

அம்பாறை, ஒக.23

மர்ம மனிதனின் சர்ச்சையையடுத்து அம்பாறை மாவட்டத்தில் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை எழுதிவரும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிவருகின்றன எனப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

முப்பது வருட கால யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு சமாதான சூழ்நிலை நிலவுகிறது. மாணவர்கள் சுதந்திரமாகக் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

இந்த நிலையில் மர்ம மனிதன் விவகாரம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்குக்குந்தகமாக உள்ளது. அத்துடன் உளரீதியாகவும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

மாலைநேரமானதும் மக்கள் பீதியுடன் காணப்படுகின்றனர். மாணவர்களால் வீடுகளிலிருந்து நிம்மதியாகக் கற்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

அதுவும் சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்களிலேயே இந்த மர்ம மனிதன் நடமாட்டம் இடம்பெற்று வருகின்றது என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

குறிப்பாக எல்லைக் கிராமங்களிலும் குடியேற்றக் கிராமங்களிலும் வசித்துவரும் தமிழ், முஸ்லிம் மக்கள் அச்சத்தால் வீடுகளை விட்டு வெளியேறி இரவு வேளைகளில் தமது உறவினர்களின் வீடுகளில் தங்கி வருகின்றனர். இதனால் தற்போது ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை எழுதிவரும் தமது பிள்ளைகள் ஒரே இடத்தில் இருந்து நிம்மதியாகக் கற்க முடியாத நிலை நிலவுகிறது என்று இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ச)

# மக்கள் பாதுகாப்புக்காக துஆ பிரார்த்தனை

திருகோணமலை, ஒக.23

கிண்ணியா பிரதேசத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் பொது மக்களின் உயிருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாக்குமாறு பிரதேச பள்ளிவாசல்களில் துஆ பிரார்த்தனைகள் இடம்பெற்று வருகின்றன.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் கிண்ணியா கிளையின் வேண்டுகோளுக்கிணங்க கிண்ணியா பிரதேசத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் இந்த துஆ பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கிணங்க ஐந்து வேளை தொழுகைகளில் குனூத் ஓதப்பட்டு துஆ பிரார்த்தனைகள் இடம்பெறுகின்றன. இதே வேளை, கிண்ணியா பிரதேசத்தில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். வீதி சோதனைகளும் இடம்பெற்று வருகின்றன.

# லிந்துலை பகுதி மக்களுக்கு சேவையாற்றுவதே நோக்கம்

## இ.தொ.கா. நகரசபை உறுப்பினர் ரொசான் கூறுகிறார்

கொழும்பு, ஒக. 23

தலவாக்கலை, லிந்துலை நகரசபை எல்லைக்குள் வாழ்கின்ற மக்களின் சமூக மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளார் என லிந்துலை நகர சபையின் புதிய உறுப்பினர் எஸ்.பி.ரொசான் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சரும், இ.தொ.கா. தலைவருமான முத்துசிவலிங்கம் முன்னிலையில் கொழும்பில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பிறகு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மலையகத்தின் தலைவர் அமைச்சர் ஆறு முகன் தொண்டமானின் துணிவுமிக்க செயற்பாட்டினால் தலவாக்கலை, லிந்துலை நகரசபைக்கு இ.தொ.கா. சார்பில் போட்டியிட்டு நாம் வெற்றி பெற்றுள்ளோம்.

எமது பிரதேச மக்கள் அமைச்சர் ஆறு முகன் தொண்டமான் மற்றும் பிரதி அமைச்சர் முத்துசிவலிங்கம் மீதும் வைத்துள்ள நம்பிக்கையின் காரணமாக நாம் இந்த வெற்றியை அடைந்தோம்.

அதேபோல எம் மக்கள் எதிர்பார்க்கும் சேவைகளை இ.தொ.காவின் கொள்கைக்கேற்ப நிறைவேற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் இ.தொ.காவை தலவாக்கலை பிரதேசத்தில் யாராலும் அசைக்க முடியாத சக்தியாக மாற்றிக் காட்டுவோம்.

தலவாக்கலை, லிந்துலை பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் தேவைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவோம் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
23 ஓகஸ்ட் 2011 செவ்

# துணுக்காய் கல்வி வலய நிர்வாக

# சின்னத்தம்பி இராஜேஸ்வரன் அவர்களின் மணி



## வாழ்த்துரை

கடந்த நாற்பது வருடங்களாக அரச சேவையில் தனது தடங்களைப்பதித்து 23.08.2011 அன்று மணிவிழாக் காணும் சின்னத்தம்பி இராஜேஸ்வரன், துணுக்காய் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களின் சேவையினை பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்வி அதிகாரியாக, பிரதிக்கல்விப் பணிப்பாளராக படிப்படியாக முன்னேறி தனது சேவைகளை முல்லைத்தீவு மாவட்ட கல்விச் சமூகத்திற்கு அர்ப்பணிப்புடன் நல்கியிருப்பது எடுத்துக் காட்டுதற்குரிய சிறப்பாகும்.

துணுக்காய் வலயத்தில் இணைந்து கொண்ட காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளிலும் மனிதாபிமான நடவடிக்கையின் இறுதிக் காலங்களிலும் தன்னை அர்ப்பணித்து கல்வி நடவடிக்கைகளுக்காகவும் வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டவர். மீளவும் எமது பிரதேசங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகிய வேளையில் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் முக்கிய பங்காற்றியவர் என்பதுடன் ஒட்டுசுட்டான் பிரதேச கல்விமேம்பாட்டுக்காகவும் உட்கட்டுமான அபிவிருத்திக்காகவும் வலயக் கல்விப் பணிப்பாளருடன் இணைந்து எமது நடவடிக்கைகளுக்கு ஆர்வத்துடன் தனது ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தார். அவரது சேவைகளைப் பெற்றவர்கள் என்ற வகையில் ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் சார்பாகவும் எமது அலுவலகம் சார்பாகவும் இன்று மணிவிழாக்காணும் சின்னத்தம்பி இராஜேஸ்வரன் அவர்களை மனதார வாழ்த்தி நிற்பதுடன் அவரது எதிர்காலம் சிறப்பானதாகவும் அமைதியானதாகவும் அமைய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி. சுபாஜினி மதியழகன், பிரதேசசெயலர் ஒட்டுசுட்டான்.

## மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

துணுக்காய் வலய கல்வி அலுவலகத்தில் நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.இராஜேஸ்வரன் இம் மாதம் 23ம் திகதியுடன் ஓய்வுபெறுகின்றார். முல்லைத்தீவு மாவட்டத்தில் குமுழமுனையைப் பிறப்பிடமாக் கொண்ட சி.இராஜேஸ்வரன் துணுக்காய் கல்வி வலயத்தில் 15.03.1999 ஆம் வருடத்திலிருந்து பிர திக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்துள்ளார். அவர் வேலை செய்த காலப்பகுதியில் மிகக் கடினமான சூழலில் தனது வலயத்துக்கும், வலயப் பாட சாலைகளுக்கும் சிறப் பாகச் சேவையாற்றியுள்ளார். வலயக்கல்வி அலுவலகம் ஆரம் பித்த காலத்தில் துணுக்காயிலும், பின்பு மாங்குளத்திலும் இயங்கி வந்துள்ளது. இடப்பெயர்வின்போது புதுக்குடியிருப்பு பகுதியில் வலயக் கட்டமைப்பை ஏற்படுத்தி அலுவலகத்தை நடத்துவதில் முன் னின்று உழைத்தவர்.

கல்வி அபிவிருத்திசார்பான பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் வலய மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேம்பாடடையச் செய்வதற்கு தன்னாலியன்ற முயற்சிகளை மேற்கொண்டு வந்தமையை என்னால் அறிய முடியும். திருகோணமலையில் கல்வி அமைச்சில் நடை பெற்றுள்ள கல்வி அபிவிருத்திக் கூட்டங்களில் பங்குபற்றும் போது சி.இராஜேஸ்வரனின் செயற்பாட்டை நான் அறிவேன். நிர்வாகத்துக்குப் பொறுப்பான நிலையில் சுயவிவரக்கோவைகளை இழந்த ஆசிரியர்களுக்கு புதிய கோவைகளை உருவாக்க இவர் முயற்சிகளை மேற்கொண்டு வந்தமை பாராட்டப்படக் கூடியது.

மீள் குடியேற்றத்தின் பின்பு வலயக்கல்வி அலுவலகத்தை மீள ஆரம்பித்து இயங்கத் தொடங்குவதில் வேகமாகப் பணி யாற்றியதனூடாக இந்த வலயத்தில் எல்லா ஆளணியினரும் மீண் டும் வந்து பணியாற்றுகின்றனர். அதே போல் 54 பாடசாலைகளும் மீள ஆரம்பித்துள்ளன. இத்தகைய பணியாற்றும் ஒருவர் சேவையிலிருந்து ஓய்வு பெறும் போது அவர் சார்ந்த நிறுவனம் எதிர்நோக்கும் சேவைகளை ஆற்றக்கூடிய ஒருவரை பெற்றுக்கொள் வது இந்த வலயத்தில் கடினமாக உள்ளது. ஓய்வுபெற்றுள்ள போதிலும் தன் மாவட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவவேண்டும். ஓய்வுக் காலத்தை மனைவி பிள்ளைகளுடன் சிறப்பாக கழிப்பதற்கான நீடித்த ஆயுளையும் தேகா ரோக்கியத்தையும் வழங்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மாகாணக்கல்விப் பணிப்பாளர்
மாகாணக்கல்வித் திணைக்களம், வடமாகாணம், யாழ்ப்பாணம்.



## வாழ்த்துச் செய்தி

துணுக்காய் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகச் சுமார் பன்னிரண்டு வருடங்களாக கடமையாற்றி மணிவிழாக்காணும் சி.இராஜேஸ்வரன் குமுழமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டு தனது கற்றல் செயற்பாட்டை புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் மேற்கொண்டிருந்தார். ஆசிரியராக அதிபராக தன் பணியை முல்லைத்திவு வலயத்தில் ஆற்றியுள்ளார். கல்விப் புலத்தில் நீண்ட காலம் சேவையாற்றியுள்ள இவர் ஓய்வில் செல்வது இவ் வலயத்தில் ஓர் வெற்றிடத்தை ஏற்படுத்துகின்றது. இந்த வெற்றிடத்தை நிரப்ப இவர்போல் பணியாற்றக்கூடிய ஒருவரை பெற்றுக் கொள்வது கடினமாக இருக்கும். எந்த நேரத்திலும் என்ன தேவையையும் உடனடியாகச் செய்வதனூடாக தனது மேல திகாரிகளின் பணிகளை இலகுபடுத்தும் திறன் கொண்டவர். தன் கீழ் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் நலன் பேணுவதில் சிறப்பாக செயற்படுபவர்.

நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நிறைவேற்றுவதில் வல்லவர். எந்தத் திட்டத்திலும் தான் சார்ந்த அலுவலகம், பிரதேசம் என்பவற்றின் தகவல்களை பகிர்ந்து கொள்வதில் சிறப்பாக செயற்பட்டுள்ளார். இடப்பெயர்வு, மீள்குடியேற்றம் ஆகிய காலங்களின் போது வலயத்தை இயங்கு நிலையில்வைத்திருக்க தன் கீழ்பணி புரியும் எல்லோரினதும் சேவையைப் பெற்று நல்ல முறையில் செயற்பட வைப்பதற்காக சிறப்பாக பணியாற்றியுள்ளார். இவரது சேவை எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியது என்றாலும் இவர் ஓய்வு பெற்றாலும் கல்விப் புலத்தில் பணியாற்ற வேண்டும். தன் மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் சிறப்பாக வாழ இறையருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

த.மேகநாதன், வலயக் கல்விப் பணிப்பாளர், துணுக்காய்

## நல் வாழ்த்து

அறுபது அகவையை முடித்துக் கொண்டு 23.08.2011 அன்று ஓய்வு பெறும் நற்சேவையாளன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவர்களை உடல் உள ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் மன மகிழ்வுடன் வாழ மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

மா.தேவேந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்),
மாகாணக் கல்வி அமைச்சு, வடமாகாணம்.

## வாழ்த்துரை



சின்னத்தம்பி இராஜேஸ்வரன்.பிரதிக் கல்விப் பணிப்பாளர் துணுக்காய் அவர்கள் அறுபது அகவைகளைப் பூர்த்தி செய்து நாற்பது வருடங்கள் அரசசேவையாற்றி ஓய்வுபெறுவதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

1971ஆம் ஆண்டு தை மாதம் ஆசிரிய சேவையில் இணைந்து 17 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றி 1989இல் அதிபர் சேவையில் இணைந்து பத்து வருடங்கள் கடமையாற்றி குமுழமுனை பிரதேசத் துக்கு வளம் சேர்த்துப் பலமாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி ஒரு கல்விச் சமூகத்தை உருவாக்கினார். அவருடைய சேவையை இன்றும் அம்மக்கள் பெருமையுடன் நினைவு கூறுவர். 1999 முதல் கோட்டக் கல்விப் பணிப்பாளராக, உதவிக்கல்விப் பணிப்பாளராக இன்றுவரை பிரதிக்கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி துணுக்காய் கல்விவலயத்தின் கணிசமான கல்விவளர்ச்சிக்கு பங்காற்றினார். திட்டமிடல், மாணவர் கல்வி அபிவிருத்தி போன்ற பலதுறைகளில் சேவையாற்றி கல்விச் சமூகத்தின் மத்தியில் ஒரு கலங்கரை விளக்காக மிளிர்ந்தார்.

இராஜேஸ்வரன் சமூகப்பணி அளப்பெரியது. அகில இலங்கை சமாதான நீதிவானாக, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவு மாவட்ட பொருளாளராக, எனப் பல முக்கிய பதவிகளில் இருந்து அளப்பெரிய சேவையாற்றினார். இன்று ஓய்வுபெற்றுச் செல்லும் அவர், மனைவி பிள்ளைகளுடன் மகிழ்ச்சியும் மனச்சாந்தியும் பெற்று நீடூழி வாழ எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திரு.சி.குணபாலன், பிரதேசெயலர், துணுக்காய், மாந்தை கிழக்கு

## வாழ்த்துச் செய்தி



எல்லாம் வல்ல எம்பெருமானின் திருப்பாத கமலங்களை மனக்கண் நிறுத்தி.

எவ்வாது உறைவது உலகம் உலகத்தோடு அவ்வத உறைவது அறிவு.

அறிவுடையவன் அறிவுள்ள ஆற்றோருடன் கூடி வாழ் வான் என்ற வாக்கிற்கமைய இலங்கையின் முத்தான முல்லை மாநகரிலே அனைத்து வளங்களும் நிறைந்த ஆறாம் வட்டாரம் குமுழமுனை முள்ளியவளை கிராமத்தை நிரந்தர முகவரியாகக் கொண்ட பேராசான் சி.இரா ஜேஸ்வரன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர்- துணுக்காய்) அவர்கள் 1971.08.01 இல் இருந்து தனது காருண்ய குணத்தினாலும் கற்பித்தல் செயற்பாட்டினாலும் தன் கல்விப் பாதையில் பயணத்தை ஆரம்பித்தார். அன்றிலிருந்து இன்றுவரை இலங்கையில் பலபாகங்களிலும் அவர் தம் பணி தொடர்ந்த வண்ணம் உள்ளது. பலகிளைகளை பரப்பிய ஆலமரம் போன்று நுண்ணிய ஆழ்ந்த அறிவும் கருணை ததும்பும் விழிகளும் காருண்ய மனமும் அவருக்கு மேலும் அணி சேர்த்து அவரை சமூக பேரறிவாளனாக ஆக்கியது. அவரின் ஆளுமையினால் சமூகத்தில் பல கல்விமான்களை உருவாக்கியது.இனம் காட்டியது. அவருக்கு அவரே நிகர் என பறைசாற்றியது. இவ்வாறான பேராசான் தன் பணியிலிருந்து ஓய்வு பெறும் இவ்வேளையில் இவரை வாழ்த்தி அவர் தம் வழியில் அவரின் கடமையை செவ்வனே செய்வதற்கு எல்லாம் வல்ல இறைவனின் கருணா கடாட்சம் கிட்டவேண்டும். அவர்தம் குடும்பத்தினரும் சகல நலங்களும் பெற்று நல்வாழ்வுடன் நற்பணி செய்திட வேண்டி தான் தோன்றீஸ்வரரின் பாதாரவிந்தங்களை தியானித்து என் நல்லாசிகளை நல்குகின்றேன்.எம்பிரான் துணையுடன்

சிவஸ்ரீ .கீர்த்திவாசக் குருக்கள், பிரதமகுரு, தான்தோன்றீஸ்வரர் ஆலயம் ,ஒட்டுசுட்டான்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



துணுக்காய் கல்வி வலயத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராக இருந்து23.08.2011 ஆம் திகதி தனது அறுபது அகவையில் பதவியிலிருந்து ஓய்வுபெறும் கி.இரா யேஸ்வரன் அவர்களது சேவையை பாராட்டுவதில் அகமகிழ்வடைகிறேன். திரு.சி.இராயேஸ்வரன் முல் லைத்தீவு மாவட்டத்தில் அளம்பில் றோ.க.த.க.பாடசாலையின் ஆசிரியராக இருந்த 1980 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை நன்கு தெரியும். 2000ஆம் ஆண்டில் துணுக்காய் வலயத்தில் நான் வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்தபோது உதவிக்கல்விப் பணிப்பா ளராக பதவி வகித்த நாள் தொடக்கம் இன்றுவரை மிகவும் நெருங் கிப் பழகினேன். தனது கடமையை இதய சுத்தியுடன் காலம் ,நேரம் தவறாது செயற்படுத்தும் உன்னத குணம் படைத்த ஒருவர்.

துணுக்காய் வலயம் ஆரம்பிக்கப்பட்ட பின் பல நெருக்கடிகளைச் சந்தித்த மாங்குளம், மல்லாவி, கைவேலி என பல இடப்பெயர்வுகள். இவர் வலயத்திற்கு வந்த பின் இதுவரை 05 வலயக் கல்விபணிப்பாளர் கள் துணுக்காய் வலயத்தில் கடமையாற்றி உள்ளனர். இவர்கள் மாறி மற்றவர் வரும்வரையான இடைக்காலங்களில் பெரிய சுமையை ஏற்று வலயத்தை வழிநடத்தியவர் .இன்றுவரை வலயத்தின் சுமை தாங்கி என இராஜேஸ்வரனை அழைக்க வேண்டும். வன்னி இடம்பெயர்வின் போது கைவேலி பிரதேசத்தில் தங்கியிருந்து ஆசிரியர்களுக்கு ஆற்றிய சேவைகளையும் மாத்தளன் கிராமத்தில் தங்கியிருந்த போது ஆசிரியர்களுக்கு சம்பளம் உட்பட இவர்வழங்கிய சேவையையும் யாராலும் வழங்க முடியாது.வன்னியில் வாழ்ந்த ஓர் மாபெரும் கல்வி யாளராக கடின உழைப்பும் தியாகமும் சலிக்கா மனமும் கொண்ட ஒருவராக கல்வி உலகால் மதிக்கப்படும் ஒருவர். நான் கல்வி பணிப்பாளராகவும் மேலதிக கல்விப் பணிப்பாளராகவும் இருந்த காலங்களில் அவர் எனக்களித்த ஒத்துழைப்பிற்கு நன்றி எனமட்டும் கூறிவிட முடியாது. இத்தகைய ஒரு சேவையாளர் 23.08.2011 ஓய்வு பெறுவது துணுக்காய் வலயத்திற்கு ஏற்படும் அளப்பெரிய பேரிடியாகும். இருந்தும் யாவரும் ஒரு நாள் ஓய்வுபெறவேண்டியதை ஏற்று அவர் பல வளமும் பெற்று வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ப.அரியரத்தினம், மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை, கிளிநொச்சி.



| | |
|---|---|
| 01. பெயர் | : சின்னத்தம்பி இராஜேஸ்வரன் |
| 02. முகவரி | : 6 ஆம் வட்டாரம், குமுழமுனை, முள்ளியவ |
| 03. பிறந்த திகதி | : 24.08.1951 |
| 04. பிறந்தவிடம் | : புதுக்குடியிருப்பு |
| 05. பள்ளிக் கல்வி | : மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் (ஆர |
| 06. ஆசிரியராக முதல் நியமனம்: 01.08.1971 | |
| 07. தொழில் தகைமை: பயிற்றப்பட்ட ஆசிரியர் (பொது), இல | |

### கல்விச் சேவை

- மு/மாத்தளன் அ.த.க.பாடசாலை 01.08.1971-31.08.197
- மு/அம்பலவன் பொக்கணை அ.த.க.பா 01.09.1971-31.1
- யா/கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி 01.01.1
- நுவரெலியா/றகுபொல சிங்களதமிழ் வித்தியாலயம் 01.01
- நுவரெலியா/சாந்த சவேரியர் கல்லூரி 01.08.1977-30.06
- நுவரெலியா/றகுபொல சிங்கள தமிழ் வித்தியாலயம் 01.07
- மு/அளம்பில் றோ.க.வித்தியாலயம் (அதிபர்)15.02.1980-
- மு/கொக்குத்தொடுவாய் அ.த.க.பா(அதிபர்) 01.03.1990-
- மு/குமுழமுனை மகாவித்தியாலயம் 03.03.1993-14.03.1
- துணுக்காய் கோட்டக் கல்வி அதிகாரி 15.03.1999-31.05.1
- பிரதிக் கல்விப் பணிப்பாளர் கல்வி அபிவிருத்தி 01.06.199
- பிரதிக் கல்விப் பணிப்பாளர் நிர்வாகம் 01.08.2008-இன்று

### சமூக சேவை

- சமாதான நீதிவான்
- முல்லை மாவட்ட கல்வி அபிவிருத்திக்குழுச் செயலாளர்(2
- முல்லை மாவட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பொரு
- இணைப்பாளர் ஆதரவளிக்கும் கரங்கள்,துணுக்காய் வலயம்
- இணைப்பாளர் வன்னித் தமிழ் சமூக கலாசார அமையம், க
முல்லை மாவட்டம்
- இணைப்பாளர்- யுனிசெவ் செயற்றிட்டம் PSI செயற்றிட்டம்

## மணிவிழாக் குழு

தலைவர் T.யோகநாத


வலயக்கல்விப் பணிப்பாளர்,

### உறுப்பினர்கள்

1. திரு.T. பங்கையற்செல்வன் - DEO, ஒட்சுட்
2. திரு.S. சுந்தரமூர்த்தி - DEO, துணுக்காய்.
3. திரு S.சிவலிங்கம் - DEO, மாந்தை கிழக்கு.
4. திரு. K. யேசுதானந்தன் - அதிபர், மல்லாவி
5. திரு.P. யோகானந்தராஜா - அதிபர் யோகபுரம்
6. திரு.P. கருணாகரன் - அதிபர், ஒட்டுசுட்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்
# ...ணிவிழா வாழ்த்துச் சிறப்பு மலர்



## தூண்களாக நின்றவர்கள்



மணிவிழா நாயகன் சின்னத்தம்பி இராஜேஸ்வரன் அவர்கள்எனக்கு அறிமுகமானார் அன்றய காலப்பகுதியில் மாவட்ட நிலைகளில் இருந்த கல்வி நிர்வாகங்கள் வலயங்களாகப் பிரிக்கப்பட்டது. வடகிழக்கில் கல்வி நிர்வாகம் 24 வலயங்களாகப் பிரிக்கப்பட்டது. துணுக்காய் கல்வி வலயத்திற்கு வலயக்கல்விப் பணிப்பாளராக நான் நியமனம் பெற்றேன். வலயக்கல்வி நிர்வாகத்திற்கென புதிய இடத்தில் புதிய கட்டடம் அமைக்க வேண்டிய தேவையிருந்தது. இறுக்கமான ஒரு சூழலில் கட்டடப் பொருள்கள் ஏதுமற்றநிலையில் சுண்ணாம்பும் சர்க்கரையும் கொண்டு கட்டடத்தை கட்டினோம். கட்டடத்தை கட்டுவதற்கு எனது உத்தியோகத்தர்களது ஒத்துழைப்பு உண்மையில் போற்றத்தக்கது. அவர்களில் ஒருவராக இராஜேஸ்வரன் அவர்களும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய கட்டடத்தில் எமது கல்விப்பணியை இறைவனுடைய கிருபையினால் ஆரம்பித்தோம். உத்தியோகத்தர்களுக்காக கொட்டில்கள் அமைக்கப்பட்டு அதிலிருந்து எமது பணியைத் தொடர்ந் தோம்.

யாழ் இடப்பெயர்வின் போதது இடம்பெயர்ந்த கிராமப்புற பாடசாலைகள் மாட்டுத்தொழுவங்களாக காட்சியளித்தன. அறிவுப்பசியால் மாணவர்கள் துன்புற்று இருந்தனர். பெற்றோர்கள் தமது பிள்ளைகள் நிலைகண்டு கவலையடைந்து இருந்தனர் இந்தவேளையில் எமது பணி பெரியதாக இருந்தது. பாடசாலையில் இருந்த மக்களுக்கு வாழ்விடம் கொடுத்தல். மாட்டுத் தொழுவங்களாக இருந்த பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை அனுப்பி மாணவர்களை வரவழைத்து அவர்களை கற்றல் சூழலுக்குள் மாறுவழி போன்ற பணிகளில் ஈடுபட்டிருந்தோம். இந்தவேலைகளை செய்வதற்கு என்னோடு துணையாக நினறவர்களில் இராஜேஸ்வரனும் ஒருவர்.

காலப்போக்கில் 24 கல்வி வலயங்களிலும் சிறந்த வலயமாக எமது வலயம் விளங்குவதாக மாகாணச்செயலாளரினால் பாராட்டும் கிடைத்தது. இராஜேஸ்வரன் அவர்கள் கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பாக இருந்து ஆற்றிய சேவையை நான் பாராட்டுகின்றேன். அவர் ஓய்வு பெற்றாலும் தனது கல்விப் பணிக்கு தொடர்ந்தும் சேவை செய்ய வேண்டும் என்று உடல் உள பலத்தோடு நீடூழி காலம் வாழவேண்டும் என்று, இறைவனை வேண்டி அவருடைய சேவையை நான் பாராட்டுகின்றேன்.

**திருமதி.அ.வேதநாயகம்**
முன்னாள் யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர்.

## வாழ்த்துச் செய்தி



''ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான் றோன் எனக் கேட்ட தாய்''

எனும் குறளின் ஞாபகம் தான் எமது பிரதிக் கல்விப் பணிப்பாளரை எண்ணும் போது ஞாபகத்துக்கு வருகின்றது. சுமார் 40 வருட சேவையை கல்விச் சமூகத்துக்கு வழங்கிய சின்னத்தம்பி இராஜேஸ்வரன். அதிலும் எமக்காக 12 ஆண்டுகள் கடமையாற்றியமையைக் கொண்டு முன்சென்ற 28 ஆண்டுகள் இவ்வாறு செயற்பட்டிருப்பார் என்பதை எம்மால் இனம்காண முடிகிறது.

''வீட்டுக்குத் தேவை யன்னல்''
''பாடசாலைக்குத் தேவை நூலகம்''
''நிர்வாகத்துக்குத் தேவை நல்ல நிர்வாகிகள்''

என்பதற்கமைய புதுக்குடியிருப்பிலே பிறந்து குமுழமுனையிலே புகுந்து இருபதாவது அகவையில் கல்விச் சமூகத்தில் காலடி எடுத்து வைத்து இன்று வைர விழாக்காணும் இந்நாயகன் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுக்கொள்கிறார்.

தந்தையாக, குருவாக, நண்பனாக பலவாறு பழகிய இந்நாயகனது அர்ப்பணிப்புச் சேவையை அளவிட முடியாது. அதிலும் ஓர் தூணாக 2007 இறுதியில் யுத்தத்தினால் பெரிய இடப்பெயர்வுகள் ஏற்பட்டபோது பணிப்பாளர் தவிர்க்க முடியாது நின்றபோது பணிமனையைப் பல இடங்களுக்குச் சுமந்து சென்று பாதுகாத்தமையை இந்த இடத்தில் நினைவு கூருகின்றேன். எமது மாவட்ட கல்விக்கான வாய்ப்புகள், வசதிகளைப் பெறுவதில் நெருக்கடிகளைச் சந்தித்த கணத்தில் 2004- 2007 வரை எமது மாவட்டத்தில் கல்விமான்களுள் மூதறிஞராகத் திகழ்ந்த அமரர் க.சரவணபவான் அவர்களின் தலைமையில் செயற்பட்ட முல்லைத்தீவு மாவட்டக் கல்வி அபிவிருத்திக் குழுவின் செயலாளராக இவர் செயற்பட்டு ஆற்றிய கல்விப்பணியை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

இவர்களைப் போன்ற சேவையாளர்கள் சேவை ஓய்வு பெற்றுச் செல்லுதல் என்பது எமது மாவட்டத்துக்கான இடைவெளியாகவே உள்ளது. இன்றோடு இவர் பணி ஓய்ந்து விடாது மேன்மேலும் சேவைகள் பலவற்றைச் செய்வதற்கு உடல், உள ஆரோக்கியத்தை இறைவன் வழங்க வேண்டும் என்று இறைவனை வேண்டி மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துக்களை வழங்குகின்றேன்.

**ந.கருணாகரன்,**
அதிபர், ஒட்டுசுட்டான் ம.வி.

## அகவை அறுபதில் 40 வருட நிறைவான சேவை



இன்று 23.08.2011 மணிவிழா காணும் திரு. சின்னத்தம்பி இராஜேஸ்வரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களுக்கு தன்னுடைய அர்ப்பணிப்புடன் கூடிய 40 வருடங்களுக்கு மேற்பட்ட நிறைவான கல்விச் சேவையை நிறைவு செய்து ஓய்வுபெறுகிறார் நல்லாசானாக, வினைதிறன் மிக்க அதிபராக அதன் பின் துணுக்காய் கல்வி வலயத்தில் தலைமைத்துவம் மிக்க கோட்டக்கல்வி அதிகாரியாக பின் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் இறுதியில் கல்வி நிர்வாகத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கனதியான கடமைகளை ஆற்றியது வரையில் அவரின் கல்விச்சேவை 40 வருடங்களைக் கடந்து விரிவடைந்துள்ளது. பத்தொன்பது வயதில் 01.08.1971 அன்று ஆசிரியர் நியமனத்துடன் ஆரம்பித்த அவரின் கல்விப்பணி இன்று பிரதி கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) ஆக முழுமையடைகின்றது.

இயற்கை எழில் கொஞ்சி உலாவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் புகழ்பூத்த புதுக்குடியிருப்பு கிராமத்தில் 1951.08.24 இல் இவர் பிறந்தார். அக்கிராமத்தில் நற்பண்புகள் நிறைந்த செல்வச் செழிப்பான குடும்பத்தில் சின்னத்தம்பி என்பவரின் 2 ஆவது மகனான இவர் கல்வியில் கூடிய அக்கறையுடையவராக இருந்ததுடன் தனது இளைய சகோதரர்கள் மற்றும் சகோதரிகட்கும் சிறந்த முன் மாதிரியாகவும் வழி காட்டியாகவும் விளங்கினார். இவரின் குடும்பம் சிறந்த கல்விப் பாரம்பரியங்களைக் கொண்டதாக விளங்கியது. இவர் புகுந்த வீடும் குமுழமுனை கிராமத்தில் சிறந்த கல்வி பாரம்பரியங்களை கொண்ட குடும்பமாக இருந்த காரணத்தினால் இவரின் துணைவியாரின் மேலான ஒத்துழைப்பு பலவழிகளிலும் இவருக்கு கிடைத் தமையினால் அவரால் தனது அர்ப்பணிப்பு மிக்க கலவிப்பணியினை தங்கு தடையின்றி மேற்கொள்ள முடிந்தது. அதுமட்டுமல்ல அவரின் ஒரு மகன் தற்பொழுது ஆசிரியராக நியமனம் பெற்று இம் மாவட்டத்தில் பணியாற்றி வருகிறார். இவரின் குடும்பத்தில் சகோதரர்கள், சகோதரி மைத்துனர்கள், பிள்ளைகள் என பலரும் பட்டதாரி ஆசிரியர்களாக பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருகின்றனர்.

மு/ மாத்தளன் அ.த.க பாடசாலையில் 1971.08.01. ஆசிரியராக முதல் நியமனத்தை ஏற்றுக்கொண்டவர் பின்னர் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1975.12.31 ல் ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்தார். அதன் பின்னர் நுவெரெலியா மாவட்டத்தில் 1970 ஆம் ஆண்டு வரை கடமையாற்றி பின்னர் சொந்த மாவட்டம் ஆகிய முல்லைத்தீவுக்கு கல்விச் சேவைக்காக வருகை தந்தார்.

அதன் பின்னர் 1999.03.15 முதல் துணுக்காய் கல்வி வலயத்தில் கோட்டக் கல்வி அதிகாரி, கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளர் கல்வி நிர்வாகத்துக்கான பிரதிக்கல்விப்பணிப்பாளரென பல கனதியான பணிகளை 12 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் ஆற்றினார். அதிபர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்ததன் மூலம் 01.06.1989 தொடக்கம் அதிபர் சேவை வகுப்பு 2 (தற்பொழுது வகுப்பு 2) இற்கு நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் 01.06.1994 முதல் அதிபர் சேவை வகுப்பு 01 இற்கு பதவி உயர்த்தப்பட்டார். 1998 ஆம் ஆண்டு ஐப்பசிமாதம் துணுக்காய் கல்வி வலயம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போது திருமதி ல.வேதநாயகன் அவர்கள் முதலாவது வலய கல்விப் பணிப்பாளராக கடமையேற்றிருந்தார். அவருடைய காலந்தொட்டு இன்று வரை 06 தடவைகள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இடம்மாற்றப்பட்டனர். அனைவருடனும் இணைந்து சேவையாற்றி அவர்கள் அனைவரினதும் நன்மதிப்பைப் பெற்றவர் திரு.சி. இராஜேஸ்வரன் அவர்கள். அதற்குக் காரணம் அவருடைய பொறுமை, சகிப்புத்தன்மை, விடாமுயற்சி என்பவற்றுடன் அவரிடம் செறிந்து போயிருந்த அர்ப்பணிப்பு மனப்பான்மை என்பவற்றைக் குறிப்பிட முடியும். இவர் சிறந்த கல்வியியலாளராக இருந்ததுடன் அதிபர்களுக்கான செயலமர்வுகளிலும் சிறந்த வளவாளராகவும் செயற்பட்டு தன்னுடைய அனுபவங்கள், முகாமைத்துவ நுட்பங்களை வழங்கி வலுவூட்டினார். அத்துடன் சிறந்த சமூக சேவையாளராகவும் கடமையாற்றியிருந்தார். 1990-1993 ஆண்டு காலப் பகுதியில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவுக் கிளையின் பொருளாளராக அரிய பணிகளை ஆற்றினார். இக்காலத்தில் திருகோணமலையில்இருந்து மக்கள் இடம்பெயர்ந்து முல்லைத்தீவுக்கு வருகை தந்திருந்தனர். அக் காலத்தில் செஞ்சிலுவைச்சங்க மாவட்டக்கிளை பல நலத் திட்டங்களை முன்னெடுத்த காலகட்ட மாகும். அவருடைய சமூக சேவையை உணர்த்த அரசு அவருக்கு சமாதான நீதவான் பதவி வழங்கிக்கெளரவித்துள்ளது.

இவர் அதிபர் ஆசிரியர்களுக்கு நல்ல நண்பனாகவும் வழிகாட்டியாகவும் ஊக்குவிப்பாளராகவும் சிறந்த முறையில் பணியாற்றியிருந்தார். துணுக்காய் கல்வி வலய பாடசாலைப் பிள்ளைகளின் நல்ல பயனுள்ள திட்டங்களை முன்னெடுப்பதிலும் பல்வேறு நிறுவனங்கள் தொண்டர் அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு பிள்ளைகளுக்கு உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதிலும் நிபுனத்துவ சேவையாளராக செயற்பட்டார். யுத்தத்தில் பெற்றோர்களை இழந்த ஏறக்குறைய 700 பிள்ளைகளுக்கு உதவுங்கரங்கள் எனும் அமைப்பின் மூலம் மாதாந்தம் 500 ரூபா உதவு தொகையை பெற்றுக் கொடுத்ததில் அவரின் சேவை ஈடு இணையற்றதாக இருந்தது. இறுதி சில மாதங்களில் கூட கனடா தமிழ்ச்சங்கத்தின் சிறுகதை போட்டியில் பங்கேற்கு செய்வதற்காக பல்வேறு வகையிலும் ஊக்குவிப்பு வழங்கி பல மாணவர்களை பங்குபற்றச் செய்து 39 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு தலா 5000 ரூபா பிரிவில் தெரிவு செய்வ தற்கும் அவர் முக்கிய முன்னெடுப்பாளராக இனிய சேவைகளை ஆற்றியிருந்தார். பிரதி கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) பணியை ஆற்றத்தொடங்கியதிலிருந்து அவருடைய முழுநாள்களுமே வலயக்கல்வி அலுவலகத்திலேயே கழிந்தது என்று கூறினால் அது மிகையாகாது அதாவது தனது கடமை நேரத்திற்கு மேலதிகமாக அவர் அலுவலகத்தில் தங்கியிருந்து சனி, ஞாயிறு விடுமுறை தினங்கள் உள்ளடங்களாக கடமையாற்ற வேண்டிய தேவையேற்பட்ட பொழுதெல்லாம் முகம் சுழிக்காது அலுவலகத்தில் தங்கியிருந்து சேவையாற்றினார்.

யுத்தத்தினால் வன்னியில் இடப்பெயர்வு ஏற்பட்ட போது மக்களுடன் வலயக் கல்வி அலுவலகமும் இடம்பெயர்ந்து சென்றது. அவ்வேளையில் துணுக்காய் கல்வி வலயத்தின் ஒட்டுமொத்த பொறுப்பையும் தலையில் சுமந்து முதலில் கிளிநொச்சி கல்வி வலயத்திற்கும் பின் புதுக்குடியிருப்பு கைவேலி கனேசா வித்தியாலயத்திற்கும் கொண்டு சென்றார். அப்பாடசாலையில் பல்வேறு தொண்டர் அமைப்புக்களின் அனுசரணைகளைப் பெற்று ஒரு அலுவலகத்தையும் பல்வேறு தொண்டர் அமைப்புக்களின் அனுசரணைகளைப் பெற்று ஒரு அலுவலகத்தையும் அலுவலக கட்டிட அமைப்புக்களையும் ஒழுங்குபடுத்தி வலயச் செயற்பாடுகளை இசைவுபடுத்தி செயற்படுத்தியிருந்தார். சமகாலத்தில் குமுழமுனை கிராமத்திலிருந்து அவரின் குடும்பத்தினர் இடம்பெயர்ந்தபோது தன்னுடைய சொந்த வேலைகளை மனைவியிடம் ஒப்படைத்து விட்டு திணைக்கள வேலைக்கு முன்னுரிமை வழங்கி ஏறக்குறைய வலயக்கல்வி பணிப்பாளராகவே செயற்பட்டார். இவருடைய முன் முயற்சியால் பல சிரமங்களுக்கு மத்தியிலும் 2009 தை மாத சம்பளம் வரையில் அதிபர், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டமையை மதிப்பிட முடியாது.

இவ்வாறே முதல் முதலாக வன்னியில் மீளக்குடியேற்றம் ஆரம்பித்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து மல்லாவி மத்திய கல்லூரியில் மிகவும் குறைந்த வசதிகளுடன் துணுக்காய் கல்வி வலயத்தை இயக்கியபோது வலயக்கல்வி பணிப்பாளருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி அவருக்கு வலதுகரமாக மிகவும் சிறப்பாக செயற்பட்டார். இறுதிவரை அவ்வாறே கடமையாற்றி வந்தார். இவருடைய மகத்தான கல்வி மற்றும் சமூகப்பணிகளை மனமார பாராட்டி அகமகிழ் வடைகிறோம்.

**த. பங்கயச் செல்வன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர், ஒட்டுசுட்டான் கோட்டம்

...ன்
...னை, முள்ளியவளை

...தியாலயம் (ஆரம்பம் தொடக்கம் உயர்தரம் வரை)

... (பொது), இலங்கை அதிபர் சேவை தரம் 1

...வை ...
...71-31.08.1971
...09.1971-31.12.1973
...ல்லூரி 01.01.1974-31.12.1975
...யாலயம் 01.01.1976-30.07.1977
...08.1977-30.06.1978
...தியாலயம் 01.07.1978-14.02.1980
...ர்)15.02.1980-28.02.1990
...ர்) 01.03.1990-02.03.1993
...1993-14.03.1999
...1999-31.05.1999
...த்தி 01.06.1999-30.07.2008
...8.2008-இன்றுவரை
...சேவை

...் செயலாளர்(2003-2006)
...ச் சங்கப் பொருளாளர்(1990-1993 வரை)
...ணுக்காய் வலயம்
...ர அமையம், கனடா

...SI செயற்றிட்டம்

...ாக் குழு
...யோகநாதன்
...ப்பாளர், துணுக்காய்.

...ர்கள்
...EO, ஒட்சுட்டுடான்
...ணுக்காய்.
...தை கிழக்கு.
...், மல்லாவி மத்திய கல்லூரி.
...் யோகபுரம் மகாவித்தியாலயம்.
...ட்டுசுட்டான் மகாவித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் தேர்த் திருவிழாவை முன்னிட்டு நயினையிலிருந்து பஜனைப் பாதயாத்திரை

யாழ்ப்பாணம், ஒக.23

நல்லூர் தேர்த் திருவிழாவை முன்னிட்டு நயினை - நல்லூர் திருத்தலப் பஜனைப் பாதயாத்திரை 47ஆவது தடவையாக நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை நயினை ஸ்ரீ நாகபூஷணி ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நயினை மலையிற்புலம் மலையின் நாயனார் ஆலயம், நயினை தில்லை வெளி ஸ்ரீ பிடாரி அம்பாள் ஆலயம், சோமஸ்கந்த ஈஸ்வரர் ஆலயம், இரட்டாங்காலி முருகன் ஆலயம், தம்பகைப் பதி பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயம், நயினை வடமேற்கு படகுத் துறை ஞானவைரவர் ஆலயம் ஆகியவற்றில் விசேட் பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

நாளை மறுதினம் வியாழக்கிழமை நயினை அம்பாள் ஆலயத்தில் அபிசேக பூசை வழிபாடுகளுடனும் வேல் பூசையுடனும் திருத்தலப் பஜனை பாதயாத்திரை ஆரம்பமாகவுள்ளது.

பாதயாத்திரை குறிகாட்டுவான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பண்ணை, யாழ்ப்பாணம், வில்லூன்றி, கந்தர்மடம் வழியாக எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழா அன்று அதிகாலை நல்லூரை வந்தடையும்.

(ம-313)

# நல்லூர் சூழலில் திருட்டுக்களைத் தடுக்க முழுநாளும் பொலிஸார் கடமையில்

யாழ்ப்பாணம், ஒக.23

நல்லூர் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு தினமும் ஆலய சுற்றாடலில் பொதுமக்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆலயத்திருவிழாக்களின் போது பொதுமக்கள் எதிர்கொள்ளும் திருட்டுப் பிரச்சினை மற்றும் விபத்துக்கள் இவற்றை இடைநிறுத்துவதற்காக முழுநேரமாகப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் ஆலயச் சூழலில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தி பொதுமக்கள் தமது உடைமைகளைக் களவு கொடுக்காமல் பாதுகாக்கும் வகையில் அறிவுறுத்தல்களையும் வழங்கி வருகின்றனர்.

மற்றும் ஆலயச் சூழலிலுள்ள கடைகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறாத வகையில் மின்குமிழ்களை ஒளிர விடும்படியும் அறிவுறுத்தி வருகின்றனர்.

பொலிஸாரின் இத்தகைய நடவடிக்கைகளால் நல்லூர் ஆலயச் சூழலில் இந்த வருடம் திருட்டுச் சம்பவங்கள் குறைவடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ம-313-86)

# துணுக்காய் கல்வி வலய நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்
# சின்னத்தம்பி இராஜேஸ்வரன் அவர்களின் மணிவிழா வாழ்த்துச் சிறப்பு மலர்

## மனதார வாழ்த்துகின்றேன்



சின்னத்தம்பி இராஜேஸ்வரன் வன்னி மாவட்டத்தின் கல்விப்புலத்திலே நீண்ட காலமாக சேவை செய்து வன்னியின் கல்வி வளம் பெறச்செய்த ஒரு கல்வியின் மைந்தனாக முல்லை மாவட்டத்திலே மிளிர்ந்தவர். இந்த மாவட்டத்திலே யுத்த காலப் பகுதியில் இவர் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக முன்னின்று செயற்பட்டமையை இந்த இடத்திலே சிறப்பாகக் கூறிவிட முடியும்.

தாயாக, தந்தையாக, குருவாக நண்பனாகப் பழகி கல்விப் புலத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் மகிழ்வாக கற்றல் கற்பித்தல் செயற்பாடு களில் வெற்றி பெற சமத்துவப் பண்புகளைப் பேணி கல்விப்புலம் சிறப்ப டையச் செய்யும் ஆளுமைப்பண்பு கொண்டு மிளிர்ந்த ஒளி விளக்காகக் காணப்பட்டவர்.

இவ்வாறெல்லாம் கல்விப் புலத்தில் தம் பணிகளை ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்விப்பணிப்பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக (கல்வி அபிவிருத்தி மற்றும் கல்வி நிர்வாகம்) சேவையாற்றி இன்று மணிவிழாக் காணும் எம் நாயகன் சி.இராஜேஸ்வரன் அவர்களின் ஓய்வானது முல்லை மாவட்டத்தின் கல்விப் புலத்தின் ஓர் உரைகல்லை இழப்பதைப் போன்று அமை யும். இவ்வாறான ஆசானை மணி விழாக் காணும் இந்நாளில் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

செ.கஜேந்திரன்,
பொதுச் செயலாளர், தமிழ்த் தேசிய முன்னணி.

## மகத்தான சேவையதில் மணிவிழாக் காணும் திரு.சி.இராஜேஸ்வரன்



சேவைகளில் மகத்தானது ஆசிரியர் சேவை. அதனில் மணிவிழாக் காணும் சி.இராஜேஸ்வரன் அவர்களை வாழ்த்துவதில் மனநிறைவடை கிறேன். எழுத்தறிவித்தவன் இறைவன் என்றும் நம் ஆன்றோர் கூறுவது போல தன் பணியை தான் பிறந்த தாய் நாட்டுக்கு வழங்கி வந்ததோடு ஆசிரியராக ஆரம்பித்து இன்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் வரை உயர்ந்து நிற்கும் உத்தமனை பாராட்டுவது அவரது சேவைக்கு மேலும் ஓர் உத்வேகத்தை அளிக்கும் என்பதில் ஐயமில்லை என்றே கூறலாம்.

மணிவிழாக்காணும் மகத்துவ மனிதனின் சேவை மேன்மேலும் வளர்ச்சியும் உயர்ச்சியும் அடைய இறைவனை வேண்டுவதோடு, பாராட்டையும் ஆசியினையும் வழங்குவதையிட்டு முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் என்ற வகையில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அ.பத்திநாதன்,
அரச அதிபர்/மாவட்டச் செயலாளர், முல்லைத்தீவு.

மணிவிழாக் காணும் துணுக்காய் வலய நிருவாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.இராஜேஸ்வரன் அவர்களின் சேவையை நயந்து அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள்

## வழங்கும் வாழ்த்துப் பாமாலை

முல்லைவள நிலத்துக்கு முத்தான பேரூர்
புதுக்குடியிருப்பு பதியுறைந்த சின்னத்தம்பி பெரியன்
பெற்றெடுத்த பிள்ளைகளுள் சீரியராய்த் தோன்றி
சிறப்பான பணிசெய்யும் செம்மையுறு இராஜேஸ்வரன்

ஆசானாய் அதிபராய் அயராது உழைத்துயர்ந்து
பிறப்பெடுத்த துணுக்காய் வலயத்தில் துடிப்பாக இணைந்துழைத்து
கனத்தபணி பலமுடிக்க கனகாலம் உழைத்துநின்று
கல்வி அபிவிருத்தி உயர்வுபெற உழைத்தீர்கள்

சொல்லுக்கு முன்செயல் இதுவுங்கள் இலக்கணம்
செயல்நிறைவு காணும்வரை ஓயாத உழைப்பாளி
கடமைக்கு மேலான கரிசனை கண்ணியம்
உதவுபவர் கரம்பற்றி மாணவர்க்கு உபகாரம்

கிழக்கூரிலிருந்து மேற்கூர்க்கு தினம் பறந்து
அரியபணி முடித்தஐயன் மணிவிழாவை எட்டிநின்றார்
நெட்டுரு நிமிர்ந்தநடை கனிவான மொழிஈர்ப்பு
இத்தரை மாந்தற்கு இனிமைபல சேர்த்ததையா

சேவையால் முதிர்வுபெற்று ஓய்வுபெறும் இக்காலம்
சேவையை பெற்றவர்நாம் சேர்ந்தும்மை வாழ்த்துகின்றோம்
அறுபது ஆண்டோடு அடங்கி நீங்கள் இருந்திடாது
ஆண்டுநூறு சிறப்புடனே சேவைசெய்து உயர்ந்திடுக.

கவிதையாக்கம் : சி.நாகேந்திரராசா,
அதிபர் மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை.

## முல்லைத்தீவு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

'என் கடன் பணி செய்து கிடப்பதே'

என்ற கூற்றுக்கு அமைய வன்னி மண்ணில் உயர்பணி செய்து சிறந்த மனிதனாக திகழும் சி.இராஜேஸ்வரன் அவர்கள் இம் மண்ணில் கல்விச்செல்வத்தை அவாவில் நிற்கின்ற மாணவர்களின் கல்விக் காய் தன்னை அர்ப்பணித்து அப்பணியில் இருந்து ஓய்வு பெறும் வேளை அவரின் அளப்பரிய பணியாற்றி ஓரிருவரிகள் எழுதுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

வன்னி மண்ணின் வளம் கருதி காத்திரமான கல்விப்பணி செய்த துணுக்காய் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்)திரு.சி.இராஜேஸ்வரனின் தொண்டினை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர் ஓய்வு பெறுவது எமக்கு பின்னடைவு எனினும் அவரின் கல்விப்பணி வேறோர் இறை பாதையில்தொடர வேண்டும் என்று கேட்டு அவரை இந்நாளில் வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளமுடன்! தொடர்க பணிகளை

மா.இராஜகுமார்.
பிரதிக்கல்விப்பணிப்பாளர்(நிர்வாகம்)
வலயக்கல்வி அலுவலகம், முல்லைத்தீவு.

## மனிதநேயம் மிக்க அர்ப்பணிப்பாளர்



முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி மற்றும் சமூகநலச் செயற்பாடுகளில் அயராது உழைத்து மாற்றத்தை ஏற்படுத்துவதில் முன்னின்று உழைத்து வரும் நண்பன் இராஜேஸ்வரன் இன்று தனது அகவை அறுபதைப்பூர்த்தி செய்கின்றார்.1997இல் குமுழமுனை அதிப ராக இருந்து அவர் ஆற்றிய பணிகளை உற்று உணர்ந்த "இராஜேஸ்" அவர்கள் கல்வி முகாமையாளர் வரிசையில் ஒரு மைல்கல் ஆகத்திகழ்கின்றார்.

முல்லைத்தீவில் போர் அனர்த்தங்களினால் எமது மக்கள் சொல்லொணாக் கொடூரங்களுக்கு ஆளாக்கப்பட்ட போதும், இராணுவ ஆக்கிரமிப்புக்களினால் இடப்பெயர்வுகளுக்கு உள்ளாக்கப் பட்டபோதும், சளைக்காது, துணுக்காய் வலயத்தின் ஆவணங்களையும், ஆசிரியர்களையும் பாதுகாப்பதில், இராஜேஸ்வரன் அவர்கள் எடுத்த முயற்சிகளைக் கல்விச்சமூகம் எளிதில் மறந்துவிடாது.நல்லாசிரியனாக, அதிபராக, பிரதிக்கல்விப்பணிப்பாளராக, உயர்ந்து கல்வி உலகில் தனக்கென முத்திரையை பதித்துக்கொண்ட நண்பன் இராஜேஸ்வரனின் கல்விப்பணி இன்னுமொரு பாதையில் தொடரப்படவேண்டும்.

பல்வேறு வகையிலும் நொந்துபோயுள்ள எமது இனத்தின் கல்வித்தரத்தை உயர்த்துவதில் இராஜேஸ்வரனின் பணி இன்னும் பல மடங்கு சிறக்கவேண்டும். ஓய்வு என்பது ஆற்றல் மிக்க நல்ல மனிதர்களுக்கு ஒரு போதும் இல்லை."ஓய்விலும் அயராது உழைப்ப வனே மனிதன்" இராஜேஸ்வரன் எப்பொழுதும் மனிதன் தான் இன்னும்பல ஆண்டுகள் நலமே வாழ்ந்து, சமூகத்தில் தன்னை இணைத்து வாழும் மனோபலத்தையும், உடல் வலுவையும் இறைவன் அவருக்கு வழங்கவேண்டும். அவரது மகிழ்ச்சிகரமான குடும்பத்தினருடன் இணைந்து நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

ந.ஆனந்தராஜ்,
முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர்
வடமாகாணம்,நகரபிதா
வல்வெட்டித்துறை நகரசபை

## ஆசிச் செய்தி

சமூக சேவை என்பது ஒருவருக்குப் படித்துப் பட்டம் பெற்றதன் பின்னால் வருவதல்ல. மாறாகச் சேவைசெய்யும் மனப் பான்மையும் இயல்பும் இயற்கையாகவே அவர்களது உள்ளத்தில் இருந்து வருவதாகும். சேவை செய்யும் எண்ணம் அவர்களது உணர்வில் உறைந்துபோய் இருக்கும். இவ்வாறான ஒருவருக்குச் சந்தர்ப்பமும் சூழ்நிலைகளும் வாய்ப்பானதாகவும், பொருத்த மானதாகவும் அமையும்போது சேவையை வழங்குவதற்கான மனக்கதவு திறந்துவிடப்படுகின்றது. இந்த கோட்பாட்டிற்குத் திரு.சி.இராசேஸ்வரன் அவர்கள் விதிவிலக்கானவர் அல்லர் என்பது வெள்ளிடை மலையாகும்.

அமைதியான பேச்சாலும், அன்பான அரவணைப்பினாலும் கள்ளமில்லா வெள்ளை உள்ளங்கொண்டு சிறந்த சேவைகளை செய்து வருகின்ற சி.இராஜேவரன் அவர்கள் தனது அறுபதாவது அகவையில் வாழ்துவதற்காக எடுக்கப்படுகின்ற மணிவிழாவுக்கு ஆசிச்செய்தி வழங்கும் வாய்ப்பு எங்கள் அமையத்துக்கு கிட்டியமையையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஓர் பண்பாளனுக்கு ஓர் சேவையாளனுக்கு மக்களால் எடுக்கப்படுகின்ற இம்மணிவிழாவானது சிறப்பும், அவரது சேவைகள் பெருகவும், அவரது குடும்ப வாழ்வு சிறக்கவும் கனடா வன்னித் தமிழ்ச் சமூகம்.

கே. திருச்செல்வம்
தலைவர், வன்னித் தமிழ்ச் சமூக கலாசார அமையம், கனடா.

## வாழ்த்துச் செய்தி

சின்னத்தம்பி இராஜேஸ்வரன் அவர்கள் வன்னி மாவட்டத்திலே மிகவும் இக்கட்டான கால கட்டங்களில் அந்த மண்ணின் மைந்தன் என்ற உணர்வுடன் அப்பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியில் பல பதவிகளில் பல இட்ங்களில் பங்கேற்றுப் பணியாற்றியவர். குறிப்பாக திரு. இராஜேஸ்வரன் அவர்கள் கல்வி நிர்வாகப் பதவிகளில் அதிபராக, கோட்டக் கல்விப் பணிப்பாளராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, பிரதிக்கல்விப் பணிப்பாளராக (கல்வி அபிவி ருத்தி மற்றும் கல்வி நிர்வாகம்) ஆகிய பணிகளில் அர்ப்பணிப்புடன் சேவை மனப்பாங்குடன் பணியாற்றியவர்.

அவர் துடிப்பான சேவையை ஓய்வு பெறுவதுடன் நிற்காது தொடர்ந்தும் கல்வி அபிவிருத்தியை வேண்டி நிற்கும் வன்னி மாவட்டத்துக்கு மீள் நியமனம் செய்ய ஆவண செய்யவேண்டும் எனவும் வேண்டி அவரது பணி தொடர வாழ்த்துகின்றேன்.

கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளை (B.A., M.A., Ph.D)
ஓய்வு - இலங்கைக் கல்விச்சேவை முதலாம் வகுப்பு மத்திய கல்வி அமைச்சு மற்றும் முழுநிலைக்கல்வி ஆலோசகர்.

## மனம் நிறைய வாழ்த்துகின்றோம்



துணுக்காய்க் கல்வி வலயத்தில் 12 ஆண்டுகள் நிறைந்த சேவையாற்றிய சி.இராஜேஸ்வரன் அவர்களின் 40 வருட சேவையில் மணிவிழாக் காணும் பாக்கியம் எமது கல்விவலயத் துக்குக் கிடைத்ததையிட்டு எமது கல்விச் சமூகம் பேருவகை கொள்கிறது.

எமது வலயத்துக்கு வருகைதந்து கடமை ஏற்ற காலம் தொடக்கம் அவரது சேவையில் பல வகையான மாற்றங்களையும் நெருக்கடிகளையும் இக்கட்டான காலத்தில் பல சவால்களையும் எதிர்கொண்டு பல வெற்றிகளை ஈட்டிய புகழ் பூத்த பொன்மலராக நாம் அவரை இந்த மணிவிழா நாளில் பார்க்கின்றோம்.

இன்று பலருக்கு முன்னுதாரணமானவராக எல்லோருடனும் பழகிய நுட்பமுறைகள் வழிகாட்டல்கள் எமது வலயப் பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்த வளங்கள் பலருக்கு அவர்களின் வாண்மை விருத்திக்கு மற்றும் பதவி உயர்வுகளுக்கு வழிகாட்டிய விடயங்கள் என்றும் மறக்க முடியாதவை. மேலும் அவரது ஒவ்வொரு வளர்ச்சிப்படிகளிலும் தன்னலமற்ற சேவையை எமது வலயத்தின் யுனிசெவ் இணைப்பாளராக இருந்து பல வளங்களைப் பெற்றுக் கொடுத்ததோடு பிள்ளை நேயப் பாடசாலைகளில் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டதும் அவரது உயர்வுக்கு படிக்கற்களாக அமைந்த இது போன்ற பல விடயங்களை இந்நாளில் போற்றுகின்றோம். அவரது புன்சிரிப்பும் கூரிய பார்வையும் நிமிர்ந்த ஆளுமை கொண்ட நடையும் மற்றவர் மனம் நோகாது வேலைகளை வெற்றி கொள்ளும் நுட்ப முறைகளும் அவருக்கே உரித்தான தனிச் சிறப்பாகும்.

து. யோகநாதானந்தர்
அதிபர், மு/மல்லாவி மத்திய கல்லூரி.

## நாற்பது வருட கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெறும் கல்வி நிர்வாகி உத்தமர் சின்னத்தம்பி இராஜேஸ்வரன்

நாற்பது வருட கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெறும் நல்லாசான் திருவாளர் சின்னத்தம்பி இராஜேஸ்வரன் அவர்களின் சேவை விதப்பினைப் பாராட்டி வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் அகமகிழ்கிறேன்.

1971ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆசிரிய சேவையில் தன்னை இணைத்துக் கொண்ட இராஜேஸ்வரன் அவர்கள் ஆசிரியராக, அதிபராக, கோட்டக் கல்வி அதிகாரியாக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக, பதில் உதவிக் கல்விப் பணிப்பாளராக பல்பரிமாணங்களில் தனது தடத்தைப் பதித்து, தமிழ் கூறு நல்லுலகுக்கும் மாணவ சமுதாயத்துக்கும் அரும் பணியாற்றியுள்ளார். பாடசாலை ஆசிரியராக கற்பித்தல் பணிகளில் மாத்திரமன்றி, கல்வித் துறைசார் ஏனைய பதவிகளினூடாக கல்வி நிர்வாக சேவையிலும் பல்வேறு அபிவிருத்திகளுக்கு கால்கோளிட்ட பெருமை இவரையே சாரும்.

அவரது சேவை உத்தியோகபூர்வமற்ற வகையில் தொடர்ந்தும் இருக்கும் என நம்புவதோடு, அவர் தனது அனுபவத்தின் வழி வந்த பட்டறிவினை அவர்தம் வழிதோன்றல்களுக்கும் நல்கி ஓர் ஆலோசகராக தனது பணியினைத் தொடர வேண்டுமென்ற அவாவுடன், அவரது ஓய்வுக் காலம் நிம்மதியாவும் சந்தோஷமாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

கலாநிதி என். ரவீந்திரகுமாரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மிகப் பணியுடன் சமூக பணியையும் முன்னெடுக்கும் சந்நிதியான் ஆச்சிரமம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் அன்னதானம், ஆன்மிகம் சார்ந்த பணிகளுடன் நலிவுற்றோருக்கு உதவும் சமுதாயப் பணியையும் ஆற்றி வருகின்றது. இந்தச் சமுதாயப் பணிகள் பல்வேறு பிரிவுகளாகப் பல்வேறு கட்டங்களில் நடைபெறுகின்றன.

சந்நிதி கோயிலே கதி என ஆலயச் சுற்றாடலில் வாழ்ந்து வரும் ஆதரவற்ற வயோதிபர்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்கள் ஆகியோருக்கு உதவிகளை வழங்கி வருவதுடன், வறுமையில் போராடும் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

சந்நிதி கோயில் சுற்றாடலில் வாழ்ந்து வரும் ஆதரவற்ற வயோதிபர்களின் பசியைப் போக்கும் பொருட்டு கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நித்திய அன்னதானப் பணியால் வயோதிபர்களுக்கு அறுசுவையுடன் தினமும் மதிய உணவு கிடைக்கின்றது. மதிய உணவுடன் மட்டுமல்லாமல் இவர்களுக்குத் தினமும் காலையும் இரவும் சோறு தவிர்ந்த வேறு ஆகாரங்களும், காலையிலும் பிற்பகலிலும் தேநீரும் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்படுகின்றது. அத்துடன் வருடத்தில் ஒரு முறை ஆண் வயோதிபர்களுக்கு ஆடைகள், பெண் வயோதிபர்களுச் சேலை, சட்டை அனைவருக்கும் படுக்கை விரிப்புகள் என்பனவும் வழங்கப்படுகின்றன.

சந்நிதி முருகனே துணை, அவனே எமக்குத் தஞ்சம் என ஆலயச் சூழலில் வாழ்ந்து வரும் வயோதிபர்களுக்கு மூன்று வேளை உணவும், காலத்துக்குக் காலம் உடுபுடைவைகளும் கிடைத்து வருவதால் அவர்கள் பெரும் ஆறுதலையும் நிம்மதியையும் அனுபவித்து வருகிறன்றனர். முருகனை நம்பிய அவர்களுக்கு இவ்வாறான தேவைகளை சந்நிதியான் ஆச்சிரமம் நிறைவேற்றி வருவது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற சுமார் 65 குடும்பங்களின் நிலவரங்கள் அறியப்பட்டு அந்தக் குடும்பங்களுக்கு மாதாந்தம் உலர் நிவாரணங்கள் வழங்கப்படுவதுடன், அவர்களில் தங்கியுள்ள பிள்ளைகளின் கல்வித் தேவைக்காக தலா 500 ரூபா தொடக்கம் 3 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படுகின்றது. கடந்த 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணி தற்போது மேலும் விரிவடைந்து வருகின்றது. இது தவிர வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தொழில் ஊக்குவிப்பு முயற்சியாக ஆண்டு தோறும் தையல் இயந்திரங்களும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு தையல் இயந்திரங்களைப் பெற்றுக் கொண்ட பெண்கள் பலர் அதன் மூலம் தமது வாழ்வாதாரத்தை - ஜீவனோபாயத்தை முன்னெடுத்து வருவதை அறியக்கூடியதாக உள்ளது.

வலுவிழந்த சிலருக்கு முச்சக்கர வண்டிகளும் கடந்த காலங்களில் வழங்கப்பட்டிருக்கின்றன. கடந்த காலங்களில் பிரபல கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் சே.குகதாசனால் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைத்து நூற்றுக் கணக்கான வயோதிபர்களின் கண்கள் பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களுக்கு இலவசக் கண்ணாடிகள் நூற்றுக்கணக்கில் ஆச்சிரமத்தால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. இதேபோல சுமார் 50 மாணவர்களின் கண்கள் பரிசோதிக்கப்பட்டு அவர்களுக்கும் இலவசக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

இத்தகைய உதவிகள் காலந்தோறும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் சமுதாயப் பணியில் ஓரங்கமாக வறுமையான மாணவர்களின் கல்வியிலும் ஆச்சிரமம் தனது கவனத்தைச் செலுத்தி வருகின்றது.

கண்களில் குறைபாடுள்ள மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள், கற்றல் உபகரணங்கள், துவிச்சக்கர வண்டிகள் போன்றவற்றை வழங்குவதுடன் புத்தகங்கள், கொப்பிகள் என்பனவற்றை கட்டிக்கொடுத்தல், பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாதாந்த நிதி உதவிகள், சில மாணவர்களுக்கு ரியூசன் கல்விக்காக மாதாந்த பண உதவி போன்ற பணிகள் மாணவர் களுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் பணிகளில் தற்போது புத்தகங்கள், கொப்பிகள் கட்டிக் கொடுக்கும் பணிதவிர ஏனைய அனைத் துப் பணிகளும் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இதன் மூலம் இது வரை பல நூற்றுக் கணக்கான மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும், 25 இற்கு மேற்பட்ட மாணவ மாணவியருக்கு துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டன. சுமார் 35 மாணவர்களுக்கு ரியூசன் கட்டணம் மாதாந்தம் வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பேராதனை ஆகிய பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயிலும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 40 மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு மாதந்தோறும் அனுப்பி வைக்கப்படுகிறது.

**மாலவன்**

ஆச்சிரமம் சார்பாக தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய மாணவர்கள் மத்தியில் திருக்குறள் மனனப் போட்டி ஆண்டுதோறும் நடத்தப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இந்தக் கல்லூரி உயர்வகுப்பு மாணவர்கள் 75 பேருக்கு சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை உத்தியோகத்தர் திருமதி சிவராசா சீருடைத் துணிகளை வழங்கியிருந்தார். அத்துணிகளை ஆச்சிரமம் சீருடைகளாகத் தைத்து வழங்கியது.

முன்பள்ளிகளில் சிறார்களுக்குச் சிறந்த கல்விச் சேவை இடம் பெறவேண்டும் என்ற நோக்கத்துக்காக கடந்த 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆச்சிரமத்தால் முன்பள்ளிகளுக்கான சேவைகள் ஆரம்பமாகின.

அந்தக் காலப் பகுதியில் தொண்டைமானாறுச் சுற்றாடலில் உள்ள 5 முன்பள்ளிகளுடன் ஆரம்பமான இந்தச் சேவை வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதி முழுவதையும் உள்ளடக்கி கற்கோவளம் வரை விஸ்தரிக்கப்பட்டது.

முன்பள்ளிகளுக்கு ஆச்சிரமம் வழங்கிய சிறப்பான சேவையை அவதானித்து கரவெட்டி பிரதேச சபை விடுத்த வேண்டுகோளை ஏற்று கரவெட்டி - யார்க்கரை வரை முன்பள்ளிச் சேவை விஸ்தரிக்கப்பட்டது. பின்னர் அச்சுவேலி பத்தைமேனிப் பகுதியையும் உள்ளடக்கி 93 முன்பள்ளிகள் ஆச்சிரமத்தால் நிர்வகிக்கப்பட்டன. 93 முன்பள்ளிகளின் ஆசிரியைகளுக்கான உடுபுடைவைகள், 16 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த வேதனம் என்பன ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டன.

இந்த முன்பள்ளி மாணவர்களுக்கு நாளாந்தம் சத்துணவாக இரண்டு நாள்களுக்கு கடலை, இரண்டு நாள்களுக்கு பயறு, ஒரு நாள் லக்ஸ்பிறே, சீனி கலந்த ஜீவாகாரம் என வாரத்தில் ஐந்து நாள்களுக்கும் வேண்டிய பொருள்கள் அந்தந்த முன்பள்ளிகளுக்கு முன்கூட்டியே வழங்கப்பட்டு வந்தன. இதை விட இந்தச் சத்துணவைத் தயாரிக்க ஏற்படும் சாதாரணச் செலவுகளுக்காக ஒரு தொகைப் பணமும் வாராந்தம் வழங்கப்படுகின்றது.

அனைவரதும் நன் மதிப்பைப் பெற்று வந்த இந்தப் பணியானது காலச் சூழ்நிலை காரணமாகவும், பெருமளவு மக்களின் இடப்பெயர்வு காரணமாகவும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. தற்போது மேற்படி முன்பள்ளிகள் மீளவும் இயங்கி வருகின்ற போதிலும் அவற்றின் நிர்வாகங்களையும், அவற்றுக்கான உதவிகளையும் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள், கல்வித் திணைக்களம் என்பன பொறுப்பேற்றுக் கொண்டுள்ளன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### இன்னும் வராத கந்தன்

பல்லவி

*கந்தா கந்தாவென்று கனவிலும் அழைத்தேனே*
*கந்தனேன் வரவில்லை- நல்லை*

அனுபல்லவி

*என் மனவேதனை எனக்குள்ள சோதனை*
*எல்லாம் சொல்வதற்கே- உன்னைக் (கந்தா)*

சரணம்

*அன்புடன் அடியளித்துப் பண்புடன் பண்ணிசைத்தே*
*உந்தனைக் கண்ணுறவே*
*எண்திசையுமேகி எங்குற்று மலைந்தேனே*
*என்னவனே இன்னுமா ஏமாற்றம்? (கந்தா)*

சுபாஷினி- பிரணவன், அச்சுவேலி.

### சிந்தை எல்லாம் நிறைந்தாயே முருகா

*ஐங்கரனின் மைந்தர்களில் கடைசிப் புதல்வனை*
*மங்கை உமையின் புதல்வனாம் கந்தசாமி சந்நிதியை*
*எங்கு சென்ற போதும் இடைவிடாது*
*நோகாது தகர்த்திடுவாய்*
*தந்தைக்கு உபதேசம் செய்தாயே முருகா*
*சிந்தையெல்லாம் நிறைந்தாயே முருகா*
*விந்தையான உலகை வலம் வந்தாய் முருகா*
*உந்தன் அண்ணனையே தூது அனுப்பினாயே*
*கந்தசாமி தெய்வமே முருகா...*

வாஜி, கரணவாய் கிழக்கு.

### கந்தன் புகழ் பாடுவோம்..

*சிந்தையுருகிச் சீராளன் புகழ் பாட*
*முந்தை வினை தீர்க்கும் முன்னவனாய்- கந்தனென*
*வந்தானொருவன் வளஞ்சேரும் நல்லூரில்*
*எந்தையாய் ஏற்றேன் இனிது!''*

தேவிகணேஸ்

### புதுவாழ்வு தர வா வா வா முருகா

*நம்பிக்கை கொண்டவருக்கு நலமருளும் நல்லூரா*
*சரவணப் பொய்கையில் தோன்றிய சரவணபவன்*
*அம்பிகையின் புதல்வன் பாலமுருகா*
*கார்த்திகைப் பெண்களிடம் வளர்ந்த கார்த்திகேயா*
*ஆனைமுகனின் தம்பியே ஆறுமுகா*
*ஞானப்பழத்திற்காக மயிலேறிய மயிலோனே*
*ஔவைக்கு அருள்காட்சி கொடுத்த சண்முகா*
*வள்ளி தெய்வானையின் மணவாளனே கந்தா*
*ஆறுபடை வீடு கொண்ட ஆறுபடையா*
*கன்னியர் மனம் கவர்ந்த வேந்தன்*
*நல்லூரில் பதி கொண்ட நல்லூரா*
*புள்ளி மயிலேறி வந்து தமிழருக்கு புது வாழ்வு தர*
*வா வா வா முருகா முருகா முருகா*

தம்பிமுத்து சங்கீதா, யாழ்ப்பாணம்.

### கந்தனின் பாதமே கதி

*நல்லூரான் வாசலுக்கு வாருங்கள்*
*நாளும் அவன் புகழ் பாடுங்கள்*
*தீராத வினையெல்லாம் தீர்த்து வைப்பான் - அவன்*
*சேவடியை நாடித் துதித்து நின்றால்...*
*கருவறையில் வேலாய்க் காட்சி தருவான்*
*கருணைக் கடலாய் எங்கும் நிறைந்து நிற்பான்*
*ஒரு ரூபாய் அர்ச்சனை போதுமுனக்கு*
*'ஓம்' என்ற ஓங்காரமேதுணை நமக்கு*
*கலாசார உடையணிந்து நல்லூரை வலம் வருவோம்*
*கந்தனே கதியென்று சரண் புகுவோம்*

செ.ரவிசாந், குப்பிளான்.

திருவிழாச் சிறப்புற பிரார்த்திப்போர்:
வெஸ்ரா இன்டஸ்றீஸ்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை
T.P: 0214922922, 0215673978, 0114857032, 0214591372

உதயன்
23 ஒகஸ்ட் 2011 செவ்வாய்க்கிழமை

# பண்டைய காலத்து கல்வெட்டுக்களை அண்மித்து அறிவிப்புப் பலகைகள் நிறுவும் பணி ஆரம்பம்

**தொல்லியல் திணைக்கள பதில் பணிப்பாளர்**

கொழும்பு, ஓக. 23

வரலாற்றுப் பெறுமதிமிக்க பண்டைய காலத்துக் கல்வெட்டுக்கள் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழி பெயர்க்கப்படுவதுடன் பண்டைய கால கல்வெட்டுக்களை அண்மித்து அறிவிப்புப் பலகைகளை நிறுவும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொல்லியல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் நாமல் கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் 10 மில்லியன் ரூபா செலவிட்டு ஐம்பது வரையிலான அத்தகைய மொழி பெயர்ப்புப் பலகைகள் நிறுவப்பட்டு வருகின்றன. வடமேல், தெற்கு, வடமத்திய ஆகிய மாகாணங்களில் நாற்பது லட்சங்கள் வரையில் செலவிடப்பட்டு 250 வரையிலான மொழிபெயர்ப்புப் பலகைகள் நிறுவப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய செயற்படுத்தப்படும் இந்தத் திட்டத்தில் விசேடமாக பொலநறுவை மற்றும் கதிர்காமம் கிரிவெஹெர சுற்றாடலில் உள்ள கல்வெட்டுக்கள் சம்பந்தமாக அதிகளவு கவனம் செலுத்தப்படுகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-22)

# தமிழ் பேசும் மக்களின் ஒருமைப்பாட்டை தேர்தலில் வெளிக்காட்ட வேண்டும்

கொழும்பு, ஓக.23

தமிழ்பேசும் மக்களின் ஐக்கியத்தை வெளிக்காட்டும் வகையில் கொழும்பு மாநகரசபைத் தேர்தலை நாம் எதிர்கொள்ள வேண்டும். அதில் எமது தனித்துவமான வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு அனைவரும் முன்வரவேண்டும் - என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் எஸ்.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மத்தி ஜிந்துபிட்டியில் ஜனநாயக மக்கள் முன்னணியின் ஆதரவாளர்களுடனான விசேட கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலைநகர் கொழும்பு எமது நாட்டின் வளம் மிக்க பிரதேசமாகும். இங்கு சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களே பெருமளவில் வாழ்கின்றனர். இருந்தபோதும் அவர்களுக்கு அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதில் தயக்கம் காட்டும் போக்குகளே மேலோங்கிக் காணப்படுகின்றன.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் மிகப் பெறும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட வேளையில் அதனை துணிச்சலுடன் தட்டிக்கேட்டு சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்த பெருமை எமது ஜனநாயக மக்கள் முன்னணிக்கும் தலைவர் மனோ கணேசனுக்கும் உரித்துடையது.

# தமிழ் தெரிந்த உத்தியோகத்தர்கள் இல்லை; பரீட்சைக்குச் சென்ற மாணவர்கள் சிரமம்

கொழும்பு,ஓக23

குருநாகல் மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகள் இரண்டைச் சேர்ந்த 65 மாணவர்களிற்கு நேற்றுமுன்தினம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எழுதுவதற்கான பரீட்சை நிலையமாக முன்னேகுளம சிங்கள மகாவித்தியாலயம் ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கு தமிழ் மொழிபேசும் உத்தியோகத்தர்கள் எவருமே நியமிக்கப்படாததால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளானதாக அந்த மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

நிக்கவரெட்டிய கல்வி வலயத்திலுள்ள அபுக்காகம முஸ்லிம் வித்தியாலயம், மற்றும் கல்பனம முஸ்லிம் வித்தியாலயம் ஆகியற்றைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பாக மாவட்ட கல்விப் பணிப்பாளர் திலகரட்னவிடம் கேட்டபோது, தமிழ்மொழி தெரிந்த உத்தியோகத்தர்கள் எவரும் நியமிக்கப்படாமையினால் அந்த மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது எனவும் இது தொடர்பாக தான் விசாரணைக்கு உத்தரவிடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ச)

# கல்முனை மாநகர சபை தேர்தலில் 6 தமிழர், 19 முஸ்லிம்கள் போட்டி

அம்பாறை,ஓக.23

கல்முனை மாநாகரசபை தேர்தலில் 19 முஸ்லிம்களும் 6 தமிழர்களும் போட்டியிடவுள்ளனர். கல்முனை மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடுபவர்களை தெரிவு செய்யும் கூட்டம்நேற்று திங்கட்கிழமை ஒலுவில் துறைமுக விடுதியில் இடம்பெற்றது.

துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதிய மைச்சர் றோஹித அபேகுணவர்தன தலைமையில் இடம்பெற்ற இந்தக்கூட்டத்தில், பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா, மாகாண விவசாய அமைச்சர் நவரட்ணராஜா, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பியசேன, சரத் விஜே சேகர, ஸ்ரீயானி விஜயவிக்ரம, மாகாணசபை உறுப்பினர் புஸ்பராஜா ஆகியோர் கலந்துகொண்டன்ர். கல்முனை மாநாகர சபை தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் வேட்புமனுத் தாக்கல் இன்று இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# புத்தளத்தில் இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கையில்

கொழும்பு,ஓக.23

புத்தளத்தில் ஏற்பட்ட பதற்ற நிலையை அடுத்து, அந்தப் பகுதியின் பாதுகாப்பை இராணுவம் பொறுப்பேற்றுள்ளதாக புத்தளம் பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற கூட்டத்தில் பிரிகேடியர் கமகே தெரிவித்தார்.

மக்களை அமைதியாக வீடுகளுக்குச் சென்று வழமையான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு பெரிய பள்ளிவாசல் நிர்வாகசபையினாலும் புத்தளம் நகரசபைத் தலைவர் உட்பட அரசியல்வாதிகளினாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மர்ம மனிதன் விவகாரம் தொடர்பில் பொது மக்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைகலப்பு ஏற்பட்டதில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் பலியானதுடன், பொதுமக்கள் பலர் காயமடைந்துள்ளனர்.(ச)


## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

## காசிநாதர் குலசேகரம்

**(மணியம்)**

கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தெடுத்து
கல்வியிலும் வாழ்க்கையிலும் சிறக்க வைத்த – எம் தந்தையே!
எண்ணுக்கும் எழுத்துக்கும் விளக்கம் தந்து
ஏழ்மை எமை அணுகாமல் பார்த்திருந்த – எம் தந்தையே!
மண்ணுக்கு மேலாக பொறுமை காத்து
மாசில்லா அன்புடனே மடியில் வளர்த்த – எம் தந்தையே!
விண்ணுக்குள் மறைந்தீரே எம் தந்தையே!
உம் துணைவியின் பிரிவைத் தாங்காது
எமை விட்டு அன்னையிடம் சென்றீரே – எம் தெய்வமே!
செய்கின்ற உழவுத் தொழிலே தெய்வம் என்று
அத்தொழிலில் சிறந்த பெயர் பெற்ற எம் தந்தையே!
வேகமாய் நாற்பத்தைந்து நாள்கள் ஓட மறைந்தாலும்
எம் தந்தை நினைவுகளை
மறக்கவே முடியவில்லை இறைவா
உயிர் உள்ளவரை என்றும் உம் நினைவுகள்
எம்மிடம் இருக்கும் எம் தந்தையே!

தோற்றம்
1939.10.12

மறைவு
2011.07.10

கடந்த 10.07.2011 இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தந்தையின் மரணச்சடங்கின்போது எமக்கு உதவி செய்து உறுதுணையாய் நின்று மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவி செய்து கண்ணீர் அஞ்சலி, தொலைபேசி, தந்திகள் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் எம்முடன் துயர் பகிர்ந்த உற்றார், உறவினர்,நண்பர்கள்,அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று ( 23.08.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

களுபோவிலை,
[illegible]

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விவகாரம் குறித்த தீர்மானங்கள்; ஈழத்தமிழர் ஆதரவுக் கூட்டத்தில் நிறைவேற்றம்

பெங்களூர், ஒக.23

இலங்கை மீது இந்தியா பொருளாதாரத் தடை விதிக்கவும் இலங்கை விவகாரம் தொடர்பாக தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும் எனவும் போர்க் குற்றம் தொடர்பான குற்றவாளிகளை விசாரணைக்கு உட்படுத்த இந்தியாவில் உள்ள சகல அரசியல் கட்சிகளும் ஒருங்கிணைந்து போராட வேண்டும்- ஆகிய தீர்மானங்கள் ஈழத்தமிழர் ஆதரவுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

பெங்களூர் தமிழ்ச்சங்கத்தில் நேற்று முன்தினம் ஈழத் தமிழருக்காக ஆதரவுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு, சங்கத் தலைவர் மீனாட்சி சுந்தரம் தலைமை வகித்தார். உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ. நெடுமாறன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார்.

இந்தக் கூட்டத்தில், இலங்கை தொடர்பாக 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதன் விவரம் வருமாறு:

ஐ.நா.சபையின் நிபுணர் குழு வெளியிட்ட ஈழத்தமிழர் படுகொலை குறித்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை ஐ.நா.சபை மேற்கொள்ள வேண்டும்.

ஐ.நா.சபையின் நிபுணர் குழு தனது அறிக்கையில் இலங்கை அரசு மீது போர்க்குற்றச்சாட்டையும், மனித நேயத்துக்கு எதிரான குற்றங்களையும் சுமத்தி இருப்பதால், இந்திய அரசு அங்கு நிகழ்ந்த சம்பவங்களை இனப்படுகொலை என்று ஏற்று குற்றவாளிகளை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்து வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் இலங்கை மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும்.

இலங்கையில் தமிழர்களை படுகொலை செய்தவர்களை ஐ.நா.சபை போர்க்குற்றவாளிகள் என்று அறிவிக்க வேண்டும் என்றும், இலங்கையுடன் பொருளாதார உறவுகளை இந்திய அரசு துண்டித்துக் கொள்ள வேண்டும் என்றும் தமிழக சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய அரசுக்கு வலியுறுத்தப்படும்.

தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு உள்நோக்கம் கற்பித்தும், இலங்கையில் முன்பு அளிக்கப்பட்ட உறுதிமொழிகளுக்கு மாறாக தற்போது எந்தவித அதிகாரப் பரவலையும் ஏற்பதாக இல்லை என்றும் அறிவித்துள்ள இலங்கையின் வெளியுறவுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைக் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது.

ஈழத்தமிழர்களுக்கு எதிராகப் போர்க்குற்றம் புரிந்த குற்றவாளிகளை பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்த இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும், மனித உரிமை அமைப்புகளும் ஒருங்கிணைந்து போராட வேண்டும் என்று வேண்டுகோள்விடுக்கப்பட்டது

மேற்கண்ட ஆறு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (வ)

## பேச்சுக்குத் தூதரை நியமிக்குக! ஹசாரே குழு தெரிவிப்பு

டில்லி, ஒக.23

அன்னா ஹசாரேவுடன் பேச்சு நடத்துவதற்காக தூதர் ஒருவரை அரசு நியமிக்க வேண்டும்; நம்பிக்கையை ஏற்படுத்தும்விதமாக நாடாளுமன்றத்தில் இருந்து தற்போதைய லோக்பால் வரைவு மசோதாவை வாபஸ் பெற வேண்டும் என்று அன்னா ஹசாரே குழுவினர் தெரிவித்தனர்.

மேலும் நாம் பேச்சுக்குத் தயாராகஇருக்கிறோம். ஆனால் அதற்கான சூழ்நிலையை அரசு உருவாக்க வேண்டும் என அன்னா ஹசாரே குழுவில் இடம்பெறும் சுவாமி அக்னிவேஷ் தெரிவித்தார்.

எங்களுடன் பேச்சு நடத்த அரசு விரும்பினால் தூதர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். (வ)




சென்னை வி.எஸ்., மருத்துவமனையில், புற்றுநோய் சிகிச்சைக்கான அதிநவீன கதிர்வீச்சுக் கருவி (ரேபிட் ஆர்க்) அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நிகழ்வில், மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் புதிய கருவியை இயக்கி வைக்கிறார். அருகில் நீதிபதி ராஜேஸ்வரன், டாக்டர் சுப்ரமணியன், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மயில்வாகனன் நடராஜன், சிட்டி யூனியன் வங்கி நிர்வாக இயக்குநர் காமகோடி ஆகியோர் நிற்கின்றனர்.

## கடமையைச் செய்யத் தவறியதால் பிரதமர் பதவி விலக வேண்டும்

### அத்வானி கருத்து



நெல்லூர், ஒக.23

பிரதமர் மன்மோகன்சிங், அவரது கடமைகளைச் செய்வதில் முழுமையாகத் தோல்வி அடைந்து விட்டார். அதாவது நாட்டில் ஊழலை ஒழிக்கத் தவறி விட்டார். எனவே அவர் பதவியை பதவி விலக வேண் டும்'' என்று பாரதீய ஜனதா மூத்த தலைவர் அத்வானி தெரிவித்துள்ளார்.

ஸ்வர்ண பாரத் அறக்கட்டளையின் 10ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காக அத்வானி நேற்று முன்தினம் நெல்லூருக்குச் சென்றார். அங்கு நடந்த பா.ஜனதா தொண்டர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசுகையில்:

பிரதமர் பதவியை வகிக்கும் மன்மோகன்சிங், டில்லி மேல் சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர். அவர் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவர் அல்ல. தேர்தலில் போட்டியிட்டு, மக்கள் வாக்களித்து அதில் அவர் வெற்றி பெற்று இருந்தால், மக்களைப் பற்றி அவருக்குத் தெரிய வந்து இருக்கும்.

மேல் சபை உறுப்பினராக நியமிக்கப் பட்ட மன்மோகன் சிங்குக்கு, மக்களின் வறுமை பற்றியோ, சாதாரண மக்களின் அடிப் படைத் தேவை பற்றியோ தெரிய வாய்ப்பு இல்லை.

மத்திய அமைச்சர்களில் சிலர் ஊழலில் ஈடுபட்டு இருக்கின்றனர். நீதிமன்றம் உத்தர விட்ட பின்பே, அவர்கள் பதவி விலகி இருக்கிறார்கள். இதைப் பிரதமர் என்ற பொறுப்பில் உள்ள மன்மோகன்சிங், ஏற்கனவே செய்திருக்க வேண்டும்.

ஊழலை ஒழிக்க ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதில் தாமதிக்கக் கூடாது. - என்றார் அவர். (வ)

## ஹசாரேவுக்கு ஆதரவாக சென்னையில் திரையுலகத்தினர் இன்று உண்ணாவிரதம்

சென்னை, ஒக.23

வலுவான லோக்பால் மசோதாவை உருவாக்குமாறு கோரி டில்லியில் உள்ள ராம்லீலா மைதானத்தில் உண்ணா விரதம் இருந்துவரும் அன்னா ஹசாரேவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் திரையுலகத்தைச் சேர்ந்த நடிகர்கள், நடிகைகள் சென்னையில் இன்று உண்ணாவிரதம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

சென்னை, அண்ணா மேம்பாலத்துக்கு அருகில் உள்ள தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபை வளாகத்தில் இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இந்த உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து திரையுலக போராட்ட அமைப்பாளர்களில் ஒருவரும் தயாரிப்பாளருமான சித்ராலட்சுமணன் கூறுகையில்:

அன்னா ஹசாரேயின் ஊழலுக்கு எதிரான போராட்டத்துக்கு உலகளாவிய ரீதியில் ஆதரவு அதிகரித்து வருகின்றது.

அந்த வகையில் தமிழ் திரையுலத்தினரும் அவருக்கு ஆதரவு அளிக்கும் நோக்கில் உணர்வு பூர்வமான மேற்படி உண்ணா விரதத்தை இன்று நடத்தவுள்ளனர். இதில் திரையுலகினரின் அனைத்துத் தரப்பினரும் பங்கேற்கவுள்ளனர்.

தயாரிப்பாளர் சங்கத் தலைவர் எஸ்.ஏ. சந்திரசேகரன், நடிகர் சங்க பொதுச் செயலாளர் ராதாரவி, திரையரங்கு உரிமையாளர்கள் சங்க தலைவர் அபராமி ராமநாதன், இயக்குநர் சேரன், திரைப்பட தொழிலாளர் சங்கச் செயலாளர் சிவா, விநியோகஸ்தர், சங்கத் தலைவர் கலைப் புலி சேகரன் போன்றோர் தலைமையில் பெரும் திரளான திரையுலகினர் பங்கேற்கின்றனர் என்றார். (வ)

## சொத்து விவரங்களை வெளியிட பின்னடித்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் பதவி உயர்வு ரத்து

### மத்திய அரசு நடவடிக்கை

டில்லி, ஒக.23

சொத்து விவரங்களை வெளியிடாத ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் 208 பேர் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தகவல் வெளியாகவுள்ளது.

ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் அனைவரும் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்திற்குள் தங்களது மற்றும் தங்களின் குடும்ப உறுப்பினர்கள் பெயரில் உள்ள அசையாச் சொத்து விவரங்களை வெளியிட வேண்டும் என்பது அரசுப் பணி விதிகளில் உள்ள நடைமுறையாகும்.

ஆனால் இந்த வருடம் ஜூன் மாதம் வரை 208 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் தமது பெயரில் உள்ள சொத்துக்கள், வருமான வரிக்கணக்கு விவரங்கள் மற்றும் தங்களது குடும்ப உறுப்பினர்களின் பெயரில் உள்ள சொத்து விவரங்களை வெளியிடவில்லை. அதனால் அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கும் பணியை மத்திய அரசு ஆரம்பித்துள்ளது.

கடந்த வருடம் வரை உள்ள சொத்து விவரங்களைச் சமர்ப்பிக்காதது ஏன் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து விளக்கம் கேட்டு பெறும்படி அவர் கள் பணியாற்றும் துறைகள் மற்றும் அமைச்சகங்களை மத் திய அரசு கேட்டுக் கொண்டுள் ளது. இதற்கு அவர்கள் சரியான பதில் தரவில்லை எனில் தண் டனை நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்ப டுகிறது.

இதுவரையில் இல்லாத வகையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு லஞ்ச ஒழிப்புத் துறையினர் அளிக்கும் சான்றிதழ் மறுக்கப்படும். லஞ்ச ஒழிப்புத் துறையினர் சான்றிதழ் வழங்கினால் தான் பதவி உயர்வுக்கான பட்டியலில் இவர்கள் இடம்பெற முடியும்.

பொதுவாகக் குற்றப்பத்திரிகை தாக்கலுக்கு உள்ளான அதிகாரிகளுக்குத் தான் லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகளின் சான்றிதழ் மறுக்கப்படும். தற்போது அசையாச் சொத்து விவரங்களை வெளியிடவில்லை என்பதற்காக லஞ்ச ஒழிப்புத்துறை வழங்கும் சான்றிதழ் மறுக்கப்பட உள்ளமை இது தான் முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பு

## அமரர் வைரமுத்து பகவத்சிங்கம்



கடந்த 23.07.2011 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் வைரமுத்து பகவத்சிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (23.08.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)*

204/1, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். *(7145)*

பிரேமாவதி
(மனைவி)

# குறுகிய கால தொழிற்பயிற்சிகள்

வவுனியா, ஒக. 23

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியால் குறுகிய கால புதிய தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

''தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர்'' கற்கை நெறிக்கு சாதாரணதரத்தில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்து இருந்தல் வேண்டும்.

''வேலை தேடுவோருக்கான தொடர்பாடல்'' ஆங்கிலச் சான்றிதழ் கற்கை நெறிக்குச் சாதாரண தரத்தில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தி ''அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

# மரண அறிவித்தல்

## தம்பையா சண்முகரத்தினம்



காரைநகர், தங்கோடையை பிறப்பிடமாகவும் வவுனியா, தோணிக்கல்லை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா சண்முகரத்தினம் (21.08.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காரைநகர் பலகாட்டைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் தம்பையா உபாத்தியார்- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் சிவன் கோயில் வீதியைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாம்பிகையின் அன்புக்கணவரும் கலைச்செல்வி (UK), சிறீதரன் (UK), காலஞ்சென்ற கலைமகள் மற்றும் ஸ்ரீரஞ்சினி (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுப்பிரமணியம்(UK), நந்தினி(UK), பத்மநாதன்(UK) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற கணேசபிள்ளை மற்றும் கமலாதேவி, சறோஜினிதேவி, மகேஸ்வரி, சிவானந்தராஜா(இல.மி.ச.சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரி, இராசலிங்கம், கதிரவேலு, காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், விக்னேஸ்வரி மற்றும் கலாஜோதி, காலஞ்சென்ற சின்னம்மா ஆகியோரின் மைத்துனரும் சண்முகநாதன், Dr. சுவாமி நாதன்(காரைநகர் அரசினர் வைத்தியசாலை), சோதிநாதன், பாக்கியம் ஆகியோரின் அன்புமைத்துனரும் கேதியன், விகிர்தன், சந்தோஸ், அபிலாஷ்,தேனுகா,தர்சிகா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2011) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தங்கோடை, காரைநகர்

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19★08★1931



மறைவு
21★08★2003

## அமரர் பொன்னையா பாலசிங்கம்

(RETIRED SUPERINTEND OF AUDIT)

*அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்து - எங்களை*
*அவனியிலே வாழ்வாங்கு வாழவைத்த தந்தையே!*
*எட்டாண்டு நினைவு நாளில் - உங்களை*
*நினைந்து வணங்குகின்றோம் அப்பா!*

166/3, சேர். பென் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.





யாழ்ப்பாணம், ஒக.23

வட்டு. வடக்குப் பிராமணாட்சி தோட்ட கற்பக விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.


எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது. (ம-28)

### விற்பனைக்கு

இல.89 வைமன் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள வீடு விற்பனைக்கு உள்ளது என்பதை அதன் உரித்தாளரான சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம் ஆகிய நான் அறியத் தருகின்றேன்.

தொடர்பு: 0750976470

# மரண அறிவித்தல்



## V.S.மரியநாயகம்

(சம்மாட்டியார்)

முல்லைத்தீவு, மணற்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் இந்தியா செய்யாறை வசிப்பிடமாகவும் கொண்ட V.S.மரியநாயகம் 09.08.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவானிப்பிள்ளை- லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் மத்தியாஸ் - இராக்கினி அம்மாள் தம்பதியரின் அன்பு மருமகனும் மேரி செல்வநாயகியின் அன்புக் கணவரும் பேரின்பநாயகம் (இன்பம்,றொனி-லண்டன்), பேரின்பநாயகி (றொபின் - நெதர்லாந்து), பேரின்பராஜன் (ராஜன், றோய் - லண்டன்), பேரின்பராக்கினி (றொக்சி- லண்டன்), பேரின்பரமணி (றொபேந்திரா - இந்தியா), பேரின்பதீபன் (றொபின்சன்- லண்டன்), பேரின்பறமணான் (றொபேர்ட் - சுவிஸ்), பேரின்பசுகந்தி (றொக்ஸ் - இந்தியா), பேரின்பசுமதி (றொபின்கலா- இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவராசா (நெதர்லாந்து), விஜயகாந்த் (லண்டன்), கலிஸ்ரன் (இந்தியா), அக்னேஸ் அம்மா (லண்டன்), யூட்மேரி அஞ்சலா (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனும் ஆரோக்கியம் (இலங்கை), காலஞ்சென்றவர்களான மார்த்தம்மா, ஜெயம், இராணி, அமலதாஸ் மற்றும் செபமாலை (இலங்கை), ஆரோக்கியநாதர் (இலங்கை) அருளானந்தன் (பிரான்ஸ்), அமலநாயகி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, ஜோசப் மற்றும் யேசுபாலன் (இலங்கை), லீனதாஸ் (பிரான்ஸ்), மரியராணி (இந்தியா), மரியகொரற்றி (இலங்கை), லூட்ஸ்மேரி (சாந்தி- பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான ஆரோக்கியநாதர், சிங்கராசா, அன்னம்மா, மேரிஜெசிந்தா மற்றும் மரிய கொலஸ்ரிக்கா (இலங்கை), அன்னமேரி (இலங்கை), இராணி (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் சூசைப்பிள்ளை, பாக்கியநாதர், வரதராஜன் (யோகன்) ஆகியோரின் சகலனும் இனித்தா, பவித்தா, றொனியா (லண்டன்), ஸ்ரீராம், சிவராம் (நெதர்லாந்து), ஜாய்சன் (இந்தியா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (24.08.2011) புதன்கிழமை காலை இந்தியா செய்யாறில் உள்ள மாதா கோயிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நண்பகல் ஆலய வளவில் உள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 12 ஆம் வருட நினைவு நாளும் விண்ணக வாழ்வில் 31 ஆம் நாளும்

பிறப்பு:
16.03.1933
இறப்பு:
22.08.1999



பிறப்பு:
29.12.1933
இறப்பு:
25.07.2011



அமரர்
தொம்மைப்பிள்ளை அருளப்பு

அமரர்
அருளப்பு திரேசம்மா

"சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் எங்களை மறவாதீர்கள்"

அன்பின் பிறப்பிடமாய்
அமைதியின் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பிள்ளைகள் எல்லோரையும் வழி நடத்திய எம்
அன்புத் தாயின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (24.08.2011)
புதன்கிழமை காலை 7 மணிக்கு சில்லாலை புனித யாகப்பர்
ஆலயத்தில் நடைபெற இருக்கும் திருப்பலியில் பங்குபற்றி அதனைத்
தொடர்ந்து அவரின் இல்லத்தில் நடைபெறும் காலை உணவிலும்
பங்குபற்றிச் செல்லுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு (7154)

குடும்பத்தினர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிபோலியில் இடம்பெற்ற உக்கிரச் சண்டையில் 1,300 பேர் உயிரிழப்பு; 5 ஆயிரம் பேர் காயம்

## கைதான கடாபியின் மகன் பாதுகாப்பான இடத்தில்

திரிபோலி, ஒக. 23

லிபியத் தலைநகர் திரிபோலியில் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் முதல், மும்மர் கடாபியின் படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் 1,300 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 5 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறு லிபியத் தகவல் தொடர்பு அமைச்சர் மூஸா இப்ராஹிம் தெரிவித்துள்ளார். எனினும் இந்த எண்ணிக்கைகள் உடனடியாக ஊர்ஜிதப் படுத்தப்படவில்லை.

அதேவேளை, தலைநகரான திரிபோலிக்கு உள்ளும், புறமும் இன்னும் ஆங்காங்கு சண்டைகள் நடைபெற்று வருகின்றன எனக் கிளர்ச்சியாளர்களின் இடைக்கால தேசிய நிர்வாகக் குழுத் தலைவர் முஸ்தபா மொஹம்மத் அப்துல் ஜலீல் நேற்று திங்கட்கிழமை அதிகாலை தெரிவித்துள்ளார்.

கிளர்ச்சியாளர்களின் படைகள் சமீப நாள்களாக கிழக்கிலும், மேற்கிலும் முன்னேறி வந்துள்ளன. இவற்றுக்கு அனுசரணையாக நேட்டோ விமானப் படை செயல்பட்டது. சிவிலியன்களைப் பாதுகாக்கவேண்டும் என வலியுறுத்தும் ஐ.நாவின் தீர்மானத்துக் கிணங்க நேட்டோ, கிளர்ச்சியாளர்களுக்கு உதவி வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஒபாமா அறிக்கை

கிளர்ச்சியாளர்களின் படை தலைநகரான திரிபோலியின் மத்திய பகுதிக்குள் நுழைந்துவிட்டது என வெளியான தகவலை அடுத்து, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அதில் அவர், ''இன்றிரவு இந்தச் சந்தர்ப்பத்தில் கடாபியின் ஆட்சி இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. கொடுங்கோலரின் இறுக்கமான பிடியிலிருந்து திரிபோலி நழுவத் தொடங்கிவிட்டது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

### பிரிட்டிஷ் பிரதமர்

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் இது குறித்துக் குறிப்பிடுகையில், ''கடாபியின் இறுதிக் காலம் நெருங்கிவிட்டமை தெளிவாகிவிட்டது. லிபிய மக்களுக்கு எதிராக, லிபிய தலைவர் அதிர்ச்சியூட்டக்கூடிய பாரதூரமானகுற்றங்களைபுரிந்துள்ளார். அவரது சொந்த மக்களை மேலும் கொடுமைகளுக்கு உள்ளாக்கிவிடக்கூடாது. மேலதிக இம்சைகளைஅம்மக்கள் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு அவர் ஆட்சியைவிட்டு வெளியேறிவிட வேண்டும்'' எனத் தெரிவித்துள்ளார்.

லிபிய தகவல் தொடர்பு அமைச்சர் மூஸா இப்ராஹிம் நேட்டோ மீது குற்றஞ் சுமத்தியுள்ளார். 'ஆயுதக் குழுக்களுக்கு' நேட்டோ விமானப் படை உதவியுள்ளது. கடாபியின் அரசு கிளர்ச்சியாளர்களின் இடைக் கால நிர்வாக தேசியக் குழுவுடன் நேரடியாகப் பேச்சு நடத்தத் தயாராக இருந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''கைதுசெய்யப்பட்டுள்ள கடாபியின் புதல்வர் சைப் அல்-இஸ்லாம் நீதி விசாரணைக்கு ஒப்படைக்கப்படும் வரை பாதுகாப்பான இடத்தில் நெருங்கிய பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருப்பார்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பசுபிக் கடலில் பூகம்பம்; ஆஸ்திரேலியாவில் பீதி!

சிட்னி, ஒக. 23

தெற்கு பசிபிக் கடலில் ஆஸ்திரேலியா அருகே வனாது என்ற நாடு உள்ளது. இது 83 தீவுகளைக் கொண்டது. சுமார் 2 ஆயிரம் கி.மீற்றர் பரப்பளவு உடையது. ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3.55 மணியளவில் வனாது தலைநகர் போர்ட்-விலா நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் சக்தி வாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது.

இதனால் வீடுகள், கட்டடங்கள் குலுங்கின. தூங்கிக் கொண்டிருந்த மக்கள் பீதியும் அச்சமும் அடைந்தனர். தங்களது வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் ஓட்டம் பிடித்தனர்.

காலை 5.19 மணிக்கு மீண்டும் பூகம்பம் ஏற்பட்டது. தலை நகர் போர்ட்-விலாவை மையப்படுத்தி பூமிக்கு அடியில் 40 கி.மீற்றர் ஆழத்தில் பூகம்பம் ஏற்பட்டுள்ளது.

அடுத்தடுத்து ஏற்பட்ட பூகம்பம் காரணமாக வழக்கத்தை விட கடலில் மிக உயரமான அலைகள் எழுந்தன.


# புயல் மழைக்கு மத்தியில் பாப்பரசர்

மாட்ரிட், ஒக. 23

ஸ்பெயினின் தலைநகரான மாட்ரிட்டில் பதினாறாவது ஆசீர்வாதப்பர் பேசிய விழாவில் புயல் வீசியது. இதனால், 20 நிமிட நேரம் அவரது உரை தடைப்பட்டது. பாப்பரசர் பதினாறாவது ஆசீர்வாதப்பர் ஸ்பெயினில் 5 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

மாட்ரிட் நகரில் உலக இளைஞர் தின விழா நடைபெறுகிறது. இதன் நிறைவு நாள் விழாவில் அவர் கலந்து கொண்ட பாப்பரசர் பெனடிக்ட் பேச ஆரம்பித்தார். அப்போது கடுமையானபுயல் காற்று வீசியது. சிறிதுநேரத்தில் மழை கொட்ட ஆரம்பித்தது.

இதனால் 84 வயது பாப்பரசர் பெனடிக்ட் கொட்டும் மழையில் நனைந்தார். உடனே அங்கு குடைகள் கொண்டு வரப்பட்டன. மழை தொடர்ந்து பெய்ததால் 20 நிமிட நேரம் தனது பேச்சை நிறுத்தினார்.



கேப் வெட்டாவில் நடந்த அதிபருக்கான தேர்தலில் அந்த நாட்டுப் பிரதமர் ஜோய் மரியா தலைநகர் பிரய்யாவில் வாக்களித்தார்

# ஆப்கனில் தேர்தல் முறைகேடு: ஒன்பது எம்.பி.க்கள் பதவி நீக்கம்

காபூல், ஒக. 23

ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் முறை கேட்டின் மூலம் வெற்றிபெற்ற 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்தது தேர்தல் ஆணையம்.

அவர்களுக்குப் பதிலாக நியாயமாக வெற்றிபெற்ற 9 உறுப்பினர்களை மீண்டும் பதவியில் அமர்த்த உத்தரவு பிறப்பித்துள்ளது.

முதலில் வெளியான நாடாளுமன்றத் தேர்தலின் முடிவை ஆய்வு செய்ததன் மூலம் இப்போது புதிதாகப் பொறுப்பேற்றுள்ள 9 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெற்றி பெற்றமை உறுதியாகியுள்ளது என்றும் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தின் இந்த அதிரடி நடவடிக்கையை பெரும்பாலானோர் வரவேற்றுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. இதைத்தொடர்ந்து உறுப்பினர்கள் ஜனவரி மாதம் பதவியேற்றுக்கொண்டனர். ஆனால், அன்று முதல் இதுவரை நாடாளுமன்றம் கூடவில்லை.

தேர்தலில் மாபெரும் முறைகேடுகள் நடந்துள்ளன என அரசியல் தலைவர்கள் மாறி மாறி குற்றஞ்சுமத்தியும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டும் வருகின்றனர். இதனால் நாடாளுமன்றத்தைக் கூட்ட முடியாத நிலைமை நீடிக்கிறது.

# அன்னா ஹசாரேவுக்கு ஆதரவாக அமெரிக்காவிலும் போராட்டம்

வாஷிங்டன், ஒக.23

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அன்னா ஹசாரேவுக்கு ஆதரவாக, அமெரிக்காவின் பல இடங்களில் உள்ள இந்தியர்கள் நேற்றுமுன்தினம் போராட்டம் மற்றும் பேரணி நடத்தினர். வாஷிங்டன் நகரில் உள்ள இந்தியத் தூதரகம் முன், அமெரிக்க வாழ் இந்தியர்கள் கடந்த ஐந்து நாள்களாக, போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் கூறுகையில்:,

"இந்திய அரசின் நடவடிக்கைகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. இந்திய நாட்டுக்காகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அன்னா ஹசாரே உட்பட நாங்கள் அனைவரும் எங்களது கோரிக்கையில் தெளிவாக உள்ளோம். ஆனால், இந்திய அரசு குழப்பத்தில் உள்ளது'' என்றனர்.

அன்னா ஹசாரேவின் போராட்டத்தை ஆதரித்து, மெக்சிகன், ஹூஸ்டன், சிகாகோ, சன் பிரான்சிஸ்கோ, நியூயோர்க் உள்ளிட்ட நகரங்களிலும் இந்தியர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அன்னா ஹசாரே அணிந்துள்ள காந்தி தொப்பி, அமெரிக்க வாழ் இந்தியர்களிடையே புதுவித ஈர்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதல் தீவிரவாதிகளுக்கு ஈரான், சவுதி அரேபியா உதவி

இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு அல்குவைதாவுக்கு ஈரான், சவுதி அரேபியா உதவியுள்ளன என்ற தகவலை 'தி லெவன் த் டே' என்ற புத்தகம் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீது கடந்த 2001ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் திகதி அல்குவைதா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 3 ஆயிரம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் நடந்த 11வது நினைவு தினம் எதிர்வரும் செப்டம்பர் மாதம் அனுஷ்டிக்கப்பட இருகின்றது.

இந்த நிலையில் உலக வர்த்தக மையக் கட்டடத் தாக்குதல் நடத்திய அல்குவைதாத் தீவிரவாதிகளுக்கு சவுதி அரேபியா, ஈரான் உதவி உள்ளன என்ற தகவலை 'தி லெவன் த் டே' என்ற புத்தகம் வெளியிட்டுள்ளது.

இதனை அந்தோனி சம்மர்ஸ் மற்றும் ராபின் ஸ்வான் ஆகியோர் எழுதி உள்ளனர். இரட்டைக் கோபுரம் மீது நடந்த தாக்குதலுக்கும் அயல் நாடுகளுக்கும் உள்ள தொடர்பை அப்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் திட்டமிட்டே மறைத்தாரா என்ற கேள்வியையும் இந்தப் புத்தகம் எழுப்பியுள்ளது.

யு.எஸ் புலனாய்வுத் துறையினர் ஆய்வு செய்தபோது இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கும் ஈரானுக்கும் தொடர்பு இல்லை எனத் தெரிவித்தது. ஆனால் இந்தப் புத்தகம் மாறுபட்ட கருத்தை வெளியிட்டு அமெரிக்காவில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அல்குவைதா நடத்தும் தாக்குதல் ஈரான் துணை நிலை இராணுவமான ஹிஜிபுல்லா அமைப்புக்குத் தெரியும் என்ற நீதி மன்ற ஆவணத்தை இந்த எழுத்தாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# அமெரிக்க விமானம் வீழ்ந்து விமானி பலி

நியூயோர்க், ஒக. 23

அமெரிக்காவில் மிஸ் சோரி மாகாணத்திலுள்ள கன்சாஸ் நகரில் விமான சாகச நிகழ்ச்சி நடந்தது. அப்போது விமானங்கள் விண்ணில் பறந்தும், குட்டிக்கரணம் அடித்தும் மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தின.

அப்போது ஒரு விமானம் தலைகீழாக தரையில் விழுந்து நொறுங்கியது. எனவே, அது கரும்புகையுடன் தீப்பிடித்து எரிந்தது. இதனால் அங்கு கூடியிருந்த மக்கள் அதிர்ச்சியடைந்தனர்.

இந்த விபத்தில் விமானி பிரயான் ஜென்சன் என்பவர் உடல் கருகி பலியானார். கன்சாஸ் விமான சாகச நிகழ்ச்சியில் இதுபோன்ற விபத்து நடந்ததில்லை. தற்போதுதான் முதன் முறையாக நடந்துள்ளது.

# ஜேர்மனியின் ஹம்பர்க் வீதி விழாவில் வன்முறை

பெர்லின், ஒக.23

ஜேர்மனியின் ஹம்பர்க்கில் புகழ்பெற்ற வீதி விழா நடைபெற்றது. தெருவில் நடைபெறும் இந்த விழாவில் இளைஞர்கள் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். வெகு சிறப்பாக நடந்து கொண்டிருந்த இந்த கேளிக்கை நிகழ்ச்சியில் திடீரென வன்முறை வெடித்தது.

வன்முறையைக் கட்டுப் படுத்த பொலிஸார் கைது நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்த வன்முறையின் போது சிலர் படுகாயம் அடைந்தனர்.

ஒரு கும்பல் ஜேர்மன் வங்கியின் கிளை அலுவலகத்தை உடைக்க முயன்றபோதே வன்முறை ஏற்பட்டது. சம்பவ இடத்தில் 2 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக்காகக் குவிக்கப்பட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனியர் இன்ர லீக் உதைபந்தாட்டம்;
# யாழ்.உதைபந்தாட்ட லீக் அணி சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக.23

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் 2011 ஆம் ஆண்டுக்கான சீனியர் இன்ர லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஆட்டம் ஒன்றில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணி வெற்றி பெற்றுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ்.உதை பந்தாட்ட லீக் அணியை எதிர்த்து கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அணி மோதிக்கொண்டது.

இரு அணியினரும் தத்தமது அணியே வெற்றி பெற வேண்டும் என்ற உற்வேகத்துடன் விளையாடினர்.

ஆட்டம் ஆரம்பமாகி 4 நிமிடத்தில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணி வீரன் கஜகோபன் தமது அணி சார்பில் முதலாவது கோலை அடித்தார்.

16 நிமிடத்தில் யாழ். உதை பந்தாட்ட லீக் அணிக்கும் ஒரு தண்டனை உதை கிடைக்க அதன்மூலம் ஞானறூபன் தனது அணிக்கான 2 கோலினைப் பெற்றார்.

இடை வேளைக்காக நிறுத்தப் பட்ட ஆட்டம் இரண்டாம் பாதி ஆட்டத்துக்காக ஆரம்பித்த போது கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அணி தமது ஆட்டத்தை வேகப் படுத்தி கோல் போடும் பல முயற்சிகளை மேற்கொண்டது.

அதனை யாழ்.உதைபந்தாட்ட லீக் அணியினரின் எதிர்ப்பு நடவடிக்கையால் கோல்கள் பெறும் முயற்சிகள் தடுக்கப்பட்டன.

61 ஆவது நிமிடத்தில் யாழ்.லீக் அணிக்கு கோல் பரப்புக்கு அண்மையில் நேர் உதை ஒன்று கிடைத்தது.

அதனை யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் தர்மகுலநாதன் நேரடியாகவே பந்தினை உதைத்தார். அது நேரடியாகவே கோல் பரப்பினுள் புகுந்தது

65 நிமிடத்தில் கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அணி தமது அணிக்கான முதலாவது கோலை அடித்தது.

இதனால் ஆட்டம் விறுவிறுப்பை ஏற்படுத்தியது.65 ஆவது நிமிடத்தில் யாழ். உதை பந்தாட்ட லீக் அணி வீரன் பிரகாஸ் பதிலுக்குக் கோல் ஒன்றைப் போட்டார்.

ஆட்டம் முடிவில் யாழ். உதை பந்தாட்ட லீக் அணி 4:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# 17 வயதுப் பிரிவு கிரிக்கெட்
# மானிப்பாய் இந்து வென்றது

இலங்கைப் பாசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலை அணிகளிடையே 17 வயதுப் பிரிவில் நடை பெற்ற 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டி ஆட்டமென்றில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 85 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் கர வெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பொடுத் தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 35.02 ஓவர்களில் 209 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டன. டில்சான் 57 ஓட்டங்களையும் சபேசன் 55 ஓட்டங்களையும் நிக்சன் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களையும் செந்தூரன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ரஜிவ் 8.2 ஓவர்களில் 40 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் ஆதவன் 10 ஓவர்களில் 35 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர்.

209 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி விக்னேஸ்வராகக் கல்லூரி 30.5 ஓவர்களில் 124 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஆதவன் 20 ஓட்டங்களையும் அனோஜன் 16 ஓட்டங்களையும் ஜெயதர்சன் 19 ஓட்டங்களையும் விதுசன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த டில்சான் 9.5 ஓவர்களில் 37 ஓட்டங்களுக்கு 7 விக் கெட்டுக்களையும் நிக்சன் 7 ஓவர்களில் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சபேசன் 3 ஓவர்களில் 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (ம)



கொய்யாத்தோட்டம் கலைச்சுடர் சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்ற பாஷையூர் கோல்டன் ஸ்ரார் அணியினர். (ம-23)

# யாழ். மாவட்ட ஹொக்கி
# இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஒக. 23

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை யாழ். மாவட்ட ரீதியிலாக நடத்தும் ஹொக்கிச் சுற்றுப்போட்டித் தொடர் இன்று மாலை 4மணியளவில் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இதில் முதலாவதாக இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஒல்கோல்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

இன்றைய ஆரம்பநாள் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக உடற்கல்வி அலகின் போதனாசிரியர் எம்.இளம்பிறையன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

# றேஞ்சஸ் அணி சம்பியன்

தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக்கழகம் தீவக ரீதியில் நடத்திய உதைபந்தாட்ட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை றேஞ்சஸ் அணி சம்பியனானது. தம்பாட்டி காந்திஜீ விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மெலிஞ்சி முனை இருதயராஜா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊர்காவற்றுறை றேஞ்கஸ் விளையாட்டுக் கழகம் மோதி யது. ஊர்காவற்றுறை றேஞ்கஸ் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# அரியாலையில் கிரிக்கெட்;
# அருணோதயாவுக்கு கிண்ணம்

கொழும்புத்துறை, ஒக.23

அரியாலை சனசமூக நிலையத்தின் 62 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இடம்பெற்ற யாழ்.மாவட்ட மட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் அரியாலை அருணோதயா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அரியாலை அருணோதயாவுக்கும் ஆனைக்கோட்டை லெவன்ஸ்ரார் அணிக்கும் இடையில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் 29 ஓட்டங்களால் அரியாலை அருணோதயா வி.கழகம் வெற்றி பெற்றது.

அருணோதயா விளையாட்டுக் கழக அணி 3 இலக்குகளை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லெவன்ஸ்ரார் அணி அனைத்து இலக்குகளையும் இழந்து24 ஓட்டங்களைப் பெற்றது.

இதேவேளை அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரபந்தாட்ட இறுதியாட்டத்தில் அரியாலை சனசமூக நிலைய அணி 3:1 என்ற கணக்கில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணியைத் தோற்கடித்தது. (ம-135)

# மரதன், சைக்கிளோட்டத்தில் வென்றோர்

அரியாலை சனசமூக நிலையத்தின் 62 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 50 மைல் ஆண்கள் சைக்கிளோட்டம், 10 மைல் பெண்கள் ஸ்சக்கிள் ஓட்டம் 10 மைல் ஆண்கள் மரதன் என்பன நடைபெற்றன.

மாவட்ட மட்டத்தில் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. 50 மைல் ஆண்கள் சைக்கிள் ஒட்டத்தில் து.றஜீம் (பண்டத்தரிப்பு) முதலாமிடத்தையும், க.குயின்ரன்(கொக்குவில்), கஜபாகுறெயிமென்ற் (512- அரியாலை) ஆகிய இருவர் இரண்டாமிடத்தையும் பா.பிரணவதாஸ் (நவாலி)மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

பெண்களுக்கான 10 மைல் சைக்கிள் ஒட்டப் போட்டியில் ரா.பதுமநிலா (மல்லாகம்) முதலிடத்தையும் சி.பத்மசந்தியா (அளவெட்டி) இரண்டாமிடத்தையும் இ.தனுஷா (பண்டத்தரிப்பு) மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

ஆண்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டப் போட்டியில் கொழும்புத்துறை ஜே.நிரோஷன் முதலாமிட்த்தையும், அரியாலை அ.ஜெகதீஸ்வரன் இரண்டாமிடத்தையும், பண்டத்தரிப்பு இ.தனுசன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர். (ம-135)

## குமாரசாமி ஞாபகார்த்த கிண்ண கிரிக்கெட்:
# ஜொனியன்ஸ் வி.க. 2 ஓட்டங்களால் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக.23

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் குமாரசாமி ஞாபகார்த்தமான வெற்றிக் கிண்ணத்துக்கான 20-20 கிரிக்கெட் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 2 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி ஆறு இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது.

காண்டீபன் 64, அன்புஜன் 18, கஜவதனன் 20, மயூரன் 15, ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி சார்பாக சிலோசன் 3 ஓவர்களில் 8 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், உமாநாந், 3ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

130 ஓட்டங்களைக் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.ஸி. ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி 6 இலக்குகளை இழந்து 127 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

பங்குயன் 45, உத்தமகுமரன் 18, உமாநாத் 13, சகிகரன் 12 ஓட்டங்களைத் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக சார்பாக டக்சன் ஒரு ஓவர் பந்து வீசி ஏழு ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் காண்டீபன் 2 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும், கரிதரன் 3 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் ரதீஸ்குமார் 3 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (ம-23)

# ஜொலிஸ்ரார் வி.க. 4 விக்கெட்டுக்களால் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக. 23

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் குமாரசாமி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 20-20கிரிக்கெட் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் மதியம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் ஏழு இலக்குகளை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது.

நிதர்ஷன் 32, வினோத் 22, சஞ்ஜீவன் 22, ஜெகறூபன் 14, நிக்சன், கரிதரன், ஆகியோர் முறையே தலா 6 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் சார்பில் பகீரதன் 3 ஓவர்கள் பந்துவீசி, 19 ஓட்டங்களுக்கு 2 இலக்கையும் ஜனார்த்தனன் 3 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் மணிவண்ணன் 2 ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் சஞ்ஜீவன் 3 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

117 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப்பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 6 இலக்கை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது.

சஜீவன் 50, நிரஞ்சன் 20, மணிவண்ணன் 18, அருண்குமார் 8, ஜனார்த்தனன் 5, ராஜஜீந்தன் 4 ஓட்டங்களை தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம் அணி சார்பாக வில்சன் 3 ஓவர்கள் பந்துவீசி, 20 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் நிதர்சன் 2.1 ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் ஜெகறூபன் 3 ஓவர்கள் பந்துவீசி, 18 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் வீழ்த்தினர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை பெய்தும் தப்பவில்லை இந்தியா இறுதி டெஸ்டிலும் இன்னிங்ஸ் தோல்வி




ஓவல், ஓக.23

இங்கிலாந்து அணி வீரர் சுவானின் சுழலை எதிர்கொள்ள முடியாத இந்திய அணி இங்கிலாந்து அணியிடம் சரணடைந்தது. ஒரு இன்னிங்ஸ் மற்றும் 8 ஓட்டங்களால் இந்திய அணி நான்காவது டெஸ்டில் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரை இந்திய அணி 4 - 0 என்ற கணக்கில் இழந்தது. இதன் மூலம் இந்திய அணியிடமிருந்த முதலிடத்தை இங்கிலாந்து அணி பறித்துக் கொண்டதுடன் இந்திய அணியை தரவரிசைப் பட்டியலில் மூன்றாம் இடத்துக்கு பின்தள்ளி விட்டது. அதனைவிட இந்திய அணி 43 ஆண்டுகளின் பின்னர் மிக மோசமாக முற்றுமுழுதாக தொடர் ஒன்றை எதிரணியிடம் இழந்துள்ளது.

நடைபெற்று முடிந்த 3 டெஸ்ட் ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணி அபார வெற்றி பெற்று தொடரை வெற்றி கொண்ட நிலையிலேயே நான்காவது டெஸ்ட் ஆரம்பமானது. நாணயச் சுற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி இயன் பெல் மற்றும் கெவின் பீற்றர்ஸன் ஆகியோரது அபார ஆட்டத்தின் மூலம் மிகச் சிறப்பான ஓட்ட எண்ணிக்கையை பெற்றுக்கொண்டது. இங்கிலாந்து சார்பாக பெல் 235 ஓட்டங்களையும் பீற்றர்ஸன் 175 ஓட்டங்களினையும் பெற்றுக் கொடுத்தனர். இறுதியில் இங்கிலாந்து 591 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பாக ஸ்ரீசாந் 3, ரெய்னா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றிக் கொண்டனர்.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணி ஆரம்பத்திலிருந்தே தனது விக்கெட்டுக்களை சீரான இடைவெளியில் இழந்தது. சேவாக் 8, லக்ஸ்மன் 2, டெண்டுல்கர் 23, ரெய்னா ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தனர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய டிராவிட் மட்டும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். டோனி 17 ஓட்டங்களுடன் அன்டர்ஸனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து களமிறங்கிய மிஷ்ரா சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். மறுமுனையில் துடுப்பெடுத்தாடிய டிராவிட் தனது 35 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். மிஷ்ரா 77 பந்துகளில் 6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். கம்பீர் 10 ஓட்டங் களுடனும் வெளியேற்றப்பட்டார். இறுதியில் இந்திய அணி 300 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து பலோன் நிலைக்குத் தள்ளப்பட்டது. டிராவிட் ஆட்டமிழக்காமல் 146 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் இங்கிலாந்து சார்பில் சுவான்,பிறஸ்னன் தலா 3 விக்கெட்டுக்களையும், புரோட், அன்டர்ஸன் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

மீண்டும் தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடா தொடங்கியது. முதலாவது இன்னிங்ஸில் இந்திய சார்பில் ஆரம்ப பந்து வீச்சு முதல் இறுதிப் பந்து வீச்சு வரை களத்தில் நின்ற டிராவிட் மீண்டும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கினார். இரண்டாவது இன்னிங்ஸில் டிராவிட் 13 ஓட்டங்களுடன் சுவானின் பந்து வீச்சில் வெளியேறினார். தொடர்ந்து சேவாக் 33 ஓட்டங்களுடன் சுவானின் பந்து வீச்சில் போல்டானார். இதன் பின்னர் ஜோடி சேர்ந்த லக்ஸ்மன் - சச்சின் இருவரும் அணியின் மீட்சிக்காகப் போராடினர். 3 ஆவது விக்கெட்டுக்காக 54 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் லக்ஸ்மன் 24 ஓட்டங்களுடன் அன்டர்ஸன் பந்தில் போல்டானார்.

நான்காம் நாள் ஆட்டநேர முடிவின்போது 3 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களை இந்திய அணி பெற்றிருந்தது. சச்சின் 35 ஓட்டங்களுடனும், மிஷ்ரா 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். நேற்றைய இறுதி நாள் ஆட்டத்தை தொடர்ந்த இந்திய அணிக்கு நைற் வோர்ச்மனாக களமிறங்கிய மிஷ்ரா நம்பிக்கையளிக்கும் விதத்தில் துடுப்பெடுத் தாடினார். இறுதி டெஸ்ட் ஆட்டத்தை சமநிலையடையச் செய்யும் முயற்சியில் சச்சின் - மிஷ்ரா இருவரும் ஈடுபட்டனர். சச்சின் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். மதியபோசன இடைவேளைக்கு முன்பாக மிஷ்ரா தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இவர்களது சிறப் பான ஆட்டத்தின் மூலம் இந்திய அணி இந்த ஆட்டத்தில் இன்னிங்ஸ் தோல்வியை தவிர்ப்பதுடன் ஆட்டம் சமநிலையில் முடிவடையும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

மதியபோசன இடைவேளை முடிந்து மீண்டும் ஆட்டம் ஆரம்பமான சிறிது நேரத்திலேயே இந்தியாவின் கோட்டையை சுவான் தகர்த்தெறிந்தார். 4 ஆவது விக்கெட்டுக்காக 144 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் மிஷ்ராவின் விக்கெட்டை சுவான் தகர்த்தெறிந்தார். 84 ஓட்டங்களுடன் மிஷ்ரா ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து சிறப்பாக சச்சின் துடுப்பெடுத்தாடினார். சச்சின் தனது 100 ஆவது சதத்துக்காக கிடைத்த இறுதி வாய்ப்பை பயன்படுத்த தவறி ரசிகர்களை மீண்டும் ஏமாற்றினார். 91 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிறஸ்னன் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 261 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி மிஷ்ரா, சச்சின் அடுத்தடுத்து வெளியேற 262 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து இன்னிங்ஸ் தோல்வியை எதிர்நோக்கியது. வழமை போன்று இந்தியாவின் பின்வரிசை வீரர்கள் ஒவ்வொருவராக ஒற்றை இலக்கங்களுடன் நடையைக் கட்ட இந்திய அணி 283 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ரெய்னா இரண்டாவது இன்னிங்ஸிலும் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். டோனி, கம்பீர் தலா 3 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சுவான் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக இங்கிலாந்தின் இயன் பெல் தெரிவானார். தொடர் நாயகர் களாக இங் கிலாந்தின் புரோட், இந்தியாவின் டிராவிட் ஆகியோர் தெரிவானார்கள். (15)



# புத்தளத்தில் இராணுவம் குவிப்பு

கொழும்பு, ஓக. 23

புத்தளம் நகரிலும் அதை அண்டியுள்ள மணல் குன்று பிரதேசத்திலும் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டமை மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐவர் காயமுற்றமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அங்கு விரைந்துள்ளனர்.

- பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி நேற்று மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

புத்தளத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும், அங்கு நிலைமைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன என்றும் அவர் கூறினார்.

மர்ம மனிதர்கள் சர்ச்சையால் புத்தளம் மணல் குன்றுப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு பொலிஸாருக்கும், பொதுமக்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது.

இந்த மோதல் சம்பவத்தில் 23 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டார். அத்துடன், ஐந்து பொதுமக்கள் காயமடைந்தனர் என புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மூவர் புத்தளம் வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும், சிகிச்சை பெற்று வரும் அனைவரும் ஆபத்தான நிலைமையைக் கடந்துள்ளனர் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-சி)

# களவாக...

(முதலாம் பக்கம் பார்க்க)

தெரியவருவதாவது: 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையிலிருந்து இவர்கள் இந்தியாவுக்கு அகதிகளாச் சென்றுள்ளனர். அங்கு தங்கியிருந்த இவர்கள் யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து மீண்டும் இலங்கைவர முயற்சி செய்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து படகு ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபா பணம் (இந்தியா பணம்) செலுத்தி புறப்பட்ட இவர்கள், மன்னாரில் தம்மைக் கரைசேர்க்குமாறு கூறியுள்ளனர் இருப்பினும் குறித்த படகோட்டி கச்சதீவில் இவர்களை இறக்கிவிட்டுள்ளனர்.

கச்சதீவில் நின்ற இவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்து ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

பொலிஸாரினால் இவர்கள் வைத்திய சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்ட பின்னர் ஊர்காவற்றுறை நீதிவான் ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

நீதிவான் இவர்களை எதிர்வரும் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் இவர்களின் வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்களை சட்டமா அதிபரின் நடவடிக்கைளுக்காக அவருக்கு அனுப்பிவைக்குமாறும் நீதிவான் பணித்துள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சியிலுள்ள ஜஸ்ரினின் தாயார் வரவழைக்கப்பட்டு, அவரிடம் இந்தக் குடும்பத்தினரின் ஒரு தொகைப் பணம் மற்றும் நகைகள் என்பன கையளிக்கப்பட்டன.

(ஓ-ஐ-15)

# வடமராட்சியிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதில் ஏறிப் பாய்ந்தனர் அந்த ஆசாமிகள். பின்னர் அங்கிருந்து தப்பியோடினர். மக்களும் விடவில்லை அவர்களைக் கலைத்தவாறு பின் தொடர்ந்து ஓடினர். இதனால் பெரும் பதற்றம் நிலவியது.

தொடர்ந்து அனைத்து அயல்கிராமங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் பறந்தன. அயல்பகுதிகளான தேவரையாளி, சமரபாகு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களும் நூற்றுக் கணக்கில் வீதிகளுக்கு வந்துவிட்டனர்.

எங்கும் பரபரப்பு பதற்றம்!

இதேவேளை, தப்பியோடிய ஆசாமிகளைப் பின்தொடர்ந்து ஓடிய மக்கள் ஆலங்கட்டை மயானப்பகுதியை நெருங்கினர். அங்கு மயானத்தில் 'ஹைஏஸ்' வாகனம் நின்றது.

அதில் சீருடையில் இராணுவத்தினர் இருந்தனர் என்றும் அவர்களைவிட வேறு சிலர் சிவில் உடையில் இருந்தனர் என்றும் அங்கு கூடிய மக்கள் தெரிவித்தனர். ஆனால் மயானப்பக்கமாக ஓடிய ஆசாமிகள் குறித்து பின்னர் தகவல் இல்லை. மக்கள் திகைத்தனர். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் அவர்களுக்கு சந்தேகம் வேறுமாதிரி.

அந்த வாகனத்தைச் சுற்றி பெரும் எண்ணிக்கையான மக்கள் கூடினர். எனினும் அசம்பாவிதம் ஏற்படவில்லை. வான் அங்கிருந்து அகன்று சென்றுவிட்டது.

கூடிய மக்கள் அகலவில்லை. அவர்கள் மத்தியில் கிலேசம், அதிர்ச்சி. இளைஞர்கள் தொடர்ந்து தேடுதல் வேட்டையில் இறங்கினர்.

இந்தநிலையில்-

தேவரையாளி இந்துக்கல்லூரி வீதி, மயான வீதிப் பகுதிகளில் மக்கள் கூடிநின்ற இடத்துக்கு டிராக்டர், கன்ரர் வாகனங்களில் வந்து இறங்கினர் படையினர். பொலிஸாரும் வந்தனர்.

தொடர்ந்து மக்கள் வாக்குவாதத்தில் இறங்கவே நிலைமை மோசமடையத் தொடங்கியது. அங்கு கொந்தளிப்பு நிலை தோன்றவே படையினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். விபரீதம் ஏதும் நிகழவில்லை. படையினரும் அங்கு தொடர்ந்து நின்றனர், மக்களும் கூடி நின்றனர். நள்ளிரவு 11.30 மணிவரையில் நிலைமை பதற்றமாக இருந்தது. பின்னர் மக்கள் கலைந்து செல்லத் தொடங்கினர்.

வித்தியாசமான எவரும் கிராமங்களுக்கு, வீடுகளுக்கு வந்தால் அவர்களைப் பிடித்து பொலிஸில் ஒப்படைக்குமாறு பொலிஸார் தெரிவித்துவிட்டுச் சென்றனர்.

மக்கள் வீடுகளில் கண்விழித்து இருந்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது வங்கி உத்தியோகத்தர்
கனகசபை ஸ்ரீபதி அவர்களின்
பாசமிகு சகோதரர்

**கனகசபை ஜெயபதி**

(கோண்டாவில் மேற்கு, கலட்டி ஒழுங்கை)

அகால மரணமடைந்த செய்தி அறிந்து மிகுந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர்கள்,
இலங்கை வங்கி, சுன்னாகம்.

## கண்ணீர்க் காணிக்கை



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 13C (2011 A/L)
கணிதப் பிரிவில் கல்வி பயிலும் மாணவன்

**செல்வன் செல்வராஜா ஜனகன்**

அவர்களின் திடீர் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2011 கணிதப்பிரிவு சக மாணவர்களும், ஆசிரியர்களும்

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
**மகேஸ்வரி தர்மலிங்கம்**
(முன்னாள் ஆசிரியை, நுவரெலியா யதன்சைட் தமிழ்வித்தியாலயம்)

மலர்வு
04.09.1931

உதிர்வு
04.08.2010

திதி நவமி (23.08.2011)

ஆசை அம்மாவே அன்பின் பிறப்பிடமே!
பாசத்தோடு அன்பையும் பொழிந்து வளர்த்தீர்
பாதிவழி வந்து எம்மையும் வழிநடத்தி - நீர்
பாதியிலே நாம் பரிதவிக்க சென்று விட்டீர்
மீதி வழி தெரியாமல் அலைகின்றோம் - அம்மா
ஆசையோடு அரவணைத்து நீர் சென்று ஆண்டுகள்
ஒன்றாகிவிட்டதே - அதனால்
எங்கு நீர் சென்று இருந்தாலும் நல்வழிகாட்டி
ஆசீர் வதிக்க வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!....

அத்தாய்,
அல்வாய்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**இராசதுரை எட்வேட் யோகநாதன்**

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)



உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இராசதுரை எட்வேட் யோகநாதன் நேற்று (22.08.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - மாகிறேட் தம்பதியரின் அன்பு மகனும், செல்வராணியின் (கிளி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகராசா - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், சுரேஸ்குமார், சுபாஷினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், டேனிஸின் அன்பு மாமனும், காலஞ்சென்ற கேஷுஜன் மற்றும் கிந்துஷனின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற Dr. ஜோன் மற்றும் செல்வராணி, அஞ்சலா (London), புவிராஜசிங்கம் (France), Dr. புஸ்பநாதன் (London) ஆகியோரின் அன்புச் சகோதரனும், விமலாதேவி, சிவஞான பூபதி, பொன்ராசா (Canada), சிவராசா(London), ஆனந்தராசா, இந்திராணி, காலஞ்சென்ற மரியநாயகம் மற்றும் இராஜேஸ்வரி, ஜெயசோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (23.08.2011) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு உயரப்புலம், ஆனைக் கோட்டையில் அவரின் இல்லத்தில் நடைபெற்று அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அடைக்கல அன்னை ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்
ஆனைக்கோட்டை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

## ஆறுகால் ஆட்டுக்குட்டி பிறந்துள்ளது

தென்மராட்சி, ஓக.23

கொடிகாமம் கச்சாய் வீதியில் ஆறுகால்களுடன் ஆட்டுக்குட்டி பிறந்துள்ளது.

கொடிகாமம் பொலிஸ்நிலையத் துக்குஅருகில்உள்ள இராசலிங்கம் என்பவரது வீட்டில் உள்ள ஆடே ஆறு கால் களுடனான குட்டியினை ஈன்றுள்ளது.

நேற்று முன்தினம் ஈன்ற இக் குட்டியை பெருமளவுமக்கள்பார்வையிட்டு வருகின்றனர். (எ-207)

## மணமகள் தேவை

இந்து உயர் கௌரவ குடும்பம் 1978 பரணி நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற கிரகபாவம் 61 ஆசிரியராகத் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: 0789134723, 0212240350

## தவறவிடப்பட்ட ஆவணங்கள்

நா.ஜெகன்மோகனதாஸ் ஆகிய எனது கிளினிக் காட்டும், எக்ஸ்ரேக்களும் (x-ray) அடங்கிய வெள்ளைநிற பையொன்று வெலிங்டன் சந்திக்கும் முடமாவடிச் சந்திக்கும் இடையில் பலாலி வீதியூடாக மோட்டார் சைக்கிளில் வரும்போது தவறவிடப்பட்டு விட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 077 9774689/ 021 2230218 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த Belgium நாட்டு குடியுரிமையுடைய, 1980 ஆம் ஆண்டு பிறந்த, அச்சுவினி நட்சத்திரம் கிரகபாவம் குறைவுடைய மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. மணமகன் யாழ். வந்துள்ளார்.

தொடர்பு : 0777 493841

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் மற்றும் சேவிஸ் ஸ்ரேசனில் வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை. முன் அனுபவமுள்ள மெக்கானிக்/சேவிஸ் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்க.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல:
0774909427

## பணிநிலை வேண்டுகை

யாழ். மின்னல் ஊடகம் சார்ந்த நிறுவனத்துக்கு......

துடிப்பும், ஆர்வமும் சமூக அக்கறையுமுள்ள இளைஞர், யுவதிகள் இணைந்து பணியாற்றுவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

தங்களது சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

காலம்: 24.08.2011 (புதன்கிழமை)
நேரம்: காலை 9 மணிமுதல் 12 மணி வரை
இடம்: திருமறைக் கலாமன்ற மணி மண்டபம்.

இல: 238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
077 4897357, 077 6845508.

## மரண அறிவித்தல்

திருமதி **யோ.செ.விக்ரர் கிறேஸ்மணி**



உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்ரர் கிறேஸ்மணி நேற்று (22.08.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விக்ரரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் சாந்தி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2011) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## காணவில்லை



உடுவில் வடக்கு, சுன்னாகம் என்னும் முகவரியைச் சேர்ந்த

**குமாரசாமி சகுந்தலாதேவி**

வயது 63 கடந்த 18.08.2011 வியாழக்கிழமை வீட்டிலிருந்து வெளியில் சென்ற இவர் இன்னும் வீடு திரும்பவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு:
மோகனதாஸன் ரஞ்சினி (சகோதரி)
021 2240790, 0750417091

## மரண அறிவித்தல்கள்

செல்வி **மகேஸ்வரி பழனிப்பிள்ளை**

(முன்னாள் யா/சின்னத்தம்பி வித்தியாலய ஆசிரியை)



அல்வாய் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும். கொண்ட செல்வி மகேஸ்வரி பழனிப்பிள்ளை நேற்று (22.08.2011) திங்கட்கிழமை சிவபத மடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், கணேசதாஸ், தில்லைராணி (முன்னாள் ஆசிரியை), கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் கிழக்கு கருகம்பன் மயானத்துக்கு மு.ப. 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலட்டி,
அல்வாய் கிழக்கு.

தகவல்:
ப.ஸ்ரீஆனந்தராசா
(மைத்துனர்)

## திருமதி மார்க்கண்டு பரிமளம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு பரிமளம் (21.08.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் மற்றும் காலஞ்சென்றவர்களான கணபதி - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் மார்க்கண்டு அவர்களின் அன்புத் துணைவியும் காலஞ்சென்ற சிவலிங்கம் (முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம்), புவனேஸ்வரி, நாகேஸ்வரி, விக்னேஸ்வரி, சிவசக்தி, Dr.திருக்குமார் (மகப்பேற்று வைத்தியநிபுணர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை), புனிதவதி ஆகியோரின் அன்புத் தாயும் மற்றும் மனோகரராஜா, சிவநேசன், தர்மரட்ணம், சிவராசா, கமலகுமார், இராஜநாயகி (ஆசிரியை, உரும்பிராய் சந்திரோதய வித்தியா சாலை), Dr. விஜியகுமாரி (சிறுபிள்ளை வைத்திய நிபுணர்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2011) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4.00 மணியளவில் இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டிதர் வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (7210)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரவணபவன் எம்.பிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் தாங்கள் படையினரால் கண்மூடித்தனமாகத் தாக்கப்படுகின்றனர் என்று எனக்கு முறைப்பாடு கிடைத்தது. அதனை அடுத்து நள்ளிரவு 12 மணியளவில் நான் அங்கு செல்ல முயன்றேன். ஆனால் யாழ். பொலிஸார் அனுமதி மறுத்து விட்டனர்'' என்றார் சரவணபவன்.

நாவாந்துறையில் பதற்றம் நிலவுவதாகவும் அங்கு வாகனங்கள் அடித்து நொருக்கப்படுவதாகவும் அதனால் போதிய பாதுகாப்பை தம்மால் வழங்க முடியாது என்றும் பொலிஸார் கைவிரித்துவிட்டனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கூறினார்.

''பின்னர் பொலிஸ் உயரதிகாரிகளைச் சந்திப்பதற்காக யாழ். பொலிஸ் நிலையம் சென்றேன். ஆனால் வெளியே இருந்த பொலிஸார் நாடாளுமன்ற உறுப்பினரான என்னை பொலிஸ் நிலையத்துக்குள் செல்வதற்குக்கூட அனுமதிக்கவில்லை'' என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை குறித்து, யாழ். குடாநாட்டின் இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவைத் தொடர்பு கொள்ள முயன்ற போதும் அது முடியவில்லை என்று தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், அவருக்குப் பதிலாகப் பேசிய அதிகாரி ''நீங்கள் கூறிவது போல நாவாந்துறையில் பெரிய பிரச்சினை ஏதுமில்லை, நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது'' என்று கூறினார் எனவும் தெரிவித்தார்.

பொதுமக்களிடம் இருந்து தொடர்ச்சியாகக் கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து அதிகாலை 2 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் நாவாந்துறை மக்களைப் பார்வையிடுவதற்காக அங்கு மீண்டும் சென்றார். ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனும் அந்த வேளையில் அங்கு சென்றிருந்தார். எனினும் அதிகாலை 2.30 மணிவரையில் அவர்கள் இருவரையும் நாவாந்துறை காக்கை தீவுச் சந்தியைத் தாண்டிச் செல்லப் படையினர் அனுமதிக்கவில்லை. உயர் அதிகாரிகளிடம் இருந்து அனுமதி கிடைத்தால் மட்டுமே மேற்கொண்டு பயணிக்க அனுமதிக்க முடியும் என்று கூறி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் படையினர் தடுத்து நிறுத்தி வைத்திருந்தனர்.

## நாட்டின் பாது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கப்பட்டுள்ள கிறீஸ் மனிதர்கள் பொலிஸ் நிலையங்களுக்குள்ளும் இராணுவ முகாம்களுக்குள்ளும் ஓடிச்சென்று தப்பினர்.

ஆனால் கிறீஸ் பூதங்களாக உலாவுவோர் மனநோயாளர்கள் என்கிறது அரசு. அப்படியானால் இராணுவத்துக்குள் மனநோயாளர்கள் இருக்கின்றனரா? இந்த மனநோயாளர்களிடமா நாட்டின் பாதுகாப்பை ஒப்படைத்துள்ளீர்கள்? இது விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தாதா?

மட்டக்களப்பு மாவட்டத்துக்குப் பொறுப்பாக வந்துள்ள உயர் பொலிஸ் அதிகாரி மர்மமனிதர்களை மனிதாபிமானத்துடன் நடத்துங்கள் என்கிறார். இந்த மர்ம மனிதர்கள் அவருடைய சமூகத்தில் வாழும் சகோதரிகளுக்கு துன்பம் விளைவித்தால் இப்படிக் கூறுவாரா?

இதைவிட ஒரு வெட்கக்கேடான செயல் என்ன என்றால் ஜனாதிபதிக்குத் தேவைப்பட்டால் இரண்டு லட்சம் பெண்கள் மார்பிலிருந்து இரத்தம் கொடுக்கத் தயாராக இருக்கின்றனர் என ஒரு மூத்த அரசியல் தலைவர் கூறுகின்றார். இவர்களை அந்த சமூகம் மன்னிக்குமா?

வடக்கையும் கிழக்கையும் பிரித்தாலும் எம்மக்கள் ஒன்றாகவே ஒத்த கருத்துடனேயே வாழ்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர் - அந்த நம்பிக்கை வீண் போகாது மக்கள் எம் பக்கமே இருக்கின்றனர் - என்றார் மாவை சேனாதிராசா. (உ-02)

## பிரபாவின் வீடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''படையினரின் இந்த அத்துமீறல் குறித்து வடபகுதிக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் முறையிட்டேன். அந்த வீடு வேலுப்பிள்ளைக்குச் சொந்தமானது; எனவே அதனை இடிப்பது சட்ட விரோதமானது என்று தெரிவித்தேன். உறவினர்கள் யாராவது முறைப்பாடு பதிவு செய்தால் மட்டுமே தாம் நடவடிக்கை எடுக்க முடியும் என்று அவர் கூறினார்'' எனத் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவான்.

"முல்லைத்தீவில் பிரபாகரன் பயன்படுத்தினார் என்று கூறப்படும் பங்கரை சிங்களச் சுற்றுலாப் பயணிகளுக்கான மையமாக மாற்றி உள்ள இராணுவம் இங்கு அவர் சிறு வயதில் வாழ்ந்த வீட்டை மட்டும் அடியோடு அழிப்பது எந்த வகையில் நியாயம்?" என்று கேள்வி எழுப்பினார் எம்.கே.சிவாஜிலிங்கம். (உ-10)

## வீடுவீடாகப் புகுந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிக்குள் செல்வதற்கோ அங்கிருந்து வெளியேறுவதற்கோ எவரையும் அனுமதிக்கிறார்கள் இல்லை. மண்டை உடைந்து போய் இருக்கும் வயதானவர் ஒருவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல முடியாது இருக்கிறது என்று சொல்கிறார்கள்" என அந்தப் பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தவ மதகுரு ஒருவர் தெரிவித்தார். (உ)

## படையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை அடுத்து அந்தப் பகுதிக்கு மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் வந்ததும் பொதுமக் களைக் கொட்டன்களால் தாக்க ஆரம் பித்தனர். சிதறி ஓடிய மக்களை அவர் கள் விரட்டி விரட்டித் தாக்கினர்.

''யாரோ சிலர் வீட்டுக்குள் நுழைய முயன்றார்கள் என்றும் பிடிக்க முயன்ற போது தப்பிச் சென்றுவிட்டார்கள் என்றும் கேள்விப்பட்டு இங்கே வந்தோம். இராணுவத்தினரும் பொலிஸாரும் வந் தனர். பின்னர் அவர்கள் எங்களைத் திடீரெனத்தாக்க ஆரம்பித்தனர்'' என்று தப் பியோடிக் கொண்டிருந்த போது ஒருவர் தெரிவித்தார்.

வீதியில் நின்றவர்களையும் பெண்க ளையும் பொலிஸார் கண்மூடித்தனமாக தடிகளாலும் கொட்டன்களாலும் தாக் கினர். பொலிஸாரிடம் இருந்து தப்பி யோட முற்பட்ட பெண் ஒருவர் மதிலுடன் மோதுண்டதில் காயமடைந்தார். குழப்பத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பலரைப் பொலி ஸார் பிடித்து வாகனத்தில் ஏற்றியதைக் காணமுடிந்தது.

இராணுவத்தினர் பெண்களைத்தகாத வார்த்தைகளில் ஏசிய படி அவர் களைத் தாக்கினர் என்று பெண்கள் தெரிவித்தனர்.

''எங்களைத் துரத்தி வந்த பொலிஸார் ஒவ்வொருவராகப் பிடித்து வாக னத்தில் ஏற்றினர். என்னையும் பிடித்து ஏற்றப் பார்த்தனர். அவர்களின் கைகளில் இருந்து பறித்துக் கொண்டு இருட்டுக்குள் ஓடிமறைந்து ஒருவாறு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்'' என்றார் ஒருவர்.

ஆனால், ''நாவாந்துறைப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. வாகனங்கள் அடித்து நொருக் கப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள்தெரியவில்லை'' என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். எவராவது கைது செய்யப் பட் டனரா என்ற கேள்விக்குப் பதில ளிக்க அவர்கள் மறுத்து விட்டனர்.

''நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது. காலையிலேயே விவரங்கள் தெரியும்'' என்று பலாலி இராணுவத் தலை மையகம் தெரி வித்தது. (உ-323)


### சேர்த்து வாசிக்கவும்

நேற்றைய உதயனில் 26 ஆம் பக்கத்தில் பிரசுரமான மாணிக்கம் தனபாலசிங்கம் என்பவருடைய மரண அறிவித்தலில் இவருடைய அண்ணன் அமரர் மா.கந்தசாமி என்பவருடைய பெயர் தவறவிடப் பட்டுள்ளது. இதனை சேர்த்து வாசிக்கவும்.

பன்னையம்பதி
பருத்தித்துறை. குடும்பத்தினர்.

### திருமண வாழ்வின் பொன்விழா



இன்று (23.08.2011) தமது 50 ஆவது திருமண ஆண்டு விழாவை நினைவு கூரும்

**திரு.திருமதி கிறிஸ்தோத்திரம் மேரிதிரேசா இராசமலர்**

தம்பதியினரை இன்னும் பல ஆண்டுகள் சீரும் சிறப்புடனும் உடல் உள சுகத்துடன் வாழ இறைவனை வேண்டி உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
லீ.யூட்சி, லீ.இவோண் (பிள்ளைகள்),
சகோதர சகோதரிகள், மச்சான்மார், மச்சாள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உறவினர், அயலவர், நண்பர்கள்.

இல.54, புனித யாகப்பர் வீதி,
ஊர்காவற்றுறை.

### சேவை நலன் பாராட்டு



**பொ. தெய்வேந்திரன்**
(தபாலதிபர் - சாவகச்சேரி)

யுத்த அனர்த்தத்தின் போது முற்றாகப் பாதிப்படைந்திருந்த சாவகச்சேரி தபாலகத்தை அனைத்து வசதிகளுடனும் நவீனமயமாக்கி தென்மராட்சி பிரதேச மக்களுக்கு அர்ப்பணிப்பான சேவைகளை வழங்கிய பெருமைக்குரிய அஞ்சல் அதிபர் பொ.தெய்வேந்திரன் அவர்கள் கடந்த 20.08.2011 அன்று தனது அறுபதாவது அகவையில் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார். இவர் நீண்டகாலமாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் உதவிச் செயலாளராகவும் வேறு பல சமூக சேவைகளிலும் அர்ப்பணிப்போடு தன்னலம் சாராப் பொதுச் சேவைகளைப் பாராட்டுவதுடன் இவர் தமது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புமாக நலமாக வாழ வாழ்த்துகின்றோம்.

சாவகச்சேரி அஞ்சலக ஆலோசனைச் சபை
அங்கத்தவர்கள்.

### 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 20 - 06 - 1975
இறப்பு 23 - 08 - 2000

**அமரர் சுப்பிரமணியம் இலங்கேஸ்வரன்**

பதினொரு வருடங்கள் ஓடி மறைந்தனவே
உன் நினைவும் இன்னும் மறையவில்லை
பதினொரு வருடங்கள் அல்ல எத்தனை
வருடங்கள் ஓடி மறைந்தாலும் உன் நினைவும்
என்றும் எம் நெஞ்சோடிருக்கும்

அதிகார் செல்லமுத்து வீதி,
மானிப்பாய்.

முகுந்தன் குடும்பத்தினர்,
தாயார் அன்னம்மா.

### Personal Class

தரம் 03 - A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class Spoken With Grammer கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு ஆசிரியையரை தொடர்பு கொள்ளவும். அனுமதி மட்டுப்படுத்தப்பட்டவை முந்தவும்.
தொடர்பு: சங்கிலியன் வீதி நல்லூர். 0778403730

### துயர் பகிர்கின்றோம

கரவெட்டி கமநல சேவை நிலைய பெரும்பாக அலுவலர் திருமதி விசாலாட்சியின் பாசமிகு கணவர்

**மாணிக்கம் தனபாலசிங்கம்**

ஜேர்மனியில் காலமானார்.
ஆழ்ந்த துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு கனத்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

விவசாய சம்மேளனம்,
DAD/10/15/18

### மரண அறிவித்தல்

**வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்**



சதுமலை தெற்கு, ஆனைக்கோட்டை மாரியம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (22.08.2011) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சரவணை ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், திருமதி அ.மனோன்மணியின் அன்புச் சகோதரனும், விமலா(பிரான்ஸ்), சகுந்தலா, கோகிலா(பிரான்ஸ்), காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வரட்ணம்(பிரான்ஸ்), நாகேந்திரன்(சந்திரன்), ஜெயபாலசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், காயத்திரி(பிரான்ஸ்), கஜேந்தினி(பிரான்ஸ்), கஸ்தூரி(பிரான்ஸ்), பிரியங்கா, பிரியதர்சினி, பிருந்தா, சுதர்சன்(பிரான்ஸ்), சதுரியன்(பிரான்ஸ்), சாத்வீகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற அம்பலவாணரின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2011) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.நாகேந்திரன்(சந்திரன்)
(மருமகன்)

மாரியம்மன் கோயிலடி,
சதுமலை தெற்கு, ஆனைக்கோட்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியத் தலைநகர் திரிபோலி கிளர்ச்சியாளர் வசம் வீழ்ந்தது

## கடாபியின் மகன் கைது

திரிபோலி, ஓக. 23

லிபிய ஜனாதிபதி மும்மர் கடாபிக்கு எதிரான கிளர்ச்சியாளர்களின் படைகள் நேற்றுத் தலைநகர் திரிபோலியின் மத்திய பகுதிக்குள் நுழைந்தன. தலைநகரின் பெரும் பகுதி கிளர்ச்சிப் படைகளின் கட்டுப்பாட்டில் வந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி கடாபியின் படைகளுக்கும் கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே தலைநகரைச் சூழ உக்கிர சண்டை நடைபெற்றது. முதல்நாள் இடம்பெற்ற மூர்க்கமான சண்டையை அடுத்து கிளர்ச்சிப்படைகள் திரிபோலியின் மத்திய பகுதிக்குள் நேற்று நுழைந்தன. இதனையடுத்து அரச எதிர்ப்பாளர்கள் கிறீன் சதுக்கத்தில் திரண்டார்கள். கொடிகளை அசைத்தும், வேட்டுகளைத் தீர்த்தும் கிளர்ச்சிப்படைகளை வரவேற்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இது குறித்துக் கருத்து வெளியிடுகையில், கடாபியின் ஆட்சி அஸ்தமன கட்டத்தை அண்மித்துவிட்டது எனத் தெரிவித்தார். லிபிய தலைவருக்கு இறுதி நேரம் நெருங்கிவிட்டது. அவர் வெளியேற வேண்டியதுதான் என பிரிட்டன் அறிவித்துள்ளது.

அதேவேளை, கிளர்ச்சியாளருக்கு எதிராகத் தொடர்ந்து போரிடுவேன் என சூளுரைத்து வந்த கடாபியின் புதல்வர் கேர்ணல் சைப் அல் - இஸ்லாமைத் தாங்கள் பிடித்துவிட்டதாகக் கிளர்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

கடாபியின் புதல்வர் அல் - இஸ்லாம் கைதுசெய்யப்பட்டுவிட்டார் எனத் தமக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என சர்வதேச குற்றவியல் நீதிமன்ற வழக்குத் தொடுநர் லூயிஸ் மொரினோ ஓகெம்போ தெரிவித்துள்ளார்.

சிவிலியன்களை சித்திரவதை செய்தல், படுகொலை புரிதல் ஆகிய செயல்களில் ஏற்கனவே சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் சைப் அல் - இஸ்லாமை குற்றவாளியாகத் தீர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, கேணல் கடாபியின் புதல்வர்களில் மற்றுமொருவரான முஹம்மத், தொலைபேசி வாயிலாக அல் - ஜஸீரா தொலைக்காட்சி நிறுவனத்துடன் தொடர்புகொண்டு தகவல் வெளியிட்டார்.

தனது வீட்டை கிளர்ச்சியாளர்கள் சூழ்ந்திருக்கிறார்கள் என அவர் தெரிவித்தார். இச்சமயம் வேட்டுச் சத்தங்கள் ஒலித்தன. அத்துடன், தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது என அல்-ஜசீரா குறிப்பிட்டது.

(மற்றொரு செய்தி 21 ஆம் பக்கத்தில்)

## மரண அறிவித்தல்கள்

### செல்வராசா ஜனகன்

(கணிதப்பிரிவு உயர்தர மாணவன்- யாழ். இந்துக் கல்லூரி)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா ஜனகன் நேற்று (22.08.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், சிவப்பிரியா, மகிழாயினி, அகிலாயினி, கௌசிகன் (மாணவன்- யா/ கனகரட்ணம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுதாகரன்(பிரான்ஸ்), மதிவதனன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தரங்கினி, மதுஷா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் பாலசுப்பிரமணியம், தியாகலிங்கம், சோதிலிங்கம், மகாலிங்கம், சாந்தா, உமாதேவி, ஆகியோரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரி, கோசலாதேவி, யோகாதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா, மணிவண்ணன் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2011) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணியளவில் அரியாலையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*40/1, கலைமகள் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னையா மன்மதராசா (ஆசாரி)



புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மன்மதராசா (ஆசாரி) (21.08.2011) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.08.2011) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரம்,
இறுப்பிட்டி றோட், புங்குடுதீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது Science Corner, Science Point கல்வி நிறுவன நிர்வாகி இ.இராகவனின் அன்புத் தந்தை

**செல்லையா இரத்தினகோபால்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு நாம் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



**Science Corner, Science Point**
**ஆசிரிய குழாம்.**

## மரண அறிவித்தல்

### முருகன் சின்னையா



நீர்வேலி மேற்கு, மாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் சின்னையா நேற்று (22.08.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன் -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், பரஞ்சோதியின் அன்புக் கணவரும் விஜியராணியின் தந்தையும் அருள் ரூபனின் (யோன்சன்) மாமனும் அனுஸ்ரா, டெல்சியா, ஜெனிஸ்ரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2011) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணிக்கு தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நீர்வேலி மேற்கு,
மாலை.

*தகவல்:*
அருள்ரூபன் (யோன்சன்- ஜேர்மனி)

## நீங்கா நினைவுகள்

### செல்வி மகேஸ்வரி பழனிப்பிள்ளை



**எமது பாடசாலையின் பழைய மாணவியும், முன்னாள் ஓய்வுபெற்ற ஆசிரியையுமான**



செல்வி மகேஸ்வரி பழனிப்பிள்ளை 22.08.2011 திங்கட்கிழமை அன்று காலமான செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்,
யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.

## தவறிவிட்டது

*முத்திரைச் சந்திக்கும் இருபாலைச் சந்திக்கும் இடையில் ரூ 45,400/= பணமும், இரண்டு சிறிய கணக்குப் புத்தகங்களும் தவறவிடப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.*

தொடர்புகளுக்கு- 0776043633

## கார் விற்பனைக்கு

19-xxxx NISSAN SUNNY (Super Saloon) மற்றும் 8sri xxxx VOLKS WAGON 1300

**கார்கள் விற்பனைக்குண்டு.**

தொடர்புகளுக்கு- 0774655773

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி பாலசிங்கம் சொர்ணம்மா

*(சரவணை கிழக்கு, வேலணை)*



வேலணை கமநல சேவைக் குழுத் தலைவர் பா. தவபாலன் அவர்களின் அன்புத் தாய் காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது கமநல அபிவிருத்தித் திணைக்கள சமூகம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கமநல அபிவிருத்தித் திணைக்கள சமூகம், யாழ்.மாவட்டம்.**

வேலைக்கு ஆட்கள் தேவை
Ms-Office, DTP,Web designing
போன்றவை தெரிந்திருப்பது விரும்பத்தக்கது.
1. Clerk
2. Instructor
Salary Negotiable
பழக விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம்.
O/L, A/L தகைமை விரும்பத்தக்கது.
MIS
Call Us: 0718474239

Galaxy Cabs
Call us 021- 3201201
35/= Per Km.

BIT University of Colombo
புதிய பிரிவு ஆரம்பமாகின்றது
Semester 1 28/08/2011 sunday at 9 am
100% gurantee for job & skill
Call Us: 0776577359
10 years of experience
தற்போது A/L பரீட்சைக்குத் தோற்றுவோரும் விண்ணப்பிக்கலாம்...
Semester 3 & 5 - October
By Mr R.Kumaran B.Sc (Computing & IS)
MIS
150 m

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.Vயும் Aramex இணைந்து நடத்தும்
உள்நாட்டு கடிதங்கள், பொதிகள் விநியோகம் செய்தல்.
கொழும்பு/யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு :
கொழும்பு:
மஹாராஜா Food Products
#18/3,Dr.E.A Cooray Mawatha,
Wellawatte.
T.P: 0112360926, 0112259849.
கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/- மட்டுமே..!
யாழ்ப்பாணம்:
G.T.V Enterprises (Pvt) Ltd.
#225, Kasthuriyar Road, Jaffna. T.P: 0212224338.
#272, K.K.S. Road, Jaffna. T.P:0212224825.

No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
CIMA-UK Engineering-USA BIT University of Colombo Multimedia_USA Visual Communication
Closing Date 24.08.2011
A/L 2011 மாணவர்களும் பதிவுசெய்யலாம்
Diploma Courses MsOffice, DTP, English, AutoCAD, Hardware, Accounting, Web Designing

MCS
Supported By UNDP/JRRP
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Kids Courses கணினி,சதுரங்கம், ஆங்கிலம்,Games
Government Schol
324, Palaly Road,Campus Junction,Jaffna.
Free Course fee: BCS-UK , IELTS / TOEFL, CISCO-CCNA , Hardware, ICDL

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org